ANGLO ASIAN MINI MART

513 High Road
Wembley,
Middx
Hao 4 ag
Tel: 0181-900 2451

தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள், மரக்கறி
வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
Pub.



Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

ஈழமுரசு பிரித்தானியா

Eelamurasu Weekly

முரசு: 6 | 30 மார்ச் – 05 ஏப்ரல் 2000 | முழக்கம்: 272



AYNGARAN VIDEO

உங்களுக்குத் தேவையான
ORIGINAL VIDEO, VCD, DVD, CD
மற்றும் தொலைக்காட்சி
நாடகங்கள், பிரபல மேடை
நிகழ்ச்சிகள், பட்டிமன்றங்கள்
விற்பனைக்கும் வாடகைக்கும்
பெற்றுக் கொள்ளலாம்.
(அனைத்தும் ORIGINAL பிரதிகள்)

80, Burlington Road
New Malden
SURREY KT3 4NU
Tel: 07939238296
Pub.


# ஆனையிறவு பெருந்தளம் சுற்றிவளைப்பு

## பரபரப்பில் கொழும்பு

(வன்னிச் செய்தியாளரும் – ஆசிரியபீடமும்)

*(27.03.00)*

சிறீலங்கா இராணுவத்தின் மிகப்பெரிய தளங்களில் ஒன்றான ஆனையிறவுத்தளம் தற்பொழுது விடுதலைப்புலிகளின் முழுமையான முற்றுகைக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. கடந்த வாரம், ஆனையிறவுத் தளத்தின் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதல் அச்சம் குறித்து சிறீலங்கா இராணுவப் புலனாய்வுத் துறை முப்படைகளையும் எச்சரித்த ஒருசில நாட்களில் விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள்—3 இராணுவ நடவடிக்கை மீண்டும் யாழ். குடாநாட்டின் கழுத்துப்பகுதியில் முழுவீச்சுக் கொண்டு சுழன்றடித்துவருகின்றது.



இச்செய்தி எழுதப்படும் வரை எமக்குக் கிடைத்த செய்திகளின்படி ஆனையிறவுப் பெருந்தளத்தின் கவசங்களான தாளையடி, செம்பியன்பற்று, மருதங்கேணி ஆகிய முகாம்கள் விடுதலைப்புலிகளின் ஏககால கடல் - தரை மார்க்கத் தாக்குதல்களில் பாரிய இழப்பினை சந்தித்துள்ளன. நேற்றிரவு ஒன்பது மணியளவிலேயே விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டு இச் செய்தி எழுதப்படும் வரை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

நடைபெற்றுவரும் இத் தாக்குதல்களின்போது ஆனையிறவுத் தளத்தின் வடபுறமாக அமைந்திருக்கும் இயக்கச்சி ஆட்டிலெறித் தளமும் விடுதலைப் புலிகளின் முற்றுகைத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. இதுஒருபுறமிருக்க, விடுதலைப் புலிகளின் விசேட அதிரடித் தாக்குதல் அணியினர் ஆனையிறவுப் பெருந்தளத்தின் பிரதான விநியோகப் பாதையான ஏ-9 (கண்டிவீதி) நெடுஞ்சாலையை பளைப்பகுதியில் துண்டித்ததுடன் அப்பகுதியை தொடர்ந்தும் தக்கவைத்துக் கொண்டுள்ளனர்.

(☞ 2ம் பக்கம்)

## ஐ.நா. மனித உரிமை மீறல்கள் கூட்டத்தொடரில் வைகோ

*(27.03.00)*

ஐ.நாவின் 56வது கூட்டத்தொடரில் கலந்துகொள்ள இந்தியாவில் இருந்து மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலர் வைகோ ஜெனிவாவிற்கு வருகைதரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 03.04.2000 திங்களன்று ஜெனிவாவிலுள்ள ஐ.நா. சபை முன்றலில் நடைபெறவுள்ள ஈழத்தமிழர்களின் ஐ.நா

(☞ 2ம் பக்கம்)

# யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகள் கைப்பற்றுவார்கள்

– அன்ரன் பாலசிங்கம் –

*(27.03.00)*

விடுதலைப்புலிகள் யாழ். குடாவிற்கான பாதைகளை திறப்பதற்கு பெரும் பிரயத்தனம் செய்துவருகின்றார்கள். தமிழீழத்தின் கலாச்சார தலைநகரான யாழ்ப்பாணத்தை அடைவதே விடுதலைப்புலிகளின் இலக்காகும்.

எமது மக்கள் தமக்கு உரித்தான உரிமைகளோடும், சுதந்திரங்களோடும், கௌரவமாக சாதாரண மனிதப் பிறவிகளாக வாழ விரும்புகிறார்கள். அவர்கள், தமது சொந்த வீடுகளில் சுதந்திரக் காற்றை சுவாசிக்க விரும்புகிறார்கள். தமது சொந்த மண்ணில் சுதந்திரமாக நடமாட விரும்புகிறார்கள். தமது சொந்த நிலங்களில் விவசாயம் செய்தும், சொந்தக் கடல்களில் மீன் பிடித்தும், பயமின்றி, தடைகளின்றி, நெருக்குவாரங்களின்றி கௌரவமாக உழைத்து வாழவே விரும்புகிறார்கள்.

தமிழ் மக்கள் மீது ஒரு கூட்

(☞ 2ம் பக்கம்)

## பிந்திய செய்தி!!

# கடற்படைக்கலம் சுற்றிவளைப்பு

*(28.03.00)*

வன்னியில் இருந்து எமக்குக் கிடைத்த பிந்திய செய்திகளின்படி பளைப்பகுதியில் இராணுவத்தின் பிரதான விநியோகப் பாதையை கைப்பற்றிய விடுதலைப் புலிகள் தற்பொழுது பச்சிலைப்பள்ளி, சோரன்பற்று ஆகிய இடங்களில் உள்ள இராணுவ நிலைகள் மீது கடுமையான தாக்குதலை மேற்கொண்டு வருவதாகவும், அதேவேளை, கடற்புலிகள் சிறீலங்கா கடற்படையின் பாரிய கடற்கலம் ஒன்றை சுற்றிவளைத்து வடம

(☞ 2ம் பக்கம்)


தமிழினி

TAMILINI Cash and Carry

195-197 The Broadway, Southall
Middx Ub1 1LZ

பல்பொருள் அங்காடி

Tel: 0181-606 9900 Fax: 0181-813 8269

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Rédacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE
27 BERNAY, FRANCE.

நிர்வாகி: ப. வேலுப்பிள்ளை
நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்
ஆசிரியர்: பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி: Leama
Tel: 0208 2053650
Fax: 0208 2053651

டென்மார்க்: T. சுரேஸ்காந்த்
Møller vcj - 23
5800 Nyborg, Denmark.
Tel: 65316155 - Fax: 65302588

சுவிஸ்: தபாற்தொடர்பு
EELA MURASU
Postfach 238, 4313 Möhlin,
Swiss.
Natel: 079 635 02 16

லண்டன்:
தபாற்தொடர்பு
EELAMURASU
5, Saxony Parade,
Hayes, UB3 2TQ.
Fax/Tel: 0181-56 16 877
ஜெயந்தன்: - Tel: 0956908145
ஹரி - Tel: 07887874177
பாஸ்கரன் - Tel: 0181-7698302

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
`EELAMURASU'
P.O Box S-109
Homebush South
N.S.W 2140, Australia.
E-Mail:tccsydney@one.net.au

குறிப்பு:
இவ் இதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## பெருந்தளம்...

பளைப் பகுதியில் நடந்த பாரிய சமரில் சிறீலங்கா இராணுவத்தின் 11 ஆட்டிலெறி சுடுகலன்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அப்பகுதியில் அமைந்திருந்த ஆயுதக்களஞ்சியமும் விடுதலைப் புலிகளின் தாக்குதலால் வெடித்துச் சிதறியுள்ளன. பளைப்பகுதியில் நடந்த சமரில் சில ஆட்டிலெறி சுடுகலன்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்ற போதிலும் அச் செய்திகளை இதுவரை உறுதிப்படுத்த முடியவில்லை. மிகப் பிந்திக் கிடைத்த களச்செய்திகளின்படி இயக்கச்சிப் படைத்தளத்தினை விடுதலைப் புலிகள் மிக உக்கிரமாகத் தாக்கி வருவதாகவும், புலிகளினால் ஏவப்படும் ஆட்டிலெறி குண்டுகளும், மோட்டார் குண்டுகளும் இயக்கச்சிப் படைத்தளத்தில் வீழ்ந்து வெடிப்பதாகத் தெரியவருகிறது. இதுவரை எமக்குக் கிடைத்த இராணுவ இழப்புக்களின் விபரப்படி 150 சிறீலங்கா சிப்பாய்களுக்கும் மேல் கொல்லப்பட்டதாகவும் 500ற்கும் மேல் காயப்படுத்தப்பட்டதாகவும் தெரியவருகிறது.

ஆனையிறவுத் தளத்திற்கும் பலாலித் தளத்திற்கும் இடையிலான தரைவழிப்பாதை விடுதலைப் புலிகளால் துண்டாடப்பட்டிருப்பதால் இறந்த அல்லது காயமடைந்த சிப்பாய்களை படையினர் அப்புறப்படுத்த முடியாத நிலையில் இருப்பதாகவும் தெரியவருகிறது. விடுதலைப் புலிகளின் உக்கிரமான சமரையடுத்து, ஆனையிறவு தளத்திற்கான ஒரேயொரு தொடர்பான வான் மார்கப்போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது.

தற்பொழுது ஆனையிறவுப் படைத்தளம் விடுதலைப் புலிகளின் முழுமையான முற்றுகைக்குள் வந்திருப்பதால் கொழும்பு அரசியல் - இராணுவ வட்டாரங்களில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இராணுவ உயரதிகாரிகள் இராணுவத் தலைமையலுவலகத்தில் இருந்து அலரி மாளிக்கைக்கு அழைக்கப்பட்டு சந்திரிகாவினால் களநிலை பற்றி கேட்டறியப்பட்டுள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன் செய்தித் தணிக்கையை கடுமையாக அமுல்ப்படுத்துமாறும் சந்திரிகாவினால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## ஐ.நா.படை...

நோக்கிய மாபெரும் பேரணியின் முடிவில் வைகோ கலந்துகொண்டு உரையாற்றுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# அம்பன் முகாமைவிட்டு சிப்பாய்கள் ஓட்டம்

(27.03.00)

யாழ்.குடாவின் தென்கிழக்கு கரையோரப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகள் மாமுனை, தாளையடி இராணுவ நிலைகள் மீது மேற்கொண்ட தாக்குதலையடுத்து அம்பன் பகுதியில் உள்ள தமது முகாமினை கைவிட்டுவிட்டு சிறீலங்கா சிப்பாய்கள் ஓடியுள்ளனர். மாமுனை தாளையடி ஆகிய முகாம்கள் மீது நெல்லியான் பகுதியில் இருந்து வந்த விடுதலைப் புலிகளின் அணிகள் தாக்குதல் நடாத்தியதாகத் தெரியவருகிறது. இத் தாக்குதல் நடாத்தப்பட்டவேளை, நாகர்கோவில் பகுதியில் உள்ள சிறீலங்கா முன்னரங்க காவல் நிலைகளும் விடுதலைப் புலிகளினால் தாக்கியழிக்கப்பட்டுள்ளன.

# பருத்தித்துறை – மருதங்கேணி இராணுவ மதகுகள் தகர்ப்பு

(27.03.00)

பருத்தித்துறை - மருதங்கேணி வீதி தற்பொழுது சிறீலங்கா படையினர் முன்னேற முடியாதவாறு விடுதலைப் புலிகளினால் துண்டிக்கப்பட்டுள்ளது. இராணுவத்தினரால் இவ்வீதியில் சீர்செய்யப்பட்ட மூன்று சிறிய மதகுகளும் விடுதலைப் புலிகளினால் தகர்க்கப்பட்டுள்ளதாக வடமராட்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன. இம்மதகுகள் குடாரப்பு, புன்னையடி, மாமுனை ஆகிய பகுதிகளில் அமைந்திருந்ததாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை, செம்பியன் பற்று கடலிலும் விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்காப் படையினருக்கும் இடையே மோதல் நடைபெற்றுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## யாழ்ப்பாணத்தை...

டுத் தண்டனையாக விதிக்கப்பட்டிருக்கும் இந்த ஒடுக்கு முறைகளும் நெருக்குவாரங்களும் உடன் நீக்கப்படவேண்டும். தமிழ் மக்களும் அதனையே விரும்புகிறார்கள். பொதிகளும், பெட்டகங்களிலும், ஒப்பந்தங்களிலும், அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தங்களிலும் அவர்களுக்கு பெரிதாக அக்கறையில்லை. இந்தச் சட்டங்கள் அரசியல் யாப்பின் கட்டுக்கோப்பை மாற்றியமைக்குமே தவிர, தமிழரின் நாளாந்த வாழ்க்கையின் கொடூரமான யதார்த்தத்தை பிரதிபலிக்கவில்லை என விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் இலண்டனில் இருந்து வெளிவரும் 'தமிழ் கார்டியன்' எனும் ஆங்கில இதழுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார். இதுபற்றிய முழு விபரங்களும் உள்ளே உள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)
## கடற்படைக்...

ராட்சி கரையோரத்திற்கு அப்பால் தாக்குதலை நடாத்துவதாகவும் தெரியவருகிறது. இக்கடற்படைக்கலம் சிறீலங்கா இராணுவத்தினரை தரையிறக்குவதற்காக ஏற்றி வந்ததா அல்லது யுத்தக்கலமா என்பது குறித்து உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை. விடுதலைப் புலிகளால் பளைப் பகுதியில் அழிக்கப்பட்ட ஆட்லெறி சுடுகலன்களுள் 130மி.மி, 152 மி.மி, 122 மி.மி. ஆகிய எறிகணைச் செலுத்திகளும் அடங்கியிருந்ததாகவும் இன்று காலையில் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

## 31ம் நாள் நினைவு வணக்கமும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பிதழும்



## அமரர் கண்மணி பாலச்சந்திரன்

**அன்பின் உறைவிடமாய்**
**அறிவின் புகலிடமாய்**
**அன்புத்துணைவியாய்**
**பாசமுள்ள அன்னையாய்**
**எம்மை நல்வழிப்படுத்தி**
**நற்குணமுடன் வாழவைத்த தெய்வமே**
**ஒரு திங்கள் சென்றாலும் எம்முடன் வாழ்ந்து**
**கொண்டிருக்கும்**
**உங்கள் நினைவுகள் என்றென்றும்**
**சுடர் விட்டுப் பிரகாசிக்கும்.**
**தங்கள் ஆத்மா சாந்தியடைய**
**எல்லாம் வல்ல இறைவனின் பாத மலர்களை பணிந்து**
**வேண்டுகிறோம்.**

அமரர் கண்மணி பாலச்சந்திரன் அவர்களின் ஆத்மசாந்திக்கான அந்தியேட்டிக் கிரியை எதிர்வரும் 02.04.2000 ஞாயிற்றுக் கிழமை 12.00 மணிக்கு, Salle de Paroisse de Malley Rue reonze 2, 1020 Renens இல் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இத்தகவலை, உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்
பாலச்சந்திரன் குடும்பத்தினர் (மட்டு நகர். ஐயா)
தொலைபேசி: 021/6360845

Pub.

ERRANCES TRAVELS

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

à partir de

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,900 Frs. |
| Singapour | - | 3,980 Frs. |
| Madras | - | 4,300 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 075 95 01 37

(ADV)

# ஆலயம், பாடசாலைப் பகுதிகளுக்குள் விமானப் படைத்தளம்! - எதிர்த்து மக்கள் போராட்டம்

(26.03.00)

மட்டக்களப்பின் பிரசித்தி பெற்ற புதுநகர் சித்திவிநாயகர் ஆலயம், புதுநகர் விக்னேஸ்வரா வித்தியாலயம், ஆலையடிச் சோலை மயானம் அமைந்துள்ள பகுதிகளுக்குள் பொதுமக்கள் பிரவேசிப்பதற்கு சிறீலங்கா விமானப்படையினர் தடைவிதித்துள்ளனர். விமானப்படைத் தளத்தினை விரிவுபடுத்துவதற்காகவே படையினர் இத் தடையுத்தரவினை அறிவித்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் சித்திவிநாயகர் ஆலையத்திற்குச் சென்ற விமானப்படையினர் ஆலயப் பூசகர்களையும், பரிபாலன சபையினரையும் குறிப்பிட்ட நேரத்திற்குள் வெளியேறுமாறு உத்தரவிட்டனர். இதுபற்றிப் படைத் தளபதிகளுடன் கதைத்தபோது, இந்த ஆலயத்திற்கு பதிலாக வேறொரு இடத்தில் ஆலயத்தை அமைக்குமாறும் கூறியுள்ளனர்.

மட்டக்களப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம், புதுநகர், வீச்சுக்கல்முனை சேத்துக்குடா, திமிலைதீவு, வவுணதீவு ஆகிய கிராமத்திலுள்ள மாணவர்களுக்கு இருக்கும் ஒரேயொரு உயர்தரப்பாடசாலையாகும். இப் பாடசாலையில் சுமார் ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்றுவருகின்றனர். பாடசாலையை உடனடியாக வேறு இடத்திற்கு மாற்றுமாறு விமானப்படையினர் உத்தரவிட்டிருப்பதால் இந்த மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

விமானப்படைத் தளத்தை விஸ்தரிப்பதற்காகவே இப்பகுதியில் உள்ள ஆலயம், பாடசாலை, மயானம் ஆகியவற்றை படையினர் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளனர். விமானப் படைத்தள விஸ்தரிப்பிற்காக ஆலயத்தின், பாடசாலையின் கட்டங்கள் இடித்து தரைமட்டமாக்கப்படலாம் எனவும் பொதுமக்கள் அச்சம் கொண்டுள்ளனர். விமானப்படையினரின் இச்செயல் இந்துக்களின் மதஉரிமையைப் பறிப்பதுடன் தமிழ்மாணவர்களின் கல்வியையும் பாழடிக்கும் செயலெனஇப் பகுதி மக்கள் கண்டனம் தெரிவித்து கடந்த வியாழனன்று மண்முனை வடக்குப் பிரதேச செயலகத்திற்கு முன்னால் மறியல் போராட்டம் ஒன்றை நாடத்தியுள்ளனர். ஆலயப் பரிபாலனசபையினர், இந்து மன்றங்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பல நூற்றுக்கணக்கானோர் சிறீலங்கா விமானப்படையினரின் இந்நடவடிக்கைக்கு எதிராக இந்த மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டனர். காலை 8மணிக்கு ஆரம்பமான மறியல் போராட்டம் மாலைவரை நீடித்தது.

இப்போராட்டத்தில் மக்கள் பல்வேறு சுலோகங்களையும் தாங்கியவாறு விமானப்படையினருக்கு எதிராகக் கோசங்களை எழுப்பியவாறு காணப்பட்டனர்.

## போசாக்கின்மை, மலேரியா 10 பேர் மரணம்

(26.03.00)

சிறீலங்கா அரசு வன்னி மக்கள் மீது மேற்கொண்டுவரும் உணவு மருந்துத் தடையால் மக்தள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். முல்லைத்தீவு வைத்தியசாலையில் கடந்த வாரம் போசாக்கு இன்மையினாலும், மலேரியா நோயினாலும் பத்துப் பேர் இறந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. போதியளவு மருந்துப்பொருட்கள் இன்மையாலும், போசாக்குள்ள உணவுப் பொருட்கள், வைத்தியர்கள் பற்றாக்குறையினாலும் நோயாளிகள் பெருளவில் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என மேலும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த சில நாட்களாக மலேரியா மிக வேகமாகப் பரவிவருவதாகவும் இதனால் பலர் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் முறையான வைத்திய வசதிகள் இல்லாததால் கடந்த வாரத்தில் பத்துப்பேர் பலியாகி உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பலர் இந் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் கூறுகின்றன. அத்துடன் வன்னிப் பகுதியில் போசாக்குக் காரணமாக பல சிறார்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என வைத்தியசாலை செய்திகள் தெரிவிக்கின்றன.

## கோழிக்கூண்டு மக்கள் போராட்டம்

(26.03.00)

வவுனியா - கோழிக்கூண்டு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிற மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் தம்மை சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதிக்குமாறு கோரி கடந்த திங்களன்று வவுனியா மாவட்டச் செயலகம் முன்பாக மறியல் போராட்டம் ஒன்றை நடத்தினர். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் காலை 8 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை இந்த மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். மறியல் போராட்டத்தின் இறுதியில் செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழுவினர் மற்றும் அரசாங்க அதிபர் ஆகியோருக்கு விலாசமிடப்பட்ட மகஜர்கள் மேலதிக அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டன. கையளிக்கபட்ட அம் மகஜரில், உறவினர்களைப் பார்வையிடுவதற்காக வவுனியா வந்த நாங்கள் கோழிக்கூண்டு முகாமில் பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளோம். முகாமில் விரைவாகப் பரவி வரும் அம்மை, சிரங்கு, முதலிய தொற்றுநோய்கள் எமக்குப் பெரும் நெருக்கடியைத் தந்துள்ளன எனக் குறிப்பிட்டுள்ளனர்.

## ராசிக்குழு துப்பாக்கிச் சூடு! ஒருவர் படுகாயம்

(26.03.00)

மட்டு. ஏறாவூர்- தளவாயில் கடந்த செவ்வாயன்று சிறீலங்காப் படையினரின் கூலிக்குழுவான ராசிக்குழு மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கேமனோகரன்(21) என்ற இளைஞன் படுகாயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வீட்டிலிருந்து மீன்பிடிப்பதற்காக கடலுக்குச் சென்று கொண்டிருந்தபோது ராசீக் குழுவினர் தன்னை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் அதனாலேயே தான் காயமடைந்ததாகவும் மேற்படி இளைஞன் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினருடன் இணைந்து தேடுதல் நடத்தும் இக்கூலிக்குழுவைச் சேர்ந்தவர்கள் தமிழ் மக்களின் மீது தாக்குதலைகளை நடத்திவருவது தெரிந்ததே.

## மிதிவெடியில் காலை இழந்த சிறுவன்

(26.03.00)

பாலம்பிட்டியில் மிதிவெடியில் சிக்கி ஜெகனாதி ஜெகன்(14) என்ற சிறுவன் தனது காலை இழந்துள்ளார். இரணை இலுப்பைக்குளத்தைச் சொந்த இடமாகக் கொண்ட இச் சிறுவன், தனது மாமாவுடன் பாலம்பிட்டியில் தங்கியிருந்ததார். உணவு வசதியற்ற நிலையில் காட்டில் தேன் எடுப்பதற்காக இன்னுமொருவருடன் சென்றபோதே இந்த அனர்த்தம் இவருக்கு ஏற்பட்டுள்ளது. பலத்த காயங்களுடன் மடு வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு, பின்னர், அங்கிருந்து மேலதிக அவசர சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். இரண்டு கால்களிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ள இவருக்கு உடனடியாக சத்திர சிகிச்சை செய்யப்பட்டு வலது கால் முழங்காலுக்குக் கீழ் அகற்றப்பட்டுள்ளது. இடது காலிலும் கடுமையான காயம் ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## காணாமல் போனவர்கள் நினைவாகத் தூபி

(26.03.00)

மட்டு. வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழகத்தில் வைத்து சிறீலங்கா படையினரால் கைது செய்து கொண்டுசெல்லப்பட்டு காணாமல்போன 158 தமிழ் மக்களின் நினைவாக, தூபி ஒன்றை அமைக்க அவர்களது பெற்றோர்களும், உறவினர்களும் முடிவு செய்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. 1990ம் ஆண்டு கிழக்குப் பல்கலைக் கழகத்தில் தஞ்சமடைந்திருந்த பொதுமக்களில் 158 பேர் 90ம் ஆண்டு நவம்பர் மாதம் 5ம் திகதியும், 23ம் திகதியும் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்புகளின்போது சிறிலங்கா படையினரால் கைது செய்யப்பட்டு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இதுவரை அவர்கள் பற்றிய எந்தவொரு தகவலும் படையினரால் தெரிவிக்கப்படவில்லை.

பலவழிகளிலும் . முயன்றும் பயனளிக்காத நிலையில் அவர்கள் படையினரால் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்றே நம்பப்படுகிறது. இந்நிலையில் இவர்களை நினைவு கூரும் விதத்தில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து இத்தூபியை அமைக்கத் திட்டமிட்டுள்ளனர்.

## பற்றைகளை வெட்டாவிட்டால் மீன்பிடிக்க முடியாது படையினர் எச்சரிக்கை

(26.03.00)

யாழ். வடமராட்சி கிழக்கில் உள்ள சுப்பர்மடம், தற்கோட்டை பகுதி மீனவர்களை நேற்று முன்தினம் சிறீலங்கா படையினர் முகாமுக்கு அழைத்து, வீதியோரங்களில் உள்ள மரங்களையும், படைமுகாமை அண்டிய பகுதியில் உள்ள பற்றைக்காடுகளை வெட்டித் துப்பரவு செய்யுமாறு உத்தரவிட்டுள்ளனர். இத் துப்பரவாக்கும் வேலைகளில் மீனவர்கள் அனைவரும் பங்குகொள்ள வேண்டுமென, சுப்பர்மடம், தற்கோட்டை பகுதி மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் படையினர் அறிவித்திருந்தனர். இதில் ஈடுபட மறுப்பவர்களின் பெயர்களைத் தருமாறும் அவர்களது மீன்பிடி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்படும் என்றும் படையினர் எச்சரித்துள்ளனர். இதனையடுத்து தமது அன்றாட வருமானத்தை இழக்க முடியாத நிலையில் மீனவர்கள் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை இந்த வேலைகளில் ஈடுபட்டனர்.

## ஏழுமாதக் குழந்தையுடன் தாய் கைது

(26.03.00)

மட்டு. களுவாஞ்சிக்குடியில் ஏழுமாதக் குழந்தையுடன் தாயொருவர் கடந்த செவ்வாயன்று சிறீலங்கா குற்றப்புலனாய்வுப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். கண்டியிலிருந்து வந்த குற்றப்புலனாய்வுப் பொலிசாரே களுவாஞ்சிக்குடி தியேட்டர் வீதியில் வசிக்கும் சுகந்தி நரேந்திரன்(30) என்பவரை கைதுசெய்து அவரது குழந்தையுடன் விசாரணைகளுக்காக கண்டிக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

இதேவேளை இவரது கணவரையும் விசாரணைக்காக கண்டிக்கு வருமாறு சிறீலங்கா குற்றப்புலனாய்வுப் பிரிவினர் உத்தரவிட்டுள்ளனர்.

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்

**தமிழ் அச்சகம்**

(மக்கள் கடை அருகில்)

இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500–க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.

அனைத்து அச்சு வேலைகளும் குறித்த தவணையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.

திங்கள் முதல் - சனி வரை 09.00 – 22.00 மணி வரை

59, Rue Louis Blanc, 75010 Paris - Tel&Fax: 01 42 09 60 64 ou 06 13 12 35 42

அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு!
திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்த தின விழா அழைப்பிதழ், முதன் நன்மை அழைப்பிதழ், கேக் பெட்டிகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். அழைப்பிதழ் மாதிரித்தாள் தெரிவிற்காக இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

24 மணி நேரத்தில் உங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தும் Print செய்து கொடுக்கப்படும்

# புளொட் உறுப்பினர் சுட்டுக்கொலை

(26.03.00)

மட்டு. கொம்மாதுறையில் புளொட் குழுவைச் சேர்ந்த ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். நடராசா வேலன்(19) எனும் இவர் புளொட்குழுவுடன் இணைந்து இயங்கியவர் என்றும் பின்னர் புளொட் குழுவை விட்டு விலகி சிறீலங்கா இராணுவத்தினருடன் இணைந்து, பல்வேறு காட்டிக் கொடுக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றிரவு கொம்மாதுறையில் இவரை சுட்டுக்கொன்ற இனந்தெரியாத நபர்கள், இவரது உடலுக்கு அருகில் மாற்றியக்கத்துடன் இணைந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு துரோகம் இழைப்பவர்களுக்கு மரணதண்டனை வழங்கப்படும் என்ற துண்டுப்பிரசுரம் ஒன்றையும் வைத்துச் சென்றுள்ளனர்.

## படையில் இணைய பிள்ளைகளை தூண்டுங்கள் இராணுவத் தளபதி கோரிக்கை

(20.03.00)

படையில் இணைந்துகொள்வதற்கு தங்களது பிள்ளைகளை தூண்டுமாறு சிறீலங்காவின் இராணுவத்தளபதி கோரிக்கை விடுத்துள்ளார். விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் படையினருக்கு பெரும் ஆட்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. புலிகளை தோற்கடித்து நாட்டையும் இனத்தையும் காப்பாற்றுவதற்கு அனைத்து பெற்றோர்களும் தங்களது பிள்ளைகளை படையில் இணையவைக்க முன்வருவதுடன் அவர்களை ஊக்குவித்து படையில் இணைய வைக்கவேண்டும் என இராணுவத் தளபதி சிறீலால் வீரசூரிய சிங்கள பொது மக்களிடம் விடுத்துள்ள கோரிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பெற்றோர்கள் தமது பிள்ளைகளை படைக்கு அனுப்புமாறு கோரும் துண்டுப் பிரசுரம் ஒன்று ஏற்கனவே சிங்கள மக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மீட்கப்பட்ட பகுதிகளில் அன்னை பூபதி நினைவு

அன்னை பூபதியின் 12-வது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் நேற்று மீட்கப்பட்ட வன்னி, முல்லைத்தீவு, மட்டக்களப்புப் பகுதிகளில் உணர்வுபூர்வமாக நினைவு கூரப்பட்டு வருகின்றது. முக்கிய சந்திகளில் பந்தல்கள் அமைக்கப்பட்டு அன்னை பூபதி திருவுருவப்படங்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன. வீதிகளின் இரு புறங்களிலும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்ததுடன் அன்னை பூபதியின் நினைவு வணக்கக் கூட்டங்களும் இடம்பெற்றன. இந் நிகழ்வுகளில் பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இதேவேளை, அன்னை பூபதியின் நினைவு தினத்தில் மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தலாம் எனக் கருதி சிறீலங்கா படையினர் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளதுடன் சோதனைகளையும் அதிகரித்துள்ளதாக மட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# மீண்டும் செம்மணி விசாரணைகள்

(27.03.00)

செம்மணி புதைகுழி விசாரணைகள் மீண்டும் நாளை நடைபெறவுள்ளன எனத்தெரிவிக்கப்படுகிறது. இதற்காக வெலிக்கடைச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நான்கு படையினரும் ஒரு பொலிசாரும் நாளை யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.

செம்மணிப்புதைகுழி தொடர்பான வழக்கு நாளை யாழ். மேலதிக நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளன. செம்மணி விவகாரம் தொடர்பான சந்தேக நபர்களில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரைக் கைது செய்வதற்கு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தபோதும் அவரை நேற்றுவரை கைது செய்யமுடியவில்லை என சிறீலங்கா பொலிசார் தெரிவித்தள்ளனர்.

# தேர்தல் சீர்திருத்தத்துடன் பா. உ. தொகை உயருமாம்!

அடுத்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்றத்தேர்தல் நடைமுறையில் பல மாற்றங்களைக்கொண்டுவர சிறீலங்கா அரசு திட்டமிட்டு வருகிறது. தற்பொழுதுள்ள விகிதாசார தேர்தல் முறைக்குப் பதிலாக முன்னரைப் போல தேர்தல் தொகுதிவாரியான தேர்தல் முறையையும் மாவட்ட ரீதியான விகிதாசார தேர்தல் முறையையும் நடைமுறைப்படுத்தும் விதமாக புதிய தேர்தல் நடைமுறை அமையுமெனத் தெரியவருகிறது. தற்பொழுது 225 ஆசனங்களைக்கொண்ட சிறீலங்காப் பாராளுமன்றத்தின் உறுப்பினர்களின்தொகை இதன் காரணமாக 260 ஆக அதிகரிக்கவும் அரசு திட்டமிட்டுள்ளது. தொகுதிவாரியாக 160 பேரும், மாவட்ட விகிதாசார தேர்தல் முறைப்படி 80 பேரும் பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்படும் அதேவேளை, எஞ்சிய 20 பேர் தேசியப் பட்டியல் மூலம் நியமிக்கப்படுவார்கள் எனவும் அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. பெரும்பாலும் எதிர் வரும் மே மாதத்திற்கு முன்னர் உத்தேசிக்கப்பட்ட தேர்தல் சீர்திருத்தச் சட்டமூலத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

# புதுயுகத்தை எமதாக்குவோம்



இப்புதுயுகம் எமக்குச் சொந்தமானது. அநீதியையும் அடக்கு முறையையும் எதிர்த்து நீதிக்கும் சுதந்திரத்திற்குமாக போராடிய மக்களுக்குச் சொந்தமானது. இப்புதுயுகத்தில் எமது மக்களின் நெடுங்காலக் கனவு நிறைவுபெறும். இத்தனை காலமும் எமது மக்களைப் பீடித்த துன்பமும் துயரமும் அகன்று எமது மக்களுக்கு விடிவு பிறக்கும். எமது மண்ணுக்கு விடுதலை கிட்டும். எந்த இலட்சியத்திற்காக எமது மாவீரர்கள் போராடி மடிந்தார்களோ அந்தப் புனித இலட்சியம் இப்புதுயுகத்தில் நிறைவுபெறும்.

*தமிழீழத் தேசியத் தலைவர்*
*மேதகு வே. பிரபாகரன் அவர்கள்*

## *அன்பார்ந்த பிரித்தானியா வாழ் தமிழீழ மக்களே!*

முழு உலகையுமே வியப்பில் ஆழ்த்திய ஓயாத அலைகள் 3ன் மாபெரும் இராணுவ வெற்றியின் சிகரத்தில் நின்றவாறு நாம் இந்தப் புதிய யுகத்தில் காலடி எடுத்து வைத்துள்ளோம். முழுப்பலத்தையும் ஒன்று குவித்து பலமாதங்களாக தொடர் சமர்களையும் பெரும் படையெடுப்புக்களையும் நடாத்தி ஆயிரக் கணக்கில் உயிர்ப்பலி கொடுத்து சிங்களப் படைகள் ஆக்கிரமித்து வைத்திருந்த வன்னி மண்ணை, எமது போராளிகள் சில நாட்களில் கடுகதி வேகத்தில் மீட்டெடுத்து போரியல் வரலாற்றில் இமாலய சாதனையைப் படைத்துள்ளனர். இம் மண்மீட்புச் சாதனையானது எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை புதிய பரிமாணத்திற்கு இட்டுச் சென்றதுடன் தமிழீழத்திலும், புலம்பெயர்ந்த நாடுகளிலும் பேரெழுச்சியையும் புதிய நம்பிக்கையையும் எமது மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

அதேவேளை இப்புதுயுகத்தில் எமக்கான கடமைகளும் பொறுப்புக்களும் விரிந்து கிடப்பதனால் மிக விழிப்புடனும் விவேகத்துடனும் நாம் செயற்பட வேண்டியவர்களாக உள்ளோம். மீட்கப்பட்ட வன்னிப் பெருநிலப்பரப்பில் மீளக்குடியமர்ந்து கொண்டிருக்கும் எமது மக்களின் அடிப்படை வாழ்வுக்கான உணவு, உடை, உறையுள், சுகாதாரம் போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் பெருமளவிலும் வேகமாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் எதிரி இப்பிரதேசங்களை மீள ஆக்கிரமிக்காத வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்திக்கொண்டு பொருண்மிய, சமூகக் கட்டுமானங்களை இயன்றவரை முன்னெடுக்கும் பணிகளும் துரிதமாக நடைபெற்று வருகின்றன. தாயகத்தில் 'இப்புதுயுகம் எமக்கானது' என்ற உணர்வோடு எமது போராளிகளும் எமது மக்களும் மேற்குறிப்பிட்ட பணிகளில் வேகமாகவும் உற்சாகமாகவும் ஈடுபட்டு வருகின்றனர். இத்தகைய சூழலில் எம் மக்களுக்குப் பலமாகச் செயற்படும் பொறுப்பு, புலம்பெயர்ந்து வாழும் ஒவ்வொரு தமிழீழ மக்களதும் தேசியக் கடமையாகும். பிரித்தானியா வாழ் தமிழீழ மக்களும் தங்களை இப்பணியில் முழுமையாக இணைத்துக் கொள்வது இன்றைய காலத்தின் தேவையுமாகும்.

## *எமதினிய மக்களே!*

இப்பின்னணியில் உங்களுடன் மனந்திறந்த கலந்துரையாடல் ஒன்றை நாம் மேற்கொள்ள விரும்புகின்றோம். இதன் முதற்கட்டமாக எதிர்வரும் 01.04.2000 முதல் 21.05.2000 வரையான காலப்பகுதியில் எமது செயற்பாட்டுப் பிரதிநிதிகள் தங்கள் இல்லங்களுக்கு வருகை தருவார்கள். அவர்களுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கி, தாயக மேம்பாட்டுக்காக எம்முடன் இணைந்து பணியாற்ற முன்வருமாறு அன்புடனும், உரிமையுடனும் கேட்டுக்கொள்கின்றோம்.

**புத்தெழுச்சியுடன் செயற்படுவோம்; புதுயுகத்தை எமதாக்குவோம்.**

ஐக்கிய தமிழர் அமைப்பு (UTO), Eelam House, 202 Long Llane. London SE1 4QB.
Tel: 020 7403 4554, Fax: 020 7403 1653

# அன்னை பூபதி நினைவு கவிதைப்போட்டி

இவ்வருடத்திற்கான அன்னை பூபதி நினைவுக் கவிதைப் போட்டிகளை நடாத்த தமிழீழ விடுதலைப் புலிகளின் ஜேர்மனிப்பணியக கலைபண்பாட்டுக் கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது. போட்டிக்கான கவிதையின் பிரதியொன்றுடன் ஏப்ரல் மாதம் முதலாம் திகதிக்கிடையில் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும்படி போட்டியாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். தெரிவு செய்யப்படும் போட்டியாளர்கள் 22.04.2000 அன்று நடைபெறவுள்ள அன்னை பூபதி நினைவுநிகழ்வு நாளன்று இறுதிப்போட்டிக்கு அழைக்கப்படுவார்கள்.

கீழ்ப்பிரிவு, நடுப்பிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு என நான்கு பிரிவாக கவிதைப்போட்டிகள் இடம்பெறும். ஒவ்வொரு பிரிவினருக்கும் கவிதைக்கான இரண்டு தலைப் புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு தலைப்பினைத் தேர்ந்தெடுத்து கவிதைகளை இயற்றலாம். கீழ்ப்பிரிவு மூன்று நிமிடங்கள், நடுப்பிரிவு ஐந்து நிமிடங்கள், மேற்பிரிவு ஏழு நிமிடங்கள், அதிமேற்பிரிவு பத்து நிமிடங்கள் எனப் போட்டியாளர்கள் கவிதை படிப்பதற்கான நேர எல்லை விதிக்கப்பட்டுள்ளது.

கீழ்ப்பிரிவு 'நன்று நாங்கள் வாழவே..' அல்லது 'எதிர்காலம் கேட்கிறோம்', நடுப்பிரிவு 'விடியலுக்காய்' அல்லது 'எண்ணத்தில் மாறாத..', மேற்பிரிவு 'காலடி பணிந்து சேவகம் புரிந்து...' அல்லது களுத்துறை சிறைக்குக் காத்திருந்தால்....', அதிமேற்பிரிவு 'பூபதி அன்னையே...' அல்லது 'ஓயாத அலைகள்..' என்ற தலைப்புகளின் கீழ் கவிதைகளைப் படைக்கவேண்டும்.

கவிதைகள் புதிய படைப்பாக இருக்கவேண்டும். முன்னர் வெளிவந்த கவிதைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

T.C.C
Postfach 10 16 13
46016 Oberhausen
Tel: 0208 205 991 03
Fax: 0208 205 991 04

ஈழத்தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனத்தின்
ஆதரவில்
செஞ்சோலை சிறுவர் பராமரிப்பு நிதிக்காக
தமிழ்ப் பெண்கள் அமைப்பு-பிரான்ஸ்
நடாத்தும்
உள்ளரங்க உதைபந்தாட்ட
சுற்றுப்போட்டி

காலம்: 02.04.2000 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 9 மணி
இடம்: 54, BOULEVARD NEY,
75018 PARIS.
M°: PORTE DE LA CHAPELLE

# கிளிநொச்சியில் 42 எலும்புக்கூடுகள் மீட்பு

(26.03.00)

கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் நேற்று மனித எலும்புக்கூடு ஒன்று தமிழீழ காவல் துறையினரால் கண்டு பிடிக்கப் பட்டுள்ளதாக புலிகளின் குரல் வானொலி தெரிவித்துள்ளது. இந்த எலும்புக்கூட்டின் ஒரு காலில் முறிவு ஏற்பட்டு, முறிந்த எலும்பை இணைப்பதற்காக கம்பி வைத்து சிகிச்சை செய்யப் பட்டிருந்ததற்கான அடையாளமும் காணப்பட்டுள்ளது. இதே வேளை, உருத்திரபுரம் கிழக்குப் பகுதி மலசலகுழி ஒன்றில் இருந்து நேற்று முன்தினம் பிற்பகல் 3 மனித எலும்புக்கூடுகள் ஆடைகளுடன் கிளிநொச்சி தமிழீழ காவல் துறையினரால் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அதே குழியினுள்ளேயே இவ் எலும்புக்கூடும் கண்டெடுக்கப் பட்டுள்ளது. கிளிநொச்சியில் சிறீலங்கா இராணுவத்தினர் ஆக்கிரமித்து நிலைகொண்டிருந்த போது அமைந்திருந்த முன்னணி காவலரணில் இருந்து 700 மீற்றர் தூரத்தில் இருந்த மலக்குழியில் இருந்தே இவைகள் மீட்டெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டெடுக்கப்பட்ட 3 எலும்புக்கூடுகளும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு வைத்திய பரிசோதனையின் பின்னர், அடையாளம் காண்பதற்குமாக பொது மக்களின் பார்வைக்கு அக்கராயன்குளம் தமிழீழ காவல் பணிமனையில் வைக்கப் படவுள்ளதாகப் புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது. சிறீலங்கா படையினரை இப்பகுதியை விட்டு அடித்து விரட்டிய தன் பின்னர் இதுவரை 42 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

## மட்டக்களப்புக்கு சென்ற சுவீடன் தூதுவர்

(26.03.00)

சிறீலங்காவிற்கான சுவீடன் தூதுவர் போர்ஜ் மற்சன், இரண்டாவது செயலாளர் ஸ்ரினா ஹால்ரன் ஆகியோர் கடந்த புதனன்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்தனர். மட்டக்களப்பு பி.ஐ.ஆர்.ஆர்.பி. மண்டபத்தில் நடைபெற்ற சுவீடன் அரசாங்கத்தினால் அன்பளிப்பு செய்யப் பட்ட நடமாடும் நூலக வாகன கையளிப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

இவ்வைபவத்தில் சுவீடன் தூதுவர் உரையாற்றுகையில் இந்த பிரதேசங்களில் உள்ள மக்கள் போர் நிலைமைகளால் மக்கள் கஸ்டங்களை அனுபவித்து வருகின்றனர். சமாதானச் சூழல் ஏற்பட்டால்தான் நிலையான அபிவிருத்தி ஏற்படும். யுத்தப் பிரதேசங்களில் உள்ள சிறார்களின் கல்வி, சுகாதார, உரிமைகளை பேணுவதில் சுவீடன் அரசாங்கம் உதவி வழங்கி வருகிறது என்றார்.

பின்னர் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சுவீடன் அதிகாரிகள் சந்தித்து மாவட்ட நிலைமைகள் பற்றி கேட்டறிந்து கொண்டனர்.

## கட்டைப்பறிச்சான் முகாம் மீது தாக்குதல்

(26.03.00)

கட்டைபறிச்சான் சிறீலங்கா இராணுவ முகாம் மீது கடந்த புதன் காலை விடுதலைப் புலிகளின் பீரங்கிப்படைப் பிரிவினர் தாக்குதல் நடாத்தியுள்ளனர். இதன்போது சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதுடன் கட்டடங்களுக்கு சிறிது சேதம் ஏற்பட்டதாகவும் சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் செய்திகள் தெரிவித்துள்ளன. புலிகளின் தாக்குதலையடுத்து படையினர் பொதுமக்களின் குடியிருப்புகளை நோக்கி நடாத்திய எறிகணைத் தாக்குதலில் மூதூரைச் சேர்ந்த மாணிக்கம் துரைராஜா(28) என்ற இளைஞர் கொல்லப்பட்டதுடன், முருகேசு குணநாயகம்(50) என்பவர் படுகாயமடைந்த நிலையில் திருமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## அரியாலையில் பிஸ்ரல் அணி தாக்குதல்

(26.03.00)

அரியாலை மாம்பழச்சந்திக்கு சமீபமாக கடந்த வியாழனன்று மாலை 6 மணியளவில் விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலில் சிறீலங்கா சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். ரியூசனுக்கு சென்று திரும்பிய மாணவனை வழிமறித்து அவரது சைக்கிளில் ஏறிச்சென்ற சிப்பாய் மீது அப்பகுதியில் வந்த புலிகளின் பிஸ்ரல் அணியினர் நடாத்திய தாக்குதலிலேயே சிப்பாய் கொல்லப் பட்டார்.

இத் தாக்குதல் சம்பவத்தையடுத்து அப்பகுதிக்கு வந்த படையினர் நடாத்திய துப்பாக்கி சூட்டில் அரியாலையைச் சேர்ந்த கோபாலசிங்கம் கணேசன்(25) என்பவர் உயிரிழந்துள்ளார். இவரது உடல் யாழ். வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தளங்கிளப்பு எல்லைப் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறீலங்கா படையினரின் முன்னரங்க பாதுகாப்பு நிலைகள் மீது புதனன்று விடுதலைப் புலிகள் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் ஆறு படையினர் காயமடைந்ததாக சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

## மலேரியா நோயாளி கைது

(26.03.00)

மூதூர் வைத்தியசாலையில் மலேரியாக் காய்ச்சலுக்குச் சிகிச்சை பெறவந்திருந்த குடும்பத்தவர் ஒருவரை சிறீலங்கா படையினர் கைதுசெய்து கொண்டு சென்றுள்ளனர். தனது மனைவி மற்றும் குழந்தையுடன் வந்திருந்த பாட்டாளிபுரம் கிராமத்தைச் சேர்ந்த குடும்பத்தவரே கைது செய்யப்பட்டவராவார். தற்போது இவர் படையின்ரால் சிறீலங்கா பொலிசாரிடம் ஒப் படைக்கப்பட்டுள்ளார்.


உங்கள் தலைமுடி உதிர்கின்றதா? கவலை வேண்டாம்
இதோ ஜேர்மனியின் புதிய கண்டுபிடிப்பு

எமது புதிய அறிமுகம்
NATURINA 2000 வெளிவந்துவிட்டது!

தலைமுடி உதிர்வு, கணைவெடிப்பு, இளநரை, மற்றும் முடிவளர்ச்சி நிறுத்தம் போன்றவற்றால் விரக்தியடைந்து போயுள்ளவர்களுக்கு ஓர் நற்செய்தி!
இந்தப் பிரச்சினைகள் வயதானவர்களுக்கும் ஏற்படலாம். இள வயதினருக்கும் ஏற்படலாம். ஆனால் இக் குறைபாடுகளை Naturina® வை தொடர்ந்து உபயோகிப்பதன் மூலம் தடுத்து நிறுத்தலாம்.
இத் தயாரிப்பு நீண்டகாலமாக ஆய்வுகளில் ஈடுபட்டுவந்த ஜேர்மனி முன்னணி நிறுவனத்தின் கண்டுபிடிப்பு.
Naturina® இயற்கையான மருத்துவத்தின் கலவைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் உயிர்ப்புக் கலவையாகும்.
இத் தயாரிப்பு எந்தவித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது.
எமது புதிய தயாரிப்பைப் பயன்படுத்துவதன் மூலம் சர்மம் பளபளப்புத் தன்மையையும், ஆரோக்கியமான தோலினையும், பலமான நகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
எமது Naturina® தயாரிப்புக்களான கூட்டுக்குளிகைகள், ஷம்பு, கூந்தல் தைலம் (Capsules. Shampoo, Hair tonic) ஆகியவற்றை ஏக காலத்தில் 3 மாதங்களுக்குத் தொடர்ச்சியாக பயன்படுத்தினால் பயன் நிச்சயம்.
இன்றே பாவியுங்கள் Naturina® உங்களை நிச்சயம் திருப்திப்படுத்தும்!

நீங்கள் சுவிசிலிருந்து வாங்கவிரும்பின் Postfinance, A/C No. 40_176111_3 என்ற வங்கிக் கணக்கு இலக்கத்திற்கும், பிரித்தானியாவிலிருந்து வாங்க விரும்பின் Barclays Bank, Sort Code 20_40_71, A/C No. 80327069 என்ற வங்கிக்கணக்கு இலக்கத்திற்கும் உரிய பணத்தைச் செலுத்தி, பணம் செலுத்தியதற்கான அத்தாட்சியைத் தபால்மூலமோ அல்லது தொலைநகல் மூலமோ எமக்கு அனுப்பி உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.




01.03.2000 இல் இருந்து விசேட சலுகை வழங்கப்படுகின்றது.

மேலதிக விபரங்களுக்கு:
Intercare Handels GmbH
Munster str 5, 59065 Hamm_Germany
Tel: 0049 2381 688347 / Fax: 0049 2381 688349 _ Internet: http://www.intercare_naturina.com



உலகில் தினந்தோறும் ஆயிரக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் தமது தலைமுடிப் பிரச்சினைகளின் தீர்வாக Naturina® தயாரிப்புக்களைப் பாவிக்கின்றனர்.

எமது நிறுவனம், Naturina 2000 புதிய தயாரிப்பின் மூலம் மேலும் பல பயன்களை அளித்து ஐரோப்பாவில் முதன்மை நிறுவனமாகத் திகழ்கின்றது.

நாம் தமிழிலும் கதைப்போம்
(வாரநாட்களில் பிற்பகல் 3-6 மணி)
(ஜேர்மனி நேரம்)

Naturina வின் விநியோகஸ்தராக விரும்புகின்றீர்களா!
ஐரோப்பிய நாடுகளில், வீட்டிலிருந்தவாறே மேலதிக வருமானம்பெற விரும்புகின்றீர்களா? விபரங்களுக்கு எம்முடன் தொடர்புகொள்ளவும்.

# அன்புவெளிபுர இளைஞர்கள் கொழும்பில் கைது

(26.03.00)

அம்பாறை அன்புவெளிபுரத்தைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் கொழும்பு செட்டியார் தெருவில் உள்ள கடையில் வைத்துச் சிறீலங்கா குற்றப்புலனாய்வுப் பொலிசாரினால் கடந்த 16ம் திகதி கைது செய்யப்பட்டுள்ளதாக, உறவினர்கள் கல்முனை மனித உரிமைகள் அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். சபாரெத்தினம் ரகுராஜ் (20), இவரின் சகோதரன் சபாரெத்தினம் ஜெயராஜ் (18), பரராசசிங்கம் விஜயன் (16) ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் அலுவலகத்தின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இவர் இராஜகிரிய தாக்குதல் சம்பவம் தொடர்பாகவே இவர்கள் குற்றப்புலனாய்வுப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு பொரளை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணை செய்யப்பட்டவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# வங்கியில் கொள்ளையடித்த கொமாண்டோக்கள் கைது

(27.03.00)

களுத்துறை கல்பொல பகுதியில் உள்ள கிராமிய வங்கியொன்றில் கொள்ளையடித்த சிறிலங்கா இராணுவத்தினரின் கொமோண்டோ அணியிலுள்ள இரு கோப்ரல்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வங்கியில் நுழைந்த இவர்கள் அங்கிருந்த பதினேழாயிரம் ரூபா பணத்தையும், நகைகளையும் ஆயுதமுனையில் கொள்ளை அடித்துக் கொண்டு வாகனம் ஒன்றில் தப்பிச் சென்றுள்ளனர். இதன்போது கல்பொல பிரதான வீதியில் உள்ள சோதனைச்சாவடியில் நின்ற பொலிஸார் வாகனத்தை இடைமறித்தபொழுது அவர்கள் வாகனத்தை நிறுத்தாமல் செல்லவே, அவர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம் செய்துள்ளனர். இதன் போது வாகனத்தின் வாகனசாரதி கொல்லப்பட்ட, இராணுவச் சீருடையில் காணப்பட்ட படையினர் இருவரும் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் இருந்து நான்கு கைக்குண்டுகளையும் தாம் மீட்டுள்ளதாக சிறீலங்கா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# 602 பேரை படுகொலை செய்தவர்

(23.03.00)

மட்டக்களப்பில் சிறிலங்காப் படையினருடன் இணைந்து செயற்படும் புளொட் குழுவைச் சேர்ந்தவர் ஒருவர் இதுவரை 602 படுகொலைகளை நடாத்தியுள்ளதாக தெரிவித்து 'மட்டக்களப்பு மக்கள்' என்ற பெயரில் சிறீலங்காவின் தொல்லை தவிர்ப்புக் குழுவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பப்பட்டுள்ளது. அக் கடிதத்தில் அப் புளொட் உறுப்பினர் புரிந்த கொலைகள் தொடர்பான தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இது இவ்வாரக் குசும்புகள்!

★ மாணவர்களின் நன்மை கருதியே பாடசாலைகளுக்கு அருகில் படைமுகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

*– கிண்ணையடியில் அமைந்துள்ள சிறீலங்கா படைமுகாமின் அதிகாரி*

★ ★ ★

★ ஒருவர் வீதியில் செல்லும்போது பொலிஸ் பதிவை எடுத்துச் செல்லவேண்டும் எனக் கட்டாயப்படுத்த எமக்கு அதிகாரம் கிடையாது அவர் விரும்பினால் பொலிஸ் பதிவை எடுத்துச் செல்லலாம்.

*– சிறீலங்கா பொலிஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்கு*

# கிண்ணையடி காவலரண் மீது தாக்குதல்

(26.03.00)

மட்டு. கிண்ணையடி சிறீலங்கா படைமுகாமின் காவலரண் மீது நேற்றிரவு 9 மணியளவில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு சிப்பாய் பலியானதுடன், மற்றொருவர் காயமடைந்ததாக சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. திடீரென அப் பகுதிக்கு வந்த புலிகளின் அணியினரே காவலரணை நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்தாக தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்த சிப்பாய் வாழைச்சேனை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக உலங்குவானூர்தியில் கொழும்பு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இவரை உலங்கு வானூர்தியில் ஏற்றுவதற்காகச் சென்ற படையினரில் ஒருவர், அதன் காற்றாடி வெட்டியதால் காயமடைந்தார். அவரும் இதே வானூர்தியில் கொண்டு செல்லப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# இரு மோதல்களில் 4 போராளிகள் வீரச்சாவு

(26.03.00)

இயக்கச்சி, மணலாறு பகுதிகளில் நேற்று சிறீலங்கா படையினருடன் இடம்பெற்ற இரு வேறு மோதல் சம்பவங்களில் விடுதலைப் புலிகள் தரப்பில் நான்கு போராளிகள் வீரச்சாவை தழுவிக்கொண்டுள்ளனர். மணலாற்றில் நடைபெற்ற மோதலில் அமுதன் (ஆறுமுகம் ஜெயச்சந்திரன் - மட்டக்களப்பு), விஜயகார்த்திக் (பாக்கியராசா உதயராஜ் - மட்டக்களப்பு), துணைப்படையைச் சேர்ந்த மேஜர் சின்னவன் (சுப்பிரமணியம் செல்வரத்தினம் - கொக்குத்தொடுவாய்) ஆகியோரும், இயக்கச்சியில் இடம்பெற்ற எதிர்பாராத மோதலில் பிரியங்கா (நடராசா சுபாசினி - யாழ்ப்பாணம்) ஆகியோர் வீரச்சாவை தழுவிக்கொண்டுள்ளதாக புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது.


# 45ம் நாள் வீரவணக்கம்

## கப்டன் சிறீ

**ஞானசோதி கமலதாஸ்**

*(யாழ்ப்பாணம்)*

**தாயக மீட்பில்:**
**16.02.2000**



**16.02.2000 ஆனையிறவு காவலரண் மீதான தாக்கியழிப்பின்போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கப்டன் சிறீக்கும் அவருடன் வீரச்சாவடைந்த சக வீரர்களுக்கும் வீரவணக்கம்.**

*மண்ணின் விடுதலைக்காய்*
*மரணத்தை வென்றவனே, நீ*
*மண்ணைவிட்டு மறைந்து*
*பல நாட்கள் சென்றபோதும்*
*மண்ணின் உந்தன் தியாகம்*
*மறையாது இருக்குதடா, நீ*
*சுமந்து சென்ற சுதந்திரக் காற்று*

*ஈழக்கனவு*
*நனவாகும் நாள்*
*வெகு தொலைவிலில்லை!*
*அது வரை அமைதியாகத் தூங்குங்கள்!!*

உன் நினைவில் உன் உறவுகள் அப்பா
அம்மா, அண்ணன்மார், அக்காமார்,
அத்தான், அண்ணி, மருமகன், மகன்
மற்றும் உறவினர்கள் நண்பர்கள்

*தகவல்: பிரகாஸ் - லண்டன்*
*தொலைபேசி: 0181 8935849*

# தமிழ் மக்கள் சுதந்திரக் காற்றை சுவாசிக்க விரும்புகிறார்கள்

ஐக்கிய தேசியக் கட்சி அரசும் சந்திரிகாவின் அரசும் கடந்த பத்து வருட காலமாக எமது மக்கள் மீது திணித்து வந்துள்ள தடைகளும் கட்டுப்பாடுகளும் பாரிய இருப்புப்பிரச்சினைகளை ஏற்படுத்தியதோடு தமிழர்களது சமூக, பொருளாதார, கலாச்சார வாழ்வையும் ஆழமாக சீர்குலைத்திருக்கிறது. அத்துடன் தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கும் நோக்குடன் கட்டவிழ்த்து விடப்பட்ட போர் நடவடிக்கைகள் தமிழ் மக்களின் வாழ்க்கைப் பிரச்சினையை மேலும் மோசமாக்கி பத்து இலட்சம் தமிழர்



படைகள் முகாம்களுக்குள் அனுப்பப்படவேண்டும். ஒரு இறுதித் தீர்வு காணும்வரை அரசாங்கம் தனது படைகளை தமிழ் மண்ணில் வைத்திருப்பதை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் போர்நிறுத்தத்தின் பின்னர் மக்கள் வாழும் பகுதிகளிலிருந்து, பாடசாலைகளிலிருந்து, கல்லூரிகளிருந்து, கோவில்கள் புனிதத்தலங்களிலிருந்து, பொது நிலைகளிலிருந்து, வீதிகளின் முடுக்கு மூலைகளிலிருந்து, பட்டினம் நகரப் புறங்களிலிருந்து ஆயுதம் தரித்த படைகள் விலக்கப்பட்டு முகாம்களுக்குள் நிறுத்தப்படவேண்டும். போர் நிறுத்தத்

**பதாக ஜனாதிபதி குமாரதுங்கா அறிவித்து வருகிறார். இந்த நிலைப்பாட்டிற்கு காரணமென்ன? இராணுவ பலவீனம் காரணமாக இருக்குமா?**

**பதில்:-** வன்னியிலும் ஆனை

திரத்தை மீளமைப்புச் செய்து நவீன மயப்படுத்தி இன்னுமொரு பெரும் போருக்கு தயார் செய்வதற்குச் சந்திரிக்காவிற்கு காலம் தேவைப்படுகிறது. அவர் ஏற்கனவே இராணுவச் செலவீனத்திற்கு வரவு செலவுத் திட்

**இலண்டனில் இருந்து வெளியாகும் 'தமிழ் கார்டியன்' எனும் ஆங்கில இதழுக்கு விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் வழங்கிய விசேட செவ்வியில், பேச்சுவார்த்தை சம்பந்தமாகவும் போர்நிறுத்தம் சம்பந்தமாகவும் விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டை விளக்கமாக எடுத்துக் கூறினார். நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் சிறுநீரக மாற்றுச்சிகிச்சை பெற்று இலண்டன் திரும்பியதன் பின்னர் பத்திரிகையொன்றிற்கு முதன் முதலாக வழங்கிய செவ்வியின் முழுவிபரங்களும் இங்கு பதிவாகியுள்ளன. இச் செவ்வியின் போது விடுதலைப்புலிகளின் தற்போதைய நிலைப்பாடு பற்றியும் கடந்தகாலங்களில் சிங்கள அரசுகள் தமிழ் தேசியத்தின் மீது மேற்கொண்ட ஒடுக்குமுறைகள் பற்றியும் எடுத்துரைத்தார்.**

## ஒருபுறம் போரும் மறுபுறம் சமாதானம் பேசுவதும் முடியாது

களை அவர்களது சொந்த மண்ணிலேயே ஏதிலிகளாக்கியுள்ளது. தமிழ் மக்கள் மீது ஒரு கூட்டுத் தண்டனையாக விதிக்கப்பட்டிருக்கும் இந்த ஒடுக்கு முறைகளும் நெருக்குவாரங்களும் உடன் நீக்கப்படவேண்டும். தமிழ் மக்களும் அதனையே விரும்புகிறார்கள். பொதிகளிலும், பெட்டகங்களிலும், ஒப்பந்தங்களிலும், அரசியல் அமைப்புச் சட்டத்திருத்தங்களிலும் அவர்களுக்குப்பெரிதாக அக்கறையில்லை. இந்தச் சட்டங்கள் அரசியல் யாப்பின் கட்டுக்கோப்பை மாற்றியமைக்குமே தவிர தமிழரின் நாளாந்த வாழ்க்கையின் கொடூரமான யதார்த்தத்தை பிரதிபலிக்கவில்லை. எமது மக்கள் தமக்கு உரித்தான உரிமைகளோடும், சுதந்திரங்களோடும், கௌரவமாக சாதாரண மனிதப் பிறவிகளாக வாழ விரும்புகிறார்கள். அவர்கள் தமது சொந்த வீடுகளில் சுதந்திரக் காற்றை சுவாசிக்க விரும்புகிறார்கள். தமது சொந்த மண்ணில் சுதந்திரமாக நடமாடவிரும்புகி

யான தடைகள் நீக்கப்படுவது அரசாங்கத்தின் போர்க் கொள்கையோடு பின்னப்பட்டிருப்பதால் ஒரு உருப்படியான போர் நிறுத்தத்திற்கும் விடுதலைப் புலிகள் தயாராக இருக்கிறார்கள்.

பேச்சுவார்த்தைகளுக்கு முன்னராக போரை நிறுத்தவோ, தமிழ்ப் பகுதிகளிலிருந்து சிங்களப் படைகளை வெளியேற்றவோ ஜனாதிபதி சந்திரிகா மறுத்துள்ளார். பேச்சுவார்த்தை வெற்றியளித்து இனப் பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட்டாலன்றி படைகள் வெளியேற்றப்படமாட்டாதென்பதே அவரது நிலைப்பாடு.

தொடரும் போர்ச்சூழலில் சமாதானப் பேச்சுக்கள் நடத்துவதை புலிகள் விரும்பவில்லை. ஒருபுறம் போரை நடத்திக் கொண்டு மறுபுறம் பேச்சை நடத்துவதும், ஒருவரை ஒருவர் கொன்று அழித்துக் கொண்டு சமாதானம் பேசுவதும் மிகவும் அபத்தமான, முட்டாள்த்தனமான காரியம். அதனால் தான்

தின் பின்னர் சிங்களப் படைகள் குடியிருப்புப் பிரதேசங்களை ஆக்கிரமித்து நிற்பதை நாம் விரும்பவில்லை. இந்த ஆக்கிரமிப்பு நிலை தொடர்ந்தால் எமது பட்டினங்களும் குடியிருப்புக்களும் தொடர்ந்தும் திறந்த வெளிச் சிறைச்சாலைகளாக இருக்கவேண்டியிருக்கும். தமிழரின் சமூக வாழ்விலும் தொடர்ந்தும் பீதியும் பதட்ட நிலையும்

யிறவுப் பிரதேசத்திலும் எதிர்கொண்ட பாரிய இராணுவத் தோல்விகளும், வருடங்களாக இரத்தம் சிந்திப் போராடி ஆக்கிரமித்த பெருநிலப்பரப்புகளை இழக்க நேர்ந்ததும், இராணுவ

டத்தில் பெருந்தொகையான நிதியை ஒதுக்கியிருக்கிறார். அத்தோடு அதிநவீன, தொழில்நுட்பம் வாய்ந்த அழிவு ஆயுதங்களை வாங்கிக் குவித்து வருகின்றார். அவரது இராணுவ தளபதிகளும்

## இராணுவ ரீதியில் விடுதலைப் புலிகளை வெற்றி கொள்ள முடியாது

**இருபது வருடங்களுக்கு மேலாக முடிவின்றித் தொடரும் போரில் பங்குபற்றி, மாறி மாறித் தொடர்ச்சியாக நிகழ்ந்த சமர்களிலும் சண்டைகளிலும் இழப்புக்களைச் சந்தித்துச் சோர்ந்து, களைத்து, ஆட்டம் கண்டுநிற்கும் சிங்கள இராணுவத்தின் தாக்குதல் வலு பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கிறது.**

றார்கள். தமது சொந்த நிலங்களில் விவசாயம் செய்தும், சொந்தக் கடல்களில் மீன்பிடித்தும், பயமின்றி, தடைகளின்றி, நெருக்குவாரங்களின்றி கௌரவமாக உழைத்து வாழ விரும்புகிறார்கள்.

தமிழர்கள் மீது இறுக்கப்பட்டுள்ள ஒடுக்குமுறைச் சூழ்நிலையை நீக்கி சமாதானத்திற்கும் பரஸ்பர நல்லெண்ணத்திற்குமான ஒரு இயல்பு நிலையைத் தோற்றுவிக்க அரசாங்கமும் எதிர்க்கட்சியும் ஒன்று சேர்ந்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த ஒடுக்குமுறை

சமாதனப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னராக போர்ச் சூழலை நீக்கிவிட வேண்டுமென புலிகள் வற்புறுத்துகின்றனர்.

சமாதான பேச்சுவார்த்தைக்கு முன்னராக வடகிழக்கிலிருந்து சிங்கள ஆயுதப்படைகள் விலக்கப்படவேண்டும் என்பதை பேச்சுவார்த்தைக்கு ஒரு நிபந்தனையாக நாம் வலியுறுத்தவில்லை. ஆனால் ஒரு போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு, போர் மீறல்களை மேற்பார்வை செய்ய ஒரு கண்காணிப்புக் குழு நியமிக்கப்பட்டதன் பின்னராக

தொடரும். போர்நிறுத்தம் அர்த்தமற்றதாகிவிடும். ஆக்கிரமிப்பு நெருக்கடி தொடரும். அதனால் தான் போர்நிறுத்தத்தின் பின்னர் சிங்கள ஆயுதப் படைகள் முகாம்களுக்குள் அனுப்பப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.

**கேள்வி:- நெருக்கடியைத் தணித்து இயல்பு நிலையை ஏற்படுத்தும் விடுதலைப் புலிகளின் இந்த யோசனையை சிறீலங்கா அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என நீங்கள் நினைக்கிறீர்களா?**

**பதில்:-** அது பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் சமாதானத்தை உருவாக்குவதில் சந்திரிகா அரசு உண்மையான அக்கறை கொண்டிருந்தால் எமது யோசனையைக் கவனமாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். தமிழ் மக்களை அடிபணிய வைத்து, புலிகளை பேச்சுக்கு நிர்ப்பந்திக்கும் நோக்குடனேயே சிங்கள அரசாங்கம் இராணுவ அடக்குமுறையையும் பொருளாதார ஒடுக்குமுறையையும் எமது மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது. இந்த கொள்கை அடிப்படையிலேயே தவறானது. இது சமாதானப் பாதைக்கு இட்டுச் செல்லப் போவதில்லை.

**கேள்வி:- தென்னிலங்கையில் கடும் எதிர்ப்பு கிளம்பியிருந்த போதும் விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்கு நாம் தயாராக இருப்**

ரீதியில் விடுதலைப் புலிகளை வெற்றி கொள்ள முடியாது என்ற உண்மையை சந்திரிக்காவிற்கு உணர்த்தியிருக்கலாம். அத்தோடு தமிழர் தாயகம் மீது படையெடுத்து நிகழ்த்திய அனர்த்தங்களால் தமிழ் மக்களின் வெறுப்பிற்கும் சந்திரிக்கா ஆளாகியிருக்கிறார். அத்தோடு சிறீலங்காவின் ஆயுதப் படைகளும் சிக்கலான பிரச்சினைகளை எதிர்கொண்டு நிற்கின்றன. இருபது வருடங்களுக்கு மேலாக முடிவின்றித் தொடரும் போரில் பங்குபற்றி, மாறி மாறித் தொடர்ச்சியாக நிகழ்ந்த சமர்களிலும் சண்டைகளிலும் இழப்புக்களைச் சந்தித்துச் சோர்ந்து, களைத்து, ஆட்டம் கண்டுநிற்கும் சிங்கள இராணுவத்தின் தாக்குதல் வலு பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன் ஆட்பலமும் குறைந்து மனோபலமும் உடைந்து நிற்கிறது. பொறுப்பற்ற அரசியல்வாதிகளின் ஆதிக்கக்கனவை நிறைவு படுத்துவதென்பது இந்த வலுக்குன்றிய இராணுவத்தால் இனி முடியாத காரியம். இந்த யதார்த்தத்தைத்தான் சந்திரிக்கா இப்பொழுது சந்தித்து நிற்கிறார். இதன் அடிப்படையில் ஜனாதிபதி சந்திரிக்கா இராணுவப் பாதையைக் கைவிட்டு சமாதான வழியில் தமிழரின் தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாண முயற்சிப்பார் எனக் கருத முடியாது. அவருக்கு இப்பொழுது தேவைப்படுவது காலம். இராணுவ இயந்

தென்னிலங்கையில் வீடு வீடாகச் சென்று படைக்கு ஆட்திரட்டி வருகிறார்கள். ஆகவே, தற்போது கொழும்பில் அரங்கேறியுள்ள சமாதான நாடகமும், பேச்சுவார்த்தைக்கு புலிகளுக்கு விடுக்கப்படும் அழைப்புகளும் ஒரு அரசியல் ஏமாற்றுவித்தை என்றே நாம் கருதவேண்டி இருக்கிறது. இராணுவத்தை நவீன மயப்படுத்தத் தேவையான கால இடைவெளியை நிரப்பி நடைபெறும் ஒரு அரசியல் கூத்தாக இருக்கலாம்

**கேள்வி:- இன்னும் ஒரு ஆறுமாத இடைவெளிக்குள் தமிழரின் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்போவதாக ஜனாதிபதி குமாரதுங்கா மிகவும் உறுதியுடனும், நம்பிக்கையுடனும் கூறிவருகிறார். இந்தக் கால வரம்பு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**பதில்:-** ஆசியாவிலேயே மிகவும் கடினமானதும் சிக்கலானதுமான தமிழரின் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு குறுகிய கால வரம்புகளை நிர்ணயிக்க முடியாது. தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆழத்தையும் அகலத்தையும் சிக்கலான வரலாற்றையும் மட்டுமன்றி, இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துவரும் சுதந்திர இயக்கத்தின் இலட்சியப் பற்றையும் சந்திரிக்கா நன்கு புரிந்து கொள்ளவில்லை. விடுதலைப் புலிகள் இயக்கம் எந்தவிதக் காலக்கெ

(தொடர்ச்சி 15-ம் பக்கம்)

# வாகனங்கள் நேருக்குநேர் மோதல் 13 பேர் பலி

ஆலங்குளம் அருகே தனியார் வாகனமும் அரச பேருந்தும் நேருக்கு நேர் மோதியதில் 13 பேர் கொல்லப்பட்டதுடன் ஏராள மானவர்கள் காயமடைந்துள்ள னர். இச் சம்பவம் கடந்த 19ம் திகதி இடம்பெற்றுள்ளது.

எதிரெதிராக மிகவும் வேக மாக வந்துகொண்டிருந்த இரு வாகனங்களும் தம்மைக் கட் டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து விலத்திச் செல்ல முடியாத நிலையில் நேருக்கு நேர் மோதி யுள்ளன. மோதிய வேகத்தில் இரு வாகனங்களும் அருகிலி ருந்த பள்ளத்தில் வீழ்ந்துள்ளன. இதன்போதே பலர் உடல் துண் டாடப்பட்ட நிலையில் உயிரிழந் தனர். காயமடைந்தவர்களில் 20 இற்கும் மேற்பட்டவர்கள் தமது கை, கால் போன்ற அங் கங்களை இழந்தவர்களாகவும் உள்ளனர் எனத் தெரிவிக்கப்படு கிறது. தனியார் வாகனத்தை ஓட்டிவந்தவர் தலை துண்டிக்கப் பட்ட நிலையில் மீட்கப்பட்ட தாகவும் காயமடைந்தவர்களில் ஐந்துபேரின் நிலை கவலைக்கி டமாக இருப்பதாகவும் வைத்தி யசாலைச் செய்திகள் தெரிவிக் கின்றன. இதேவேளை இவ் வாக னம் மோதியவேளை எழுந்த சத்தம் ஒரு மைல்வரை கேட்ட தாகவும் பலர் தெரிவித்துள்ள னர்.

இவ் விபத்துத் தொடர்பாக பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



அமெரிக்க அதிபர் பில் கிளின்டனின் இந்திய வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், சிறீலங்கா அரசிற்கு அமெரிக்கா ஆயுதங்கள், இராணுவ உதவிகள் வழங்குவதை நிறுத்தக்கோரியும் தமிழீழ விடுதலை ஆதரவாளர்கள் நடாத்திய ஆர்ப்பாட்டத்தில் ஒரு காட்சி.

# 'வாட்டர்' - 27 கோடி நஷ்டஈடு கோரி தீபா மேத்தா வழக்கு

'வாட்டர்' படத்தினை எடுக் கவிடாது படப்பிடிப்புகளில் சேதம் ஏற்படுத்தியதால் 27 கோடி ரூபா தனக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தீபாமேத்தா வழக்குத் தாக்கல் செய்துள்ளார். வாட்டர் படப்பிடிப்பிற்காக காசியில் அமைக்கப்பட்டிருந்த அரங்குகளைச் சேதமாக்கியதால் ஏற்பட்ட நஷ்டத்திற்காகவே இத் தொகையினைக் கோரியுள் ளார். தனது மனுவில் வாட்டர் படம் எடுக்க விடாமல் தடுப்பது கருத்துச் சுதந்திரத்தைப் பறிக்கும் செயல் எனவும், தனது கதையில் இந்துக்களைப் புண்படுத்தும் செயல் எதுவுமில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். உயர் நீதிமன் றத்தில் தாக்கல் செய்யப்பட் டுள்ள இம்மனு மீதான விசார ணைகள் அடுத்த மாதம் இடம் பெறலாம் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## புதுவை முதல்வராக சண்முகம்


புதுவை கூட்டணி தி.மு.க ஆட்சியில் இருந்து த.மா.கா விலகிக்கொண்டதையடுத்து புது வையின் முதல்வர் பதவி விலகி னார்.

இதனையடுத்து காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் சண் முகம் முதல்வராக பதவியேற் றுள்ளார். இவரது பதவி ஏற்பு வைபவம் கடந்த 22ம் திகதி புதுவை கவர்னர் மாளிகையின் முன் நடைபெற்றது. இவ் வைப வத்தில் காங்கிரஸ், அ.தி.மு.க, தமா.கா கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டு புதிய முதல் வருக்கு தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.



## திருப்பதி லட்டு

திருப்பதிக்கு வரும் பக்தர்க ளுக்கு போதிய அளவிற்கு லட்டு வழங்குவதற்கு புதிதாக இயந்தி ரம் ஒன்று கொள்வனவு செய் யப்பட்டுள்ளது. இப் புதிய இயந் திரத்தின் மூலம் நாளொன் றுக்கு 25,000 லட்டுகள் தயா ரிக்க முடியும் எனத் தெரிவிக் கப்படுகிறது. திருப்பதி லட் டைப் பெறுவதற்காக தினமும் முண்டியடிக்கும் பக்தர்களுக்கு இந்தப் புதிய இயந்திரத்தின் வருகை பயனளிக்கும் என ஆலய நிர்வாகத்தினர் தெரி விக்கின்றனர்.




# வண்ணத் தொலைக்காட்சி வழக்கு

அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் வண்ணத் தொலைக்காட்சி பெட் டிகள் கொள்வனவு ஊழல் வழக்கில் அ.தி.மு.க. பொதுச் செயலரும் முன்னாள் முதல்வ ருமான ஜெயலலிதா கடந்த புத னன்று ஒருமணிநேரம் நீதிமன் றத்தில் வாக்குமூலம் அளித்தார். அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் ஊராட்சிகளுக்கு வண்ணத் தொலைக்காட்சிகள் வழங்கிய தில் நடைபெற்ற பல இலட்சம் ரூபாய்கள் மோசடி வழக்கில் அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா, அப்போதைய அமைச்சர் செல்வகணபதி, ஜெய லலிதாவின் தோழி சசிகலா உள்ளிட்டோர் மீதான வழக்கு சென்னை 2-வது தனி நீதிமன் றத்தில் நடைபெற்று வருகிறது.

ஜெயலலிதாவைத் தவிர்த்து குற்றம் சாட்டப்பட்டுள்ள அனை வரும் ஏற்கெனவே நீதிமன்றத் தில் வாக்குமூலம் அளித்தனர். தனக்கு முதுகுவலி என்று கூறி ஜெயலலிதா வாக்குமூலம் அளிக் காமல் இருந்தார். இதைத் தொடர்ந்து தனி நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவையடுத்து ஜெயலலிதா ஆஜரானார்.


இவ்வழக்கில் விசாரணைக் காக 1996ம் ஆண்டில் தான் காவலில் வைக்கப்பட்டிருந்தது உள்ளிட்ட பல்வேறு விவரங்களை ஜெயலலிதா தெரிவித்தார்.

இவ்வழக்கில் மீண்டும் 29ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகி வாக்குமூலம் அளிக்க நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

நீதிமன்றத்தில் 126 கேள்விகள் ஜெயலலிதாவிடம் கேட்கப்பட் டன. பதிலளித்த ஜெயலலிதா எழுத்துமூலமான வாக்குமூலம் ஒன்றையும் அளித்தார். இவ்வழக் கில் சாட்சியமளித்த எவரும் தன்னை தொடர்புபடுத்தி சாட் சியமளிக்கவில்லை என்றும் இந்த வழக்கினால் தான் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தனக்கு நீதிவழங்க வேண்டும் என்றும் ஜெயலலிதா நீதிமன்றத் தில் கேட்டுக்கொண்டார்.

## 'இன்சாட் 3 பி' வெற்றிகரமாக வான் சென்றது

இந்திய வான்வெளி ஆராய்ச் சியில் சாதனையாகக் கருதப்ப டும் 'இன்சாட் 3 பி' வெற்றிகர மாக வான்வெளிக்கு அனுப்பப் பட்டுள்ளது. 2070 கிலோ நிறை கொண்ட இச் செயற்கைக்கோள் கடந்த 23ம் திகதி கயானாவில் வைத்து விண்ணுக்கு அனுப்பப் பட்டது. இதனைத் தாங்கிச் சென்ற விண்கலம் 27 நிமிடம் பிரிந்து சென்றதையடுத்து இன்சாட் பூமியின் சுற்றுப் பாதையில் சரியாக சுற்றத் தொடங்கியுள்ளதாக இந்திய விஞ்ஞானிகள் அறிவித்துள்ள னர்.



150 கோடி ரூபா செலவில் அனுப்பப்பட்டுள்ள இவ் இன் சாட் 3 பி மூலம், வர்த்தக மேம் பாட்டினை வளர்த்துக்கொள்வ துடன், கைத்தொலைபேசி மூல மான தகவல் தொடர்புகளையும் அதிகரிக்க முடியும் எனவும் விஞ் ஞானிகள் தெரிவித்துள்ளனர். தற்போது இதனது செயற்பாடு கள் செயற்படத் தொடங்கிவிட் டதாகவும் விஞ்ஞானிகள் அறி வித்துள்ளனர்.


டென்மார்க்கில் புதிய அறிமுகம்!

டென்மார்க்கில் இருந்து முதல் முறையாக வெளியாகும் TeleCard

Universal Tele Card

எமது வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கும் இன்னும் ஏராளமான நாடுகளுக்கும் அதிக நேரங்களுடன் வெளிவருகிறது Universal Tele Card என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறார்கள் DKS_NÆRKØB ஸ்தாபனத்தினர்.

மொத்தமாகவும், சில்லறையாகவும் கொள்வனவு செய்யவிரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

Korskaervej _ 104, 7000 Fredericia_DK


Tlf: 75915804 _ 75915805 _ Fax: 75915842

எம்மிடம் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு டென்மார்க் நாட்டின் அங்கீகாரத்துடன்
★ பற்றுச்சீட்டு வழங்கப்படும்.
★ அத்துடன் UNIVERSAL Tele Card தொடர்புகளுக்கு ஏற்படும் இடையூறுகளை உடனுக்குடன் கவனிக்க இதற்கான தொழில்நுட்ப அலுவலகம் பரடோ நகரில் காத்திருக்கிறது என்பதை உத்தரவாதப்படுத்துகிறார்கள் DKS நியர்குமிப் ஸ்தாபனத்தார்.



# 22 ஆண்டுகளின் பின் இந்தியா வந்த அமெரிக்க அதிபர்

தென்னாசிய நாடுகளுக்கான ஆறுநாள் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு கடந்த 19ம் திகதி இந்தியாவிற்கு வருகை தந்த அமெரிக்க அதிபர் பில் கிளின்டன், மறுநாள் தனது பங் களாதேசிற்கான பயணத்தை



முடித்துக்கொண்டு மீண்டும் இந்தியாவிற்கு வந்தார். இவரை செவ்வாயன்று டெல்லியில் இராணுவ மரியாதையுடன் ஜனாதிபதி நாராயணனும் பிரதமர் வாஜ்பாயும் வரவேற்றனர்.


வரவேற்பு முடிவடைந்ததும் காந்தி சமாதிக்குச் சென்று கிளின்டன் அஞ்சலி செலுத்தினார். பின்னர் அங்கிருந்து வாஜ்பாயின் ஐதரபாத் இல்லத்திற்குச் சென்று இரண்டுமணி நேர பேச்சுக்களில் ஈடுபட்டார். இரு நாடுகளுக்கு இடையிலான இப் பேச்சுக்களின்போது 'தொலை நோக்கு 2000' எனும் கூட்டறிக்கையில் கிளின்டனும் வாஜ்பாயும் கையொப்பம் இட்டனர். இதன்பின்னர் வாஜ்பாயும் — கிளின்டனும் கூட்டாக பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியளித்தனர்.

இப்பேட்டியின்போது அமெரிக்க அதிபர் பில்கிளின்டன், அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் 22 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு இந்தியா வருவதென்பது வருத்தமான விடயம். இந்தியாவின் சுதந்திர வரலாற்றில் பாதி ஆண்டு காலம் அமெரிக்க ஜனாதிபதிகள் யாருமே இங்கு வராமல் இருந்துவிட்டனர். இந்திய-அமெரிக்க நட்புறவிற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இத்தனை ஆண்டுகளாக நாம் அலட்சியமாக இருந்துவிட்டோம். இனிமேல் அப்படி இருக்கவிடக் கூடாது. உலகின் மிகப்பெரிய ஜனநாயக அரசுகள் ஒன்று சேர்ந்துள்ளோம். இந்தப் பயணம் எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது.

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நிலவும் பதட்டம் தணியவேண்டும். இராணுவ நடவடிக்கை மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. பேச்சுவார்த்தை மூலமே தீர்க்கப்பட வேண்டும். ஆனால் தீவிரவாதிகளுக்கு உதவுவதை பாகிஸ்தான் நிறுத்தும் வரை இப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை நடாத்துவதில் அர்த்தமில்லை என்ற இந்தியாவின் கருத்தை நான் ஆதரிக்கிறேன். வன்முறைகளை ஒழிப்பது பற்றி பாகிஸ்தான் செல்லும்போது அதிபர் முஷ்ரபிடம் பேசுவேன்.

அணு ஆயுத ஒழிப்பு விசயத்தில் இந்தியாவின் பாதுகாப்புப் பற்றிய கவலையை நாமும் அறிவோம். எனினும் அமெரிக்க, ரஷ்யா உட்பட பெரும்பாலான நாடுகள் அணு ஆயுத ஒழிப்பில் ஆர்வம் காட்டும்போது அதே வழியை இந்தியாவும் கடைப் பிடிக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். அமெரிக்கா திரும்பிய பின்னரும் அணு ஆயுத தடைபற்றி பேச்சுக்கள் இந்தியாவுடன் தொடரும். அதில் முன்னேற்றம் ஏற்படும் எனவும் தனது பேட்டியில் கிளின்டன் குறிப்பிட்டார்.

அதனைத் தொடர்ந்து பிரதமர் வாஜ்பாய் தனது பேட்டியில், அணு ஆயுத ஒழிப்புப் பற்றி நான் ஜனாதிபதி கிளின்டனுடன் மனம் திறந்து பேசியுள்ளேன். இந்தியாவிற்குக் குறைந்த பட்ச அணு ஆயுத தேவை குறித்தும் அவரிடம் விளக்கியுள்ளேன். இந்தியா இனிமேல் அணு ஆயுத சோதனை நடத்தமாட்டாது. எந்த நாட்டின் மீதும் முதல் நபராக இந்தியா அணு ஆயுதத்தைப் பிரயோகிக்கமாட்டாது. அத்துடன் அணு ஆயுத போட்டியிலும் இந்தியா ஈடுபடமாட்டாது என, தான் கிளின்டனிடம் தெரிவித்ததாக பத்திரிகையாளரிடம் கூறினார்.



எதிர்காலத்தில் அமெரிக்க - இந்திய நட்புறவை வலுப்படுத்த இருநாட்டு தலைவர்களும் அடிக்கடி சந்தித்து பேச்சுக்களை நடத்த வேண்டும் எனத் தெரிவித்த கிளின்டன், வாஜ்பாயை அமெரிக்காவிற்கு வருமாறு அழைப்பு விடுத்தார். அதனை ஏற்றுக் கொண்ட வாஜ்பாய் இவ்வாண்டின் இறுதியில் அமெரிக்கா வருவதாக உறுதியளித்துள்ளார்.

இந்தியா மேற்கொண்ட அணுப் பரிசோதனையை அடுத்து விதிக்கப்பட்ட பொருளாதாரத்தடையை அமெரிக்கா நீக்குவதாக அறிவித்துள்ளது. உலக வர்த்தக மற்றும் முதலீட்டு நலனுக்கு முக்கியத்துவம் அளித்து இந்தியா மீதான இத் தடையை கிளின்டன் நீக்கியுள்ளார். கிளின்டனின் இவ் அறிவிப்பினை அடுத்து இந்தியாவும் அமெரிக்காவில் இருந்து மேற்கொள்ளும் இறக்குமதி பொருட்களுக்கான வரியில் 175 கோடி ரூபாவைக் குறைப்பதாக வாஜ்பாய் தெரிவித்தார்.

22ம் திகதி இந்திய பாராளுமன்றத்தில் கிளின்டன் உரை நிகழ்த்தியபோது, அணு ஆயுத தடையில் இந்தியா கையொப்பம் இடவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். தொடர்ந்து, இந்தியாவில் இடம்பெறும் வன்முறைகளுக்கு தனது வேதனைகளைத் தெரிவித்துக்கொண்டதுடன் இந்தியா — அமெரிக்காவில் வேகமாக பரவிவரும் போதை வஸ்துப் பாவனை, எயிட்ஸ் போன்றவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் பற்றியும் பேசினார். கிளின்டன் பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்திய வேளை இந்தியாவின் கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்த 85 பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்குச் செல்லாது பகிஷ்கரிப்புச் செய்தனர். எனினும் ஏனைய உறுப்பினர்களுடன் நடைபெற்ற உரையின் பின்னர், அங்கிருந்து மாலை ஆக்ராவில் அமைந்துள்ள உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ் மகாலைச் சென்றுபார்வையிட்



டார். இதன்போது கிளின்டனின் மகளும் உடன் சென்றிருந்தார்.

23ம் திகதி ராஜஸ்தானில் உள்ள நயாலா எனும் கிராமம் ஒன்றிற்குச் சென்ற கிளின்டன், அங்குள்ள மக்களுடன் கலந்து பேசி அவர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்தார்.. பின்னர் அங்குள்ள பெண்களுடன் இணைந்து நடனமாடினார். அங்கிருந்து ராஜஸ்தானின் 16ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பழம்பெரும் கோட்டையான அம்பரைச் சென்று பார்வையிட்டார். இறுதியாக ராஜஸ்தானில் உள்ள உலகப் பிரசித்திபெற்ற ரந்தம்போர் தேசிய இயற்கை சரணாலயத்திற்குச் சென்று மூன்று மணிநேரம் பார்வையிட்டுவிட்டு மீண்டும் ஐதராபாத் திரும்பினார்.

ராஜஸ்தான் பயணத்தை முடித்துக்கொண்டு மும்பாய் வந்த கிளின்டன் அங்கிருந்து 25ம் திகதி மாலை தனது ஆறு நாள் இந்தியப் பயணத்தை முடித்துக்கொண்டு பாகிஸ்தானுக்குச் சென்றார்.


# 35 சீக்கியர்கள் படுகொலை

காஷ்மீர் மாநிலத்தில் 35 சீக்கிய இனத்தைச் சேர்ந்தவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். கடந்த திங்களன்று இனந்தெரியாத ஆயுதபாணிகளால் இவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க அதிபர் பில்கிளின்டனின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே இப் படுகொலை இடம்பெற்றிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இப் படுகொலை குறித்து கிளின்டன் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இப்படுகொலையை இந்திய பாதுகாப்பு படையினரே மேற்கொண்டதாக பரப்பியுள்ள செய்தியை உள்துறை அமைச்சர் அத்வானி வன்மையாகக் கண்டித்துள்ளார். கொல்லப்பட்டவர்களின் இறுதி ஊர்வலம் கடந்த 22ம் திகதி நடைபெற்றது. இதில் ஜம்மு — காஷ்மீர் முதல்வர் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

# புதுவையில் பயிற்றுமொழி தமிழ்

புதுவையில் தமிழை பயிற்று மொழியாக அமுல்படுத்த உள்ளதாக புதுவையின் புதிய முதல்வர் சண்முகம் தெரிவித்துள்ளதாக தமிழ் மொழிப் பயிற்று மொழி போராட்டக்குழு அமைப்பாளர் செய்தி வெளியிட்டுள்ளார். தமிழ்மொழியைப் பயிற்று மொழியாக அறிவிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டதற்கு தங்களை அழைத்துப்பேசிய முதல்வர் சண்முகம் விரைவில் இது பற்றிய ஆணையை வெளியிட உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.



ரதி ஜுவலர்ஸ்



28, Ealing Road, Wembley, Middx HA0 4TL

'எப்பொழுதுமே மலிவு விலை'

Tel: 0181-9033063-Fax: 0181-9039711

OPEN: 7 Days a Week

Mon -Sat: காலை 10 முதல் மாலை 6.30 வரை
Sun: மதியம் 12 முதல் மாலை 6.30 வரை.

Pub




# கியூபாவிற்கான மருந்து, உணவு விற்பனைத் தடையை அமெரிக்கா நீக்கியது

(23.03.00)

அமெரிக்காவின் செனட் வெளியுறவுக்குழு, கியூபாவிற்கு மருந்து வகைகள், உணவுப் பொருட்கள் போன்றவை விற்கப்படுவதை அனுமதிக்கும் சட்ட மூலத்தை கடந்த வியாழனன்று நிறைவேற்றியது. இதன் மூலம் கடந்த நாற்பது வருடகாலமாக அமெரிக்காவினால் கியூபாவின் மேல் விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத்தடை தளர்த்தப்பட்டுள்ளது.

அமெரிக்க செனட் சபையில் மிசூரியின் செனட்டரான கோன் ஆஷ்க்ரொப்ட் கியூபாவின் மீதான தடைகளை தளர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை செனட்டரும், குழுத் தலைவருமான ஜெசி ஷெல்மஸ் கடுமையாக எதிர்த்தார். இறுதியில் அவர் தனது நிலையில் இருந்து இறங்கித் தனது எதிர்ப்பை விலக்கிக்கொண்ட நிலையில், செனட்சபை விற்பனை அனுமதிக்காக வாக்களித்தது.

அமெரிக்காவின் பண்ணைத் தொழிற்துறை அமைப்புக்களும், விவசாய வர்த்தக அமைப்புக்களும் பொருளாதாரத் தடை நீக்கலுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். உணவுப்பொருள் ஏற்றுமதியில் உள்ள எல்லா தடைகளும் நீக்கப்படவேண்டும் என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். தடை நீக்கலை ஆதரித்து உரையாற்றிய செனட்டர் ஆஷ் குரொப்ட், அமெரிக்க விவசாயிகள், வெளியுறவு கொள்கைப் பிரச்சினைகளுக்கு இடையே அடகு வைக்கப்படக்கூடாது என்றும், உணவுத்தடைகளால் பாதிக்கப்படுவது அமெரிக்க விவசாயிகளும் ஏனைய நாடுகளின் அப்பாவி மக்களும்தான் என்றார்.

அமெரிக்காவின் விற்பனைத் தடைத் தளர்வினால் கியூபா பல பில்லியன் டொலர்களை மீதப் படுத்தும். அது வருடாந்தம் 700,000 மெட்ரிக் தொன் கோதுமையை ஐரோப்பாவில் இருந்தும் கனடாவில் இருந்தும் இறக்குமதி செய்கின்றது.

# சேர்பியர் மீதான பழிவாங்கல்களை நிறுத்த அல்பேனியர்களுக்கு நேட்டோ எச்சரிக்கை

(25.03.00)

அல்பேனியர்கள், சேர்பிய இன மக்கள் மீது மேற்கொள்ளும் பழிவாங்கல் தாக்குதல்களை உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும் அல்லது சர்வதேச தனிமைப்படுத்தலுக்கு அல்பேனியர்கள் உள்ளாவார்கள் என்றும் நேட்டோ செயலாளர் நாயகம் ரொபேட்சன் தெரிவித்துள்ளார்.

கொசோவோவின் மீது விமானத் தாக்குதல் இடம்பெற்ற ஒரு வருடப் பூர்த்தியை நினைவுகூறும் வகையிலான நிகழ்வுகளை கொசோவோவின் நேட்டோ அமைதிப்படையினர் மேற்கொண்டனர். அதில் கலந்துகொள்ள நேட்டோ செயலாளர் நாயகம், மற்றும் இராணுவத் தலைவர் வெஸ்லி கிளார்க் போன்றோர்கள் பிரிஸ்டினாவிற்கு வருகைதந்தபோது அங்கு இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

பிரிஸ்டினாவிற்கு பலத்த பாதுகாப்பின் மத்தியில் வந்து சேர்ந்த இவர்கள், நேட்டோ தலைமையிலான அமைதிப் படைத் தளபதி கிளவுஸ் ரெயின்ஹார்ட் மற்றும் அல்பேனிய தலைவர்களான ஹசீம் தாக்கி உட்படப் பலரைச் சந்தித்து பேச்சுக்களை மேற்கொண்டனர். அப்போது கடந்த வருடம் விமானத் தாக்குதலை மிலோசேவிச்சின் இன அடக்குமுறையை தடுத்து நிறுத்த சர்வதேச சமூகத்தின் ஒரேவழி எனக்கூறியவர் தாம் அதனையிட்டு பெருமைப் படுவதாகவும் கூறினார்.

நேட்டோவின் தாக்குதல் பூர்த்தியை சேர்பியர்கள் பல எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மூலம் நினைவு கூர்ந்தனர். தலைநகர் பெல்கிரேட்டிலும் வெறு சில நகரங்களிலும் பல ஆயிரம் மக்கள் கலந்துகொண்ட ஆர்ப்பாட்டங்களில் நேட்டோ, அமெரிக்க எதிர்ப்புக் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

# தென்னாபிரிக்காவில் ஆசிய மாணவர்கள் நெரிசலில் சிக்கி மரணம்

(24.03.00)

தென்னாபிரிக்காவில் இன்று பிற்பகல் ஏற்பட்ட இடிபாடு ஒன்றினால் இந்திய வம்சாவளி மாணவர்கள் 13 பேர் இறந்து, ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். தென்னாபிரிக்காவின் கிழக்கு கடற்கரை நகரான டர்பனில் இந்திய சமூகத்தினர் பெரும்பான்மையாக வாழும் சாட்ஸ் வேர்த் பகுதியில் பாடசாலை தவணை முடிவுகளை கொண்டாடும் ஒரு நிகழ்விற்காக அங்கு அமைத்திருந்த த்ரோப் எனும் களியாட்ட விடுதியில் மாணவர்கள் குழுமியுள்ளனர். சுமார் 600 வரையிலான மாணவர்கள் அங்கு குழுமியிருந்தனர்.

நிகழ்வு ஆரம்பமாகி சுமார் அரைமணி நேரமளவில் யாரோ ஒருவர் கண்ணீர்ப்புகை பெட்டி ஒன்றை கூட்டத்தினரிடையே நழுவ விட்டுள்ளார். இதனால் திணறிய மாணவர்கள் நெரிசலாக கட்டடத்தைவிட்டு வெளியேற முயன்றபொழுது அங்கிருந்த சுவர் இடிந்து விழுந்துள்ளது. இதன் இடிபாடுகளுக்குள் சிக்கியே மாணவர்கள் காயமடைந்தனர். அத்துடன் 12 மாணவர்கள் அவ்விடத்தேலேயே உயிரிழந்தனர். பின்னர் மேலும் ஒருவர் மரணமானார். பலரது உடல்நிலை கவலைக்கிடம் என்றும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அந்த களியாட்ட விடுதிக்குள் நான்கு வெளியேற்றக் கதவுகள் இருந்தபோதிலும் ஏன் எல்லோரும் ஒரே வழியாக செல்ல முயன்றனர் என்பதும், இறந்த ஒரு மாணவனின் வயது 11 என்றும் கூறும் பிராந்திய பொலிஸ் அதிகாரி, விசாரணைகள் தொடர்வதாகக் கூறினார்.

இதற்கிடையே சம்பவம் நடந்த களியாட்ட விடுதியை தீயிட்டுக்கொளுத்தப்போவதாக அங்கு கூடிய சுமார் 100 பேர்களடங்கிய கோஷ்டியைக் கலைக்க இராணுவம் அழைக்கப்பட்டது.

# செச்சினிய முகாம்களை ரஷ்யா தாக்கியது

(25.03.00)

ரஷ்ய விமானப்படையினர் எறிகணைத் தாக்குதலை, தென் செச்சினியா மீது கடுமையாக நடாத்திவரும் அதேவேளை, தரைப்படையினர் அர்குன் கோர்ஜ், வெடேனோ கோர்ஜ் போன்ற பகுதிகளில் மலைப்பகுதிகளில் பலத்த மோதல்களில் ஈடுபட்டனர். பின்னர் செச்சினியாவின் ரஷ்ய தலைமையகம் விடுத்த அறிக்கையில் அப்பகுதியில் இருந்து ஒன்பது தீவிரவாதிகளின் முகாம்களைத் தாம் தாக்கி அழித்துவிட்டதாகக் கூறியுள்ளது.

ரஷ்யாவின் விமானப்படையினர் சுக்கோய்-24, சுக்கோய்-25, எம்.ஐ-24 உலங்குவானூர்திகள் கடந்த 24 மணி நேரத்தில் சுமார் 50 தடவைகள் தாக்குதல்களை மேற்கொண்ட அர்குன் கோர்ஜ் மற்றும் அதன் அருகாமையில் உள்ள பாமுத், கட்டுனி, ஷரோ அர்குன் போன்ற பகுதிகள் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகின. கொம்ஸ் கொமல்ஸ் கோயே எனும் பகுதியினுள் கடந்தவாரம் சுமார் 500 வரையிலான தீவிரவாதிகள் ரஷ்யப் படைகளுடன் கடுமையான மோதல்களில் ஈடுபட்டனர். இப்பகுதியை இப்போது ரஷ்ய இராணுவப் படைப்பிரிவுகள் மீட்டுவிட்டதாகவும் பொலிஸ் நிர்வாகத்தை அங்கு ஏற்படுத்திவிட்டு இராணுவத்தை விலக்கிக்கொள்ளப் போவதாகவும் அறிவித்துள்ளது.

இதற்கிடையே தலைநகர் குரோஸ்னியில் கெரில்லா தாக்குதல்களில் தீவிரவாதிகள் ஈடுபடலாம் என்று சந்தேகம் தெரிவித்துள்ள இராணுவம், அடுத்த சில நாட்களுக்கு அதாவது, அதிபர் தேர்தல் முடிவடையும் வரை இராணுவம் தவிர்ந்த சாதாரண மக்கள் செச்சினியாவிற்குச் செல்லத் தடைவிதித்துள்ளது.

# 20,000 வெள்ளை அகதிகளைப் பொறுப்பேற்க பிரித்தானியா தயார்

(25.03.90)

சிம்பாவே நாட்டில் வசிக்கும் வெள்ளை இனத்தவர்களில் சுமார் 20,000 பேர் வரையான வர்களை மீண்டும் அழைத்துக் கொள்ள பிரித்தானியா நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பிரபல பத்திரிகையொன்று அரச வட்டாரங்களை ஆதாரம் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது. பிரித்தானிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் இதுபற்றிக் கூறுகையில், 'எனது எண்ணப்படி சிம்பாவேயில் தங்களது எதிர்காலம் கேள்விக்குறி என அவர்கள் உணரும் வேளையில், அவர்கள் திரும்பி வருவது நல்லது' என்றார். அத்துடன் சிம்பாவேயில் நிலைமை மோசமாகும் வேளை அங்குவாழும் பல ஆயிரம் வெள்ளை விவசாயிகளையும் அவர்களது குடும்பத்தினரையும் பிரித்தானியா வரவேற்கும் நடைமுறைகளைத் தயார் செய்து வருகின்றது.

சிம்பாவே பிரித்தானியாவிடம் இருந்து 1980ம் ஆண்டு சுதந்திரம் அடைந்தது. அதன்பின் மிகவும் கடுமையான பொருளாதாரப் பிரச்சினைகளை சிம்பாவே சந்தித்துள்ளது. சுமார் 4,000 வெள்ளை விவசாயிகள் நாட்டின் விளை நிலங்களின் மூன்றில் ஒரு பகுதியை சொந்தமாகக் கொண்டுள்ளனர். 1.5 மில்லியன் கறுப்பு இனமக்கள் மிகுதியான மூன்றில் இரண்டு பகுதியில் வாழ்கின்றனர். இந்த வெள்ளையரின் பண்ணை நிலங்களில் முன்னாள் போராளிகள் தற்போது நிலைகொண்டுள்ளனர். நில விவகாரத்தில் ஜனாதிபதி முகாபே வெள்ளையருக்காக வாதாடினால் அந்த அரசிற்கு எதிராக மீண்டும் ஆயுதமேந்தத் தாம் தயாராக உள்ளதாக இவர்கள் கூறுகிறார்கள். ஆனால் முகாபே காணி விவகாரத்தில் அவை கறுப்பு இனத்தவருக்கு பகிர்ந்து வழங்கப்படவேண்டும் என்று கூறியுள்ளார்.

ஸ்ரீ அபிராமி உபாசகி அம்மையார்
பிரான்ஸ் வருகை

காலம்: 02.04.2000 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை
இடம்: L.S.C
144, Av. du Président Wilson,
93210 La Plaine St. Denis.
தொடர்புகளுக்கு:– 01 42 43 07 78
06 67 46 07 09
Pub

மாவீரர் குறும்படப் போட்டி– படங்களும் பார்வையும் அடுத்த வாரம் வெளிவரும்.

தமிழீழ மருத்துவ நிதிக்காக
தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆதரவுடன் பாரிஸ் தமிழர் கல்வி நிலையம் நடாத்தும்
கலை மாலை 2000
உறவுகள் உயிர்காக்க உதவட்டும் உங்கள் கரங்கள்..
முன்னணி நடனக்குழுக்கள் ஒரே மேடையில் நடனம், பரதநாட்டியம், நகைச்சுவை, கதம்பம்
காலம்: 16.04.2000(ஞாயிறு) மாலை 3.30 மணி
இடம்: 199 Bis Rue Fbg. St.Martin,
75003 Paris.
Métro: Etienne - Marcel

# புதைக்கப்பட்டிருந்த பலநூறு உடல்கள் மீட்பு! உகண்டாவில் தொடரும் மதக்குழுக் கொலைகள்

(25.03.00)

உகண்டாவில் கடந்த சில தினங்களாக பொலிசார் பல பகுதிகளிலும் இருந்து கொன்று புதைக்கப்பட்டிருந்த நூற்றுக்கும் மேற்பட்ட உடல்களை மீட்ட வண்ணம் உள்ளனர். உகண்டாவின் பத்துகட்டளைகள் ஏற்பட்டு அமைப்பு எனும் மதக் குழுவினரின் உறுப்பினர்கள் தான் இவர்களும் என பொலிசார் தெரிவித்துள்ளனர். இதுவரை 100 பேர்களின் உடல்களை மீட்டுள்ள பொலிசார் அவைகளில் அறுபதுக்கு மேற்பட்டவை சிறுவர்களுடையது என்றும் கூறியுள்ளனர்.

கடந்தவாரம் கனுவ்கூ எனும் பகுதியில் இடம்பெற்ற தற்கொலைகளின் பின்னணியில் மர்மங்கள் அடங்கியுள்ளன என்று கூறும் உகண்டாவின் உட்துறை அமைச்சர், நாட்டில் கடவுளின் பெயரால் மேற்கொள்ளப்பட்டுள்ள பெரும் அழிவுகள் இவை என்றும், இவைகள் உண்மையில் படுகொலைகள்தான் என்றும் கூறியுள்ளார். கடந்தவாரச் சம்பவம் இடம்பெற்ற பகுதியில் இருந்து சுமார் 50 கி.மீற்றர் தூரத்தில் உள்ள புகுங்கா பகுதியில், மதக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர்கள் தங்கியிருந்த பகுதிகளின் நிலப்பகுதிகளிலேயே புதிய மனித உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவர்கள் தங்களது உடைகளாலேயே கழுத்தில் சுருக்கிடப்பட்டோ அல்லது கத்திகளால், கோடாரிகளால் தாக்கப்பட்டோதான் கொல்லப்பட்டார்கள். இவ்வுடல்களில் சில சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு புதைக்கப்பட்டுள்ளன என்றும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

கடந்த செவ்வாயன்று பொலிசார், மதக்குழுவின் தலைவர் தங்கியிருந்த வீட்டின் மலசல கூடப்பகுதியில் பழுதடைந்த நிலையில் ஆறு உடல்களை மீட்டுள்ளனர். கடந்தவாரம் இடம்பெற்ற மரணங்கள் உண்மையில் தற்கொலை அல்ல என்றும், அங்கு கூடியிருந்த மக்கள் மேல் எரிபொருள் தெளிக்கப்பட்டு தேவாலயத்தின் நான்கு பகுதிகளிலும் குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டே தீயிடப்பட்டுள்ளது. உண்மையில் தேவாலயத்திற்குள் என்ன நடக்கப்போகின்றது என்பதை அந்த மக்கள் அறிந்திருக்கவில்லை என்றும், புனிதமாதா தேவாலயத்திற்கு வந்து தம்மை அழைத்துச் செல்லப்போகிறார்கள் என்று மாத்திரமே அறிந்திருந்தனர் என்றும் சொல்லப்படுகின்றது.

இதற்கிடையே மதக்குழுவின் தலைவர் ஜோசெப் கிப்வெட்டேரேயும் அவரது உதவியாளரும் தங்களது உடமைகளுடன் தலைமறைவாகியுள்ளனர். கடந்தவாரம் இறந்தவர்கள் தங்களது உடமைகள் சொத்துக்களை விற்றுள்ளனர் என்றும், அப்படிப் பெறப்பட்ட பணம், முழுவதும் இவர்கள் இருவராலும் கையாடப்பட்டு இருக்கலாம் என்றும் பொலிசார் கூறுகின்றனர்.

## ஜனநாயக முறையை அமுல்படுத்த பாகிஸ்தானுக்கு கிளின்டன் வேண்டுகோள்

(25.03.00)

பாகிஸ்தானில் ஜனநாயக நிர்வாகத்தை மீண்டும் ஏற்படுத்தி இந்தியாவுடன் காஷ்மீர் பிரச்சினையில் பதட்டத்தை நீக்கி, சமாதானப் பேச்சுக்களை மேற்கொள்ளுமாறு அங்கு விஜயம் செய்த அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் புதிய இராணுவ ஆட்சியாளரிடம் கோரினார்.

இந்தியாவில் ஐந்து நாட்கள் விஜயம் மேற்கொண்ட அமெரிக்க அதிபர் ஆறரை மணிநேர குறுகிய விஜயம் ஒன்றினை பாகிஸ்தானிற்கும் மேற்கொண்டார். அங்கு தொலைக்காட்சியில் உரையாற்றிய அவர், பாகிஸ்தானும் அமெரிக்காவும் நீண்ட நாள் நண்பர்கள். ஆனால், அண்மையில் கடந்த அக்டோபர் மாதம் இடம்பெற்ற இராணுவச் சதிப்புரட்சியும், ஜனநாயக ஆட்சி கலைக்கப்பட்டு இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டதும் உறவுகளில் பின்னடைவுகளை ஏற்படுத்தின. ஜனநாயகத்தின் மறுப்பானது மக்களின் சுதந்திர நடமாட்டத்திற்கு எதிரானது. அவர்களுக்கு அதிக இன்னல்களை ஏற்படுத்த இராணுவ ஆட்சி காரணமாகியது. ஆகவே, கூடிய விரைவில் தேர்தலை அறிவித்து ஜனநாயக ஆட்சிமுறையை ஏற்படுத்தி அண்டை நாடான இந்தியாவுடன் காஷ்மீர் விவகாரத்தில் பொறுமையான நகர்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

பாகிஸ்தானில் இருந்து கிளின்டன் பயணமானதன் பின்பு பத்திரிகையாளரிடம் பேசிய முஷாரப், காஷ்மீர் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்பதில் பாகிஸ்தான் எப்போதும் விருப்பமாகத்தான் உள்ளது. நாமும் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளோம். பேச்சுக்கள் தொடரும் என்று தெரிவித்தார்.

## முன்னாள் பணயக்கைதிக்கு நஷ்ட ஈட்டை ஈரான் வழங்க வேண்டும்

(24.03.00)

லெபனானில் பணயக்கைதியாக வைக்கப்பட்டு விடுதலையான அமெரிக்கப் பத்திரிகையாளர் ஒருவருக்கு ஈரான் அரசு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று அமெரிக்க நீதியரசர் ஒருவர் தீர்ப்பளித்துள்ளார்.

அமெரிக்க செய்தி நிறுவனம் ஒன்றின் மத்திய கிழக்குப் பொறுப்பாளராக இருந்த டெரி அன்டர்சன் ஈரானிய ஆதரவு ஹிஸ்புல்லா அமைப்பால் கடத்தப்பட்டு ஒரு வருடங்கள் லெபனானில் சிறைவைக்கப்பட்டிருந்தார். 1991ம் ஆண்டு இவர் விடுதலையாகியதும் 98ம் ஆண்டு தான் சித்திரவதை செய்யப்பட்டதற்கும் இருட்டறையில் வைத்திருந்து தாக்குதல் மேற்கொண்டதன் மூலம் ஏற்பட்ட மனநோய்க்கு ஈரானின் பொறுப்பற்ற நடவடிக்கைகள்தான் காரணம் என்று கூறி, ஈரானிய அரசு அதற்கு நஷ்டஈடு வழங்கவேண்டும் என வழக்குத் தொடர்ந்தார். அதற்கான தீர்ப்பினை கடந்த வாரம் வழங்கிய நீதிபதி தோமஸ் பென்பீல்ட் ஜக்சன், ஈரான், அன்டர்சனுக்கு 24.5 மில்லியன் அமெரிக்க டொலர்களும், அவரது மனைவிக்கு 10 மில்லியன் அமெரிக்க டொலர்களும், மகளுக்கு 6.7 மில்லியன் அமெரிக்க டொலர்களும், கைதின்போது நடத்தப்பட்ட முறைகளுக்காக 300 மில்லியன் டொலர்களும் வழங்கப்பட வேண்டும் என தீர்ப்பளித்தார்.

ஆனால், ஈரானிடம் இருந்து எப்படி அந்த நஷ்டஈடு பெற முடியும்? என்பதில் குழப்பமான சூழ்நிலையே உள்ளது. ஏற்கனவே மூவர் இதுபோன்று ஈரானிடம் இருந்து நஷ்டஈடு பெறுவதற்காக காத்திருக்கின்றனர். ஆனால், ஈரானிடம் இருந்து எந்தவித பதிலும் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## மயான பூமியாக மாறிப்போன வெனிசுவேலாவின் உல்லாச நகரம்

(23.03.00)

வெனிசுவேலாவின் மத்திய கரிபியன் கரையில் அமைந்திருந்த உல்லாச நகரமான கார்மென் டீ ஊரியா இப்போது பல நூறு பேர்களை நிலத்தே புதைத்த, பெரும் மயான பூமியாக மாற்றம் கண்டுள்ளது. வெனிசுவேலாவின் தலைநகர் கரக்காசில் இருந்து சுமார் ஒரு மணிநேர பயண தூரத்தில் இந்தக் கடற்கரை நகரம் அமைந்துள்ளது.

கடந்த வருடம் டிசெம்பர் 15ம் திகதி இங்கு பல பகுதிகளிலும் குறிப்பாகக் கடற்கரையை அண்டிய பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, கடற்கொந்தளிப்பு போன்றவற்றால் 5000 முதல் 30,000 வரையிலான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் கடலால் கொண்டு செல்லப்பட்டோ அல்லது சேற்றுக்குள் புதையுண்டோ போயினர். இந்த அனர்த்தங்களின்போது கடற்கரை நகரான கார்மென் டீ ஊரியா பெரிதும் பாதிக்கப்பட்டது. இப்போது அங்கு நகரம் இருந்ததற்கான அடையாளங்களே காணப்படவில்லை. வெறும் சுவர்களும், பிளவுண்ட வீதிகளும், மண் மேடுகளும் மாத்திரமே காணப்படுகின்றன. அங்கு வாழ்ந்த 5000 பேர்களில் 500 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 800 வீடுகளில் 500 அள்ளுண்டு கடலுக்குள் போய்விட்டன. அத்துடன் வாகனங்கள், தளபாடங்கள் என சகலதும் கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளன. இன்று குடிநீரோ, மின்சாரமோ, நிரந்தர வீடுகளோ இல்லாத நிலையில் 80 குடும்பங்கள் அங்கு மீண்டும் வந்துள்ளன.

ஆனால், வெனிசுவேலா தலைவர் ஹியூகோ ஷாவேஸ், மீண்டும் அங்கு குடியிருப்புகள் அமைக்கப்படமாட்டாது என்றும், ஒரு பெரும் நினைவுப் பூங்கா அப் பகுதியில் ஏற்படுத்தப்பட உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## ஐ.நாவிற்கு எதிரான பிரச்சார யுத்தத்தில் சதாம் வெற்றி – கோபி அனான்

(25.03.00)

ஈராக்கின் இன்றைய சூழ்நிலைக்கு சதாம் ஹுசேன் தான் காரணம் என்ற வாதமும் அதற்கான விவாதங்களும் சர்வதேச நாடுகளால், குறிப்பாக பாதுகாப்புச் சபை அங்கத்துவ நாடுகளால் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால், ஐ.நாவும் அமெரிக்காவும்தான் காரணம் என்ற வாதம் ஈராக்கினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இன்று அமெரிக்கா கடைப்பிடித்துவரும் சில இறுக்கமான நடைமுறைகள் ஈராக்கின் கஷ்டங்களுக்கு ஐ.நாதான் காரணம் என்ற பிரச்சாரத்திற்கு வெற்றி கிடைக்கும் நிலையே அதிகமாக உள்ளது என்று ஐநாவின் பொதுச் செயலர் குற்றம் சாட்டியுள்ளார். ஈராக் தனது அத்தியாவசிய தேவைகளுக்காக எண்ணெய் ஏற்றுமதியை அதிகரிக்க விரும்புகின்றது. ஆனால், அதன் உற்பத்திச் சாதனங்கள் மாற்றப்படவேண்டி உள்ளது. அதற்கான பொருட்களை வாங்க பாதுகாப்புச் சபையிடம் கோரிய அனுமதியை அமெரிக்காவும் சில நாடுகளும் கிடப்பில் போட்டுள்ளன. இதனால் பாதிக்கப்பட்டுள்ளது ஈராக்கின் அப்பாவிச் சமூகம்தான்.


இன்று உலக நாடுகள் பலவும் அமெரிக்காவின் நடவடிக்கையை கண்டிக்க ஆரம்பித்துள்ளன எனக்கூறிய பொதுச்செயலர், அமெரிக்கா உடனடியாக ஈராக்கின் ஒப்பந்தங்களை நிறைவேற்றும் நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கோரினார்.

இதற்கிடையே எண்ணெய் உற்பத்தி நாடுகளின் அங்கத்தவர்கள் வியன்னாவில் கூடும்பொழுது, ஈராக் தனது எண்ணெய் உற்பத்தியைக் கூட்டவேண்டும் என்று கோருவார்கள் எனச் சொல்லப்படுகிறது. இதற்கான ஆதரவை அவர்கள் ஏற்கனவே தெரிவித்துமுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பாரிஸ் லாசப்பலில்
KTC
CHANGE
193 rue du Fg.St. Denis, 75010 PARIS
Mo: Gare du Nord / La Chapelle - Tel: 42 05 41 36

★ எந்தவித கொமிசனும் இல்லாமல்
உள்நாட்டு – வெளிநாட்டு நாணயங்களை
மாற்றீடு செய்வதற்கும்
★ தங்க நாணயங்களை மிகக் குறைந்த
விலையில் பெற்றுக்கொள்வதற்கும்
நங்கையர் மனங்கவரும் நல்ல தங்க நகைகளை
நம்பிக்கையோடு ரெடிமேட்டாகவும் செய்து பெற்றுக்கொள்ள
கே.ரி.சீ.ஜுவல்ஸ்


லண்டனில் முதன் முறையாக
மாவீரர் வெற்றிக் கிண்ண
இறுதிப் போட்டி
Sunday 2nd April
E17 Vs PLASHET
YEADING
Football Club
SOUTHALL
Cup Final
விடுதலைத் தீயில் விதையாய் வீழ்ந்தோரிற்கு
அமைதி வணக்கத்துடன் பி.ப 1.00 மணிக்கு ஆரம்பம்.
ஐக்கிய தமிழர் அமைப்பு (UTO) Eelam House 0171-403 4554, 0956 314370
சிறுவர்
பெரியோர்
அனுமதி
£1


Playing Field
Tennis Courts
Sports Grd
Bowling Green
Athletic Grd.
UB1
CARLYLE
NORMAN AV
EAST AV
NORTH AVENUE
SHACKLETON
SOUTH AV.
BROADWAY
HIGH
ORCHARD AV
SOUTHALL
ROAD
THE
Westmead Cen
A V R Centre
Depot
Factory
Superstore
Warehouse
School
BULLSBROOK RD
BEACONSFIELD RD
College
Playing Field
Yeading FC
Yeading Brook
Grand Union
PADDINGTON BRANCH
Works
A3005
A312
PARKWAY
Subway
Spts Grd
Southall
SOUTH
MERRICK RD
SOUTHBRIDGE WY
HORTUS RD
STRAIGHT
S
o
u
t
h



ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# இராணுவத் தோல்வியும் வெகுமதியும்

சிறீலங்காவின் இராணுவ வரலாற்றில் 7 உயர் அதிகாரிகள் ஒரே தடவையில் கட்டாய ஓய்விற்கு அனுப்பப்பட்ட நிகழ்வு கடந்தவாரம் நடைபெற்றுள்ளது. கடந்த கார்த்திகை மாதம் விடுதலைப் புலிகளால் வன்னிப் பெருநிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட ஓயாத அலைகள் - 3 இராணுவ நடவடிக்கையின்போது சிறீலங்காப் படையினர் பெற்ற மிக மோசமான தோல்விக்கு இந்த இராணுவ அதிகாரிகளே காரணம் என எடுக்கப்பட்ட முடிவுகளின்படி அவர்களுக்கு கட்டாய ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. அதாவது இந்த நடவடிக்கை மூலம் சிறீலங்கா அரசானது இன்னமும் போரின் மூலம் தமிழர் தாயகத்தைத் தோற்கடித்துவிடலாமென எண்ணங்கொள்வது புலப்படுகின்றது.

கடந்த காலங்களில் இவ்வாறாக இராணுவக் கணக்குகளை மாற்றி மாற்றிப்போட்டும் அதன் பின்னர் நடந்தது என்ன என்பதை சிறீலங்கா அரசும் அதன் இராணுவ இயந்திரமும் பாடங்களைக் கற்றபோதிலும் மீண்டும் இம்முறையும் ஒரு சில இராணுவ அதிகாரிகள் மீது பழியைப் போட்டுவிட்டு, தனது இராணுவக் கணக்கினைச் சரியாகக் காட்டவே முயற்சிக்கின்றது. 'ஓயாத அலைகள்' மூன்றில் இராணுவத்திற்குக் கிடைத்தது போர்க்களத் தோல்வி மட்டுமல்ல, அதன் நோக்கத்திற்கே கிடைத்த தோல்விதான். தமிழ்த் தேசியத்தை ஒடுக்குவதற்கோ, அல்லது தமிழர்களின் தாயகத்தை ஏப்பமிடுவதற்கோ இராணுவ இயந்திரம் சிறீலங்காச் சீருடையிலாகட்டும் அல்லது வேறெந்த நாட்டு இராணுவச் சீருடையில் வந்தாலும் அம் முயற்சி ஐயப்பாட்டிற்கு இடமில்லாத வகையில் முறியடிக்கப்படும். இவ்வாறான ஒரு வரலாற்றுப் பாடத்தை தமிழர் தாயகத்தில் அந்நிய இராணுவம் கற்று 'பிச்சைவேண்டாம் நாயைப் பிடி' என்ற கோதாவில் வெளியேறியதன் பத்தாவது வருடத்தில் இக் கருத்தை மீண்டுமொருமுறை கூறுவது சாலப்பொருந்தும்.

ஆயினும் ஆக்கிரமிப்பாளர்களும் அவர்களது ஆக்கிரமிப்புச் சிந்தனையும் எள்ளளவும் மாறாமல் இன்னும் வீச்சாக தமிழர்களை குதறக் காத்திருப்பதால் அவ் ஆக்கிரமிப்பை ஒட்ட நறுக்குவதற்காகத் தமிழர் தாயகம் தனது தார்மீக யுத்தத்தை இன்னும் மூச்சாகத் தொடரத்தான் வேண்டியிருக்கிறது. பேச்சுவார்த்தை - சமாதானம் என்ற பதங்களை கபடமாகக் கூறியவாறு தனது இராணுவ மேலாதிக்கச் சிந்தனையை வளர்த்தெடுக்கவே சிறீலங்கா முயல்வதென்பதொன்றும் மறைவான விடயமல்ல. இணக்கப்பாடொன்றைக் காண்பதற்காகத் தாம் பேச்சுக்களை நடாத்துவதாக சர்வதேசத்திற்குக் காட்டிக்கொள்ள முனையும் சந்திரிகா தரப்பும், ரணில் தரப்பும் பேச்சுவார்த்தை மேசையில் எந்தெந்த விடயங்களை அலசுகின்றன என்பதை இந் நேரத்தில் நாம் சற்று நோக்கிக்கொள்ளவேண்டும். சிங்களத்தின் இனச் சுத்திகரிப்பில் இருந்து தம்மைக் காத்துக்கொள்வதற்காக ஒவ்வொரு கணமும் போராடிக்கொண்டிருக்கும் தமிழ்த் தேசியத்தின் வேதனைகள் இவர்களுக்கு பேச்சுவார்த்தை மேசையில் வேடிக்கையாக இருக்கின்றது.

துடுப்பாட்டம் பற்றியும், கைக்குண்டு ஆராய்ச்சியிலுமே இவ்விரு தரப்பினரும் வெட்டித்தனமாகப் பேசிக்கொண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக தாம் பேசிக்கொள்வதாக பூச்சுற்ற முனைகிறன. அவர்களுக்கும் இதனைத் தவிர வேறு ஒன்றையும் செய்ய முடியாதுதான். ஏனெனில் தமிழ்த் தேசியத்திற்கான சுயராச்சியம் விரைவில் உருவாகப்போவது திண்ணம் என்பது அவர்களின் அடிமனதிற்குத் தெரியும். ஆயினும் அதுவரை தமது இராணுவ மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காக மேலும் மேலும் புதிய இராணுவக் கணக்குகளைப் போட்டுக்கொண்டு 'அவலை நினைத்து உரலை இடி'ப்பதைத் தவிர வேறு வழியில்லை.



நன்றி: தினக்குரல்

# பத்து வருடங்களின் பின் எழும் விவாதம்

## பார்வை

கடந்த மார்ச் 23ம் திகதியுடன் இந்திய இராணுவம் தமிழீழத்தை விட்டு வெளியேறிப் பத்து வருடங்களாகின்றன. இது தொடர்பாக இந்தியாவின் பிரபல மின்னியல் இணையமான rediff.com ஒரு சிறப்புத் தொடரை வெளியிடுகின்றது. இந்தியாவின் வியட்நாம் என்ற தலைப்பில் இந்திய இராணுவத்தளபதி லெப். ஜெனரல் கல்கட் மற்றும் டீக்சிட் போன்றோரின் பேட்டிகள் வெளியிடப்பட்டுவருகின்றது.

பத்து வருடங்களுக்கு முன் தமிழீழம் மீதான போரை நியாயப்படுத்திய இப் பிரமுகர்கள் இப்போது தமது அன்றைய பாத்திரம் பற்றி பல முரண்பாடான கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். முன்னாள் இந்திய வெளிவிவகார அமைச்சர் திம்புவில் தமிழர்களை அவமானப்படுத்திய றொமேஸ் பண்டாரியை விபரம் புரியாதவர் எனவும், இந்தியப் படைகளைத் தலைமை தாங்கிய தீபேந்தர் சிங்கை முட்டாள் எனவும் டீக்சித் விபரிக்கின்றார். முதலில் தமிழீழம் சென்ற இராணுவத் தளபதிகளில் ஒருவரான கேர்ணல் ஜோன் ரையிலர் என்பவர் புலிகளை பெரும் மக்கள் ஆதரவு பெற்ற விடுதலை இயக்கம் எனவும் தமது படைகள் அங்கு சென்றபோது; புலிகள் ஒரு அரச நிர்வாகத்தையும், நீதித்துறையையும் நடாத்தினர் எனக் கூறுகின்றார். தமது படைகள் புலிகளின் மத்தியதர தலைமையை உடைத்துவிட்டதாகக் கூட அவர் சொல்கின்றார்.

கல்கட் தமது படைகள் யாழ்ப்பாணத்திலும் பிற இடங்களிலும் நடாத்திய தேர்தல்கள் மிக மிக நேர்மையான தேர்தல்கள் என விபரிக்கின்றார். எப்படி மக்கள் ஆதரவு பெற்ற புலிகளை தமது படைகள் ஈ.பி.ஆர்.எல்.எவ் இற்கு வாக்குப் போட வைத்தனர் அவர் விபரிக்கவில்லை.

ஆனால், அனைத்து ஆய்வாளர்களும் இந்தியாவின் கொள்கை வகுப்பாளர் மட்டத்தில் குழப்பம் நிலவியது என்பதை ஒப்புக்கொண்டதுடன், மக்கள் ஆதரவு புலிகளுக்கு மிக உயர்வாக இருந்ததை ஒப்புக்கொள்கின்றனர். இந்திரா காந்தி, தமிழர் சார்பு நிலைப்பாட்டையும். ராஜீவ் காந்தியை ஜே.ஆரின் சூழ்ச்சியால் போரிற்கு தள்ளப்பட்டதையும் அவர்கள் ஒப்புக் கொள்கின்றனர். இவ் விமர்சனம் மூலம் இந்திய – தமிழீழ உறவுகளில் ஒரு புதிய பார்வை இந்திய ஆளும் மட்டத்தில் ஏற்பட்டால் சரி!

★ ★ ★

## மீண்டும் அமெரிக்க பயம்(?)

அதிபர் கிளின்டனின் இந்திய பயணம் ஏற்படுத்திய பரபரப்பு அடங்குகையில் அமெரிக்கா தென்னாசியா கடற்பரப்பில் ஆளுமையை ஏற்படுத்த விரும்புவதாக புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன. பங்களாதேசினை மையப்படுத்திய கடற்படைச் செயற்பாடுகளை அமெரிக்கா ஆரம்பிக்கலாம் என்ற அச்சம் டில்லி இராணுவத் தலைமைகளை கலக்கமடைய வைத்துள்ளதாக அறியப்படுகின்றது. இந்தியா தமது கடற்பிராந்தியத்தில் மற்றுமொரு பலம் வாய்ந்த கடற்படை செயற்படுவதை விரும்பவில்லை. இதனை இந்திய கடற்படை தளபதி அட்மிரல் சுசில் குமார் பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ளார்.

இவ்விவாதங்கள் மத்தியில் சிறீலங்கா விவகாரம் மீளக் கவனத்தை ஈர்த்துள்ளது. முன்பு அமெரிக்கா சிறீலங்காவில் காலூன்றுவதைத் தடுக்கும் நோக்கிலேயே இந்தியப் படை சிறீலங்கா அனுப்பப்பட்டதாக இந்திய அதிகாரிகள் கூறிவருவதை சுட்டிக்காட்டிய ஒரு இந்திய செய்தி ஏடு, மீள அதையொத்த சூழ்நிலை எழுவதாக ஒப்பிட்டுள்ளது.

இவ்விவாதங்களில் எவ்வளவு உண்மை இருந்தாலும் சிறீலங்கா – தமிழீழ – இந்திய உறவுகளின் சமநிலையில் அமெரிக்க பாத்திரம் பற்றிய நீண்ட நாள் கிசுகிசுக்கள் மீள தலையெடுக்க ஆரம்பித்துள்ளன. தென்னாசியா அமெரிக்க ஈர்ப்பைப் பெற்றுள்ள காலகட்டத்தில், சிறீலங்கா குறிப்பாக பேரினவாதத்தை மேலும் தீவிரப்படுத்தும் சிறீலங்கா போரினை வெல்வதற்காக இந்திய – அமெரிக்க – பாக் சமநிலையில் பதற்றத்தை ஏற்படுத்தும் சாத்தியத்தைக் கொண்டுள்ளது.

★ ★ ★

## யாழ். கோட்பாடு

யாழ்ப்பாணக் கல்லூரியின் 175வது ஆண்டு விழா கொழும்பில் அண்மையில் இடம்பெற்றது. இதில் அமெரிக்க தூதுவர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு ஆற்றிய உரையில் சில விடயங்களை ஆராய்ந்தார்.

யாழ்ப்பாணத்தை மீள கட்டியெழுப்புவது, 'அமெரிக்காவின் சிறீலங்கா தொடர்பான மூலக் கோட்பாடு' என அவர் கூறினார். தமது அரசு எல்லா மனித உரிமை மீறல்களையும் கண்டிப்பதாகக் கூறினார். புலிகள் அனைத்துப் பயங்கரவாதத்தையும் கைவிடவேண்டும் எனவும் அவர் கூறினார்.

ஆனால், அனைவரிடமும் எழும் கேள்வி என்னவெனில், யாழ். புனருத்தாரணம் எவ்வாறு வெள்ளை மாளிகையின் மூலக் கோட்பாடாக இடம்பெற்றது?

ஓயாதஅலைகள் 3 மீள வீரியம் பெற்று யாழ். குடாவினுள் வீசியடிக்கையில் இந்தக் கேள்வி நியாயமானதும் கூட.

சந்திரிகாவே யாழ்ப்பாணத்தை சிறீலங்காவின் பரப்புரைக்கான மூல பிரதேசமாக்கினார். தமது படைக் குவிப்பு மூலம் ஆக்கிரமிக்கப்பட்ட பூமியைக் காட்சிப் பொருளாக்கி இனச்சிக்கலின் உண்மையான பரிமாணத்தை அவர் திசை திருப்ப முயன்றார். அனைத்து தூதுவர்களும் அழைத்துச் செல்லப்பட்டனர். உலக வங்கி போன்றனவற்றிடம் நிதி கேட்கப்பட்டன. யாழ். அரசியல் - இராஜதந்திர முக்கியத்துவம் அதிகரிக்கப்பட்டு பிற தமிழர் துன்பங்கள் மறைக்கப்பட்டன.

புலிகள் இம் மாற்றத்தை எப்போதும் கணித்தே வந்தனர். இன்று தமது பதிலை வழங்க ஆரம்பித்துள்ளனர். யாழ்.குடாவினை முக்கியத்துவப்படுத்தும் அரசியல் – இராணுவ சவாலை பிரபாகரன் ஏற்றுக்கொண்டு ஓயாதஅலைகளை அங்கு நகர்த்தியுள்ளார்.

தமிழர்களின் கைகளில் யாழ்ப்பாணம் வந்த பிற்பாடும் அமெரிக்கா யாழ். மீளமைக்க உதவுமா என்பதே அனைவரது கேள்வியுமாகும். அலரிமாளிகைக்கும் வெள்ளை மாளிகைக்கும் மட்டுமல்ல, தமிழர்களுக்கும் யாழ்ப்பாணத்தை கட்டியெழுப்ப விருப்பம் உண்டு. உதவுவீர்களா?

★ ★ ★

## அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டமே!

யாழ். மக்கள் அண்மையில் அமைதி வேண்டி ஆர்ப்பாட்டம் செய்தனர். சிங்கள இனவாதிகள் போரினை வேண்டுகையில், தமிழர்கள் அமைதி கேட்கும் நியாயத்தையே இது கூறியது. ஆனால் இச் செய்தியை எழுதுகையில் இந்துஸ்தான் பத்திரிகை நிருபருக்கு ஒரு புதிய சிந்தனை வந்துவிட்டது. லண்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் வெளியிட்ட இணக்க முயற்சிகள் தொடர்பான செவ்வியில் யாழ்ப்பாணத்தை புலிகள் மீட்டெடுப்பார்கள் எனக் கூறியதை நினைவுக்குக் கொண்டு வந்த அவர், யாழ். மக்கள் அமைதிக்கு வேண்டுதல் - புலிகள் போரிற்கு ஆயுத்தம் என தலைப்பிட்டு யாழ். மக்களையும் புலிகளையும் எதிர் முகாம்களில் நிறுத்த முயற்சித்துள்ளார். அவர் சிங்கள பௌத்த பீடாதிகளை யாழ் மக்களின் கோரிக்கைக்கு எதிரானவர்களாகக் காட்ட முயற்சிக்கவில்லை.

'வாட்டாதே வாட்டாதே வன்னியரை வாட்டாதே' என கோசமிட்ட யாழ். ஊர்வலத்தை கொழும்பிலிருந்து கொச்சைப்படுத்த அவர் முயற்சித்தாலும் ஓயாதஅலைகள் தொடர்கின்றது.

*- ராஜா*

## இவ்வாரம் கேட்டவை

★ ஒரு கவிஞன் கூறினான் 'உலக மக்களை இரு வகுப்பினராக பிரிக்கலாம். அது தாஜ்மகாலை பார்த்தவர்கள். பார்க்காதவர்கள் என்ற பிரிவாகும்!...

20ம் நூற்றாண்டில் எண்ணெய் வளம் உள்ள நாடுகள் செல்வம் கண்டன. 21ம் நூற்றாண்டில் அறிவு தகவல் ஞானம் உள்ளவர்கள் செல்வம் காண்கின்றனர். வித்தியாசம் என்னவெனில், ஞானம் எல்லா மக்களாலும் பெறக் கூடியது. அது அவர்களை விட்டு தப்பியோடாது....

அணுவாயுத பரிசோதனைக்குப் பின் தாம் உண்மையிலேயே பாதுகாப்பாக இருப்பதாக இந்தியா மட்டுமே தீர்மானிக்க வேண்டும்...

இந்தியா உலக கணினி பொறியியலாளர்களில் 30 வீதமானவர்களை கொண்டது. ஆனால் 25 வீதமான போசாக்கின்மையானவர்களும் இந்தியாவிலேயே உள்ளனர்....'

*- (அமெரிக்க அதிபர் கிளின்டன் இந்தியாவில் ஆற்றிய உரையில் தெரிவித்த இராஜதந்திர சொல்லாடல்கள்)*

# தமிழர் மனித உரிமைகள் மையத்தினால் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் 56வது கூட்டத் தொடரன்று சமர்ப்பிக்கப்படும் மனுவின் மொழிபெயர்ப்பு

முன்னைய ஆண்டுகளை விட இந்த ஆண்டு 'தமிழர் மனித உரிமைகள் மையம் - TCHR தனது முறைப்பாடுகள் அடங்கிய மனுவை உங்கள் முன் - ஆழ்ந்த கவலையுடனும், இதயம் உடைந்த நிலையிலும் சமர்ப்பிக்கின்றது.

கடந்த சில ஆண்டுகளாக சிறிலங்காவிலிருந்து வந்து இக் கூட்டத் தொடர்களில் கலந்து கொண்ட 'மனித உரிமையின் காவலர் திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் தற்பொழுது எம்முடன் இல்லை. இவர் கடந்த ஜனவரி மாதம் 5ம் திகதி சிறிலங்காவின் தலைநகரான கொழும்பில் இனந்தெரியாத கொலையாளி எனச் சொல்லப்படும் ஒருவரால் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இவர் கடந்த 55வது கூட்டத் தொடரில், தமிழர்களின் மனித உரிமைகள் பற்றி எடுத்துரைத்தது மட்டுமின்றி, சிறிலங்காவில் தனக்கு ஏற்பட்டுள்ள உயிராபத்தின் அச்சுறுத்தல் பற்றியும் ஐ.நா. மனித உரிமைகள் ஸ்தாபனத்தில் பணியாற்றும் பல முக்கியஸ்தர்களுக்கு முன்கூட்டியே கூறியிருந்தார். பலருக்குப் பலதடவைகள் தான் எவ்வேளையிலும் சிறிலங்கா அரசினால் கொலை செய்யப்படலாம் என்றும் ஆருடம் கூறியிருந்தார். யார் இவரைக் கொன்றது? பதில் மிகவும் இலகுவானது! யார் இவர் இறப்பினால் நன்மை அடைகிறார்களோ அவர்களே!

இப் படுகொலை பற்றிய விபரங்கள் வரிசையாக - இந்த மனுவில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த மனித உரிமைக் கூட்டத் தொடரின் முக்கியஸ்தர் என்ற நிலையில், இக் கொலையை யார் செய்திருப்பார்கள் என்பதை நடுநிலையாளர்கள் என்ற முறையில் அறிந்துகொள்ள உரிமை உள்ளீர்கள். இப்படுகொலை, தமிழர்களின் மனித உரிமை மீறல்களை எடுத்துரைக்கும் எம் அனைவருக்கும் அறியத் தருவது யாதெனின், நாங்கள் அனைவரும் இப்படியான அரச படுகொலைகளில் இருந்து தப்ப முடியாது - என்பதே ஆகும்! நாம் அனைவரும் தொடர்ந்து இம் மனித உரிமைக் கூட்டத் தொடரில் சமூகமளிப்போமா என்பற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை.

திரு.குமார் பொன்னம்பலத்தின் படுகொலைக்கு பல தடயங்கள் இருந்தும் இன்றுவரை நேர்மையான, உண்மையான விசாரணைகள் எதுவும் நடைபெறவில்லை! அதேவேளை பல மூடி மறைப்புக்களும், சாதுர்யமான செயல்களும் மேற்கொள்ளப்படுகின்றன. இன்றுவரை கொலையாளிகளை நேரிற் கண்ட சாட்சிகள் அழைக்கப்பட்டு அடையாள அணிவகுப்பு எதுவும் நடைபெறவில்லை! ஆனால் விசாரணையாளர்களோ, பல கண்துடைப்பான செய்திகளை - கொலையாளிகள் அடையாளம் காணப்பட்டுவிட்டனர் என்ற பொய்யை வெளியிட்டு வந்துள்ளனர். விசாரணையாளர்களின் இத்தகைய செயற்பாடு உண்மையான கொலையாளிகளைப் பாதுகாக்கும் செயலாக அமைகிறது.

தமிழர் மனித உரிமைகள் மையம் திரு.குமார் பொன்னம்பலம் அவர்கள் எதிர் நோக்கியிருந்த அபாயம் குறித்து - ஐ.நா மனித உரிமை ஸ்தானிகருக்கு 1998ம் ஆண்டு தெரியப்படுத்தியிருந்தது.

இலங்கைத் தீவில் - தமிழரின் மனித உரிமைகள் தொடர்ந்தும் மிக மோசமான நிலையில் உள்ளன. பாடசாலைகள், வைத்திய சாலைகள், தேவாலயங்கள் விமானக்குண்டு வீச்சுக்குத் தொடர்ந்து இலக்காகி வருகின்றன. கடந்த மார்கழி மாதம், மடு தேவாலயத்தில் தஞ்சம் புகுந்திருந்த 42 அப்பாவித்தமிழ் மக்கள் சிறிலங்கா இராணுவத்தால் பயங்கரமான முறையில் கொல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் 1996ம் ஆண்டு காணமற்போன 600 பேரின் நிலைமை தொடர்ந்தும் கேள்விக் குறியாகவே உள்ளது! செம்மணியில் இனம் காணப்பட்ட, இரு காணமற்போன நபர்களின் உறவினர்களுக்கு சிறிலங்கா அரசினால் 'அவர்களை தேடமுடியாமல் உள்ளோம்', என அனுப்பிய கடிதம், சிறிலங்கா அரசின் மனிதாபிமான மற்ற அலட்சியமான செயலை எடுத்துக் காட்டுகிறது!

தமிழ் மக்கள் மீதான சித்திரவதை, தன்னிச்சையான கைதுகள், தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வன்முறை, கொலைகள் அரச படைகளினால் மிக மோசமாகத் தொடர்கின்றன.

இலங்கைத் தீவின் வடகிழக்கில் - உணவு, சுகாதாரம், கல்வி, தொழில் போன்ற பொருளாதார சமூக நிலைமை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. அண்மையில் வெளியாகிய அமெரிக்க இராஜாங்க அமைச்சு, மனித உரிமை கண்காணிப்புக் குழு, ஐ.நா சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியவற்றின் அறிக்கைகள் இவற்றுக்கு சான்று வழங்குகின்றன.

கொழும்பில் தமிழ் மக்கள், 'தமிழர்' என்ற ஒரே காரணத்திற்காக கைது செய்யப்படுகின்றனர்.

சிறிலங்காவில் தண்டனையிலிருந்து தப்பும் படையினரின் தொகை பெருமளவில் அதிகரித்துள்ளது. அரச பயங்கரவாதச் சட்டம், அவசரகால நிலைமை என்பவற்றைப் பயன்படுத்தி தமிழ் மக்களைக் கைதுசெய்ய, சித்திரவதை செய்ய, கொலை செய்ய அரச படைகள் சுதந்திரம் பெற்றுள்ளனர்! பெருந் தொகையான மனித உரிமை மீறல்களில் சம்பந்தப்பட்ட அரச படைகள் -பதவி உயர்வும், ஜனாதிபதி பரிசில்களும் பெற்றுள்ளனர். சிறிலங்காவில் மனித உரிமையைப் பொறுத்தவரையில் இப்படியான முன்னேற்றங்களை மட்டுமே நாம் அவதானிக்க கூடியதாக உள்ளது.

அவைத் தலைவர் அவர்களே, திரு.குமார் பொன்னம்பலம் அவர்களின் படுகொலையை விசாரிக்க, சுதந்திரமான, பொதுவான ஒரு குழுவை நியமிக்குமாறு, சிறிலங்கா அரசைக் கேட்குமாறு தமிழர் மனித உரிமைகள் மையம் - TCHR, இந்த 56வது கூட்டத் தொடரில் வேண்டிக்கொள்கிறது.

அத்துடன் இக் கூட்டத்தொடர், கடந்த 10 ஆண்டுகளாக தமிழ்ப் பகுதிகளில் அமுலில் இருந்து வரும் பொருளாதாரத் தடையை விலக்கவும், மனித உரிமைகளை மதிக்கவும், செம்மணி விவகாரத்தை விசாரிக்க - ஒரு சுதந்திரமான குழுவை நியமிக்கவும், பத்திரிகைத் தணிக்கையை விலக்கவும், சிறிலங்காவில் உள்ள சகல அரசியல் கைதிகளை விடுதலை செய்யவும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விலக்கவும், ஒழுக்கமற்ற சிறிலங்கா அரசபடைகளை தமிழ் பகுதிகளில் இருந்து விலக்குமாறும் சிறிலங்கா அரசை நிர்ப்பந்திக்குமாறு வேண்டிக் கொள்கிறது.

நன்றி.

*ச.வி.கிருபாகரன்*
*பொதுச் செயலாளர், TCHR*

# பிரபாகரனை நாங்கள் தவறாகக் கணிப்பிட்டோம்

## - முன்னாள் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலர் தீட்சித் சிறப்புப்பேட்டி -

மார்ச்-23ம் திகதியுடன் இந்தியப் படைகள் தமிழீழ மண்ணைவிட்டு வெளியேறி 10 வருடங்களாகின்றன. தமிழீழ -இந்திய உறவுகளைப் பாதித்த ஒரு படையெடுப்பின் முடிவு... இந்தியாவின் பிரபலமான Rediff Com வெளியிடும் 'இந்தியாவின் வியட்நாம்' எனும் சிறப்புப் பகுதியில் வெளிவந்த பேட்டியை ஈழமுரசு வழங்குகின்றது.

முன்னாள் வெளியுறவுத்துறை செயலாளரான ஜே.என் தீட்சித் மிக முக்கியமான காலமாக இருந்த 1985 முதல் 1989 வரை சர்வ அதிகாரம் பொருந்திய இந்தியாவின் இலங்கைக்கான தூதராக இருந்தார். 1987ம் ஆண்டின் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை வரைவதிலும் அதைத் தொடர்ந்து இந்த ஒப்பந்தத்தை அமுல் படுத்துவதற்காக இந்திய அமைதி காப்புப்படையை இலங்கைக்கு அனுப்பிய பணியிலும் இவர் முக்கியபங்கு வகித்தார்.

இப்போரில் இறுதியாக கணக்கெடுத்தபோது, இந்தியா 1200 துருப்பினரை இழந்தது. மற்றும் ஐ.பி.கே.எவ். தனது பணியை முடிக்காமலேயே பின்வாங்கவேண்டிவந்தது. ராஜீவ் காந்தியின் நம்பிக்கைக்குரியவராக இலங்கையில் பொறுப்பான பதவியில் இருந்தவர் தீட்சித், இந்தியா - இலங்கை ஒப்பந்தம் முன்பு கையெழுத்தாவதற்கு முன் நடைபெற்ற திரைமறைவு அரசியல் நாடகங்கள் எதுவும் இவருக்குத் தெரியாமல் நடக்கவில்லை.

இந்தியப் படைகளை அனுப்புவதற்கான முடிவு ஒப்பந்தம் கையெழுத்தான அன்றைய காலைப் பொழுதில் எடுக்கப்பட்டது என்றும், யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான தொடக்க யுத்தத்தில் பெருத்த சேதம் ஏற்பட்டது படைத்தலைவரின் முட்டாள்தனத்தால்தான் என்று கூறும் இவர், ராஜீவ் காந்தியின் மேல் தவறு ஏதும் இல்லை என்று சான்றிதழ் கொடுக்கிறார். பெரும் சிக்கல் மிகுந்த அந்த ஆண்டுகளைப் பற்றி அவர் ஜோசி ஜோசப்பிடம் பேசினார்.

***கேள்வி: இலங்கையிலிருந்து இந்திய அமைதிப்படை திரும்பி வந்து 10 ஆண்டுகள் ஆகிவிட்டன. அதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? சரியான நேரத்தில்தான் ஐ.பி.கே.எவ். பின்வாங்கியதா?***

பதில்: தமிழர்களுடனோ சிங்களவர்களுடனோ சண்டையிடுவதற்கு இந்தியப் படை செல்லவில்லை. ஜூலை 87ன் ஒப்பந்தத்தின் அமுலாக்கத்தை உறுதிப்படுத்தவே அவர்கள் சென்றார்கள் என்று நான் நினைப்பதால், உங்களின் இந்த கேள்விக்கான என் கருத்து ஒரு தலைப்பட்சமானதாக இருக்கும். இந்தியப் படையினர் தங்களுடன் சண்டையிடும் ஒரு சூழ்நிலையை முதலில் ஏற்படுத்தியது எல்.டி.டி.ஈ.-யும், இந்த ஒப்பந்தத்திற்கு எதிராக சதி செய்த ஜெயவர்த்தனாவின் கீழிருந்த இலங்கை அமைச்சர்கள் லலித் அத்துலத்முதலி மற்றும் பிரதமர் பிரேமதாசா போன்றவர்களும்தான்.

இத்தனை சிரமங்கள் இருந்தும் இலங்கையின் வடகிழக்கு மாநிலங்களில் ஒரு ஜனநாயக அரசை உருவாக்குவதிலும், ஸ்திரத் தன்மையைத் திரும்பக் கொண்டுவருவதிலும் இந்திய இராணுவம் மிகச் சிறப்பாகப் பணியாற்றியது.

என்னுடைய கருத்துப்படி 'நாம் அவசரமாக' ஐ.பி.கே.எவ். ஐ திரும்ப பெற்றுக்கொண்டோம். 8 மாதமோ அல்லது ஒரு வருடமோ நாம் அங்கேயே இருந்திருந்தால் இலங்கையின் நிலைமையை ஒருவேளை ஸ்திரப்படுத்தி நடைமுறை அரசியல் வாழ்க்கைக்கு வரும்படி பிரபாகரனை 'போதுமான அளவு' வலியுறுத்தி இருக்கலாம்.

ஒரு அந்நிய நாட்டில் நாம் இருக்கும்போது அந்நாட்டு அதிபர், 'வெளியே போய்விடுங்கள்' என்று சொல்லும்போது நாம் திரும்பி வரவேண்டும் என்றும், சட்டபூர்வமாக நமது நிலை சரியாக இருக்கவேண்டும் என்று வி.பி.சிங் அரசும், வெளியுறவுத் துறை அமைச்சர் குஜ்ராலும் நினைத்ததால், நாங்கள் பின்வாங்கினோம்.

இரண்டாவதாக ராஜீவ் காந்தி சரியில்லை என்பதை நிரூபிக்கும் அரசியல் நோக்கமும் இருந்து வந்தது. ஆனால் கடந்த பத்தாண்டுகள் இலங்கை மக்கள் ஒரு சிறந்த நிலைமையைப் பெற்றுள்ளதைக் காட்டுகிறதா? ஜூலை 87ன் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் அளிக்கப்பட்டதைவிடச் சிறந்த நிலைகளை தமிழர்கள் பெற்றுள்ளனரா? இதன் பெரும்பாலான பகுதிகள் இலங்கை அரசின் 13வது சட்டத்திருத்தத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்டன.

உண்மையில் நம் படைகள் பின்வாங்கியதில் தமிழர்களுக்கு இலாபகரமானதாக இருந்தவை பறிபோயின. இலங்கை பத்தாண்டு காலத்திற்கு வன்முறையில் ஆழ்த்தப்பட்டது. இன்று கூட அது வன்முறையைக் கைவிடுவதாக இல்லை.

நான் அந்தச் செயற்பாட்டில் தூதுவராக இருந்ததால் நான் சொல்வது ஒரு பக்கமாகப் பேசுவதாகப்படும். தற்போது எதிர் கட்சித்தலைவராக உள்ள ரணில் விக்கிரமசிங்கதான் இதற்கான குறிப்பிடத்தக்க சான்றாவார். 1995 இலும் இரண்டுமுறை எல்லோரும் அறியும் வகையில் இந்தியப் படைகள் திரும்பிவர வேண்டும் என்று தான் விரும்புவதாக நரசிம்மராவிடம் கூறினார். நரசிம்மராவ் மறுத்துவிட்டார்.

இரண்டாவதாக அவர் ஒருவர் மட்டுமல்லாமல் பல சிங்கள அரசியல் வாதிகளும் தமிழ் அரசியல்வாதிகளும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் திட்டங்கள்தான் சிறப்பாக சமாசமாக அமையும் என்று ஏற்றுக்கொண்டனர். அதிக வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்துவிட்டதால், அவை பொருந்தாதவையாகப் போய்விட்டன. புதிய அரசியல் போக்குகள் இப்போது எழுந்துள்ளன.

***கேள்வி: படைகளை விலக்கிக்கொண்டதைவிட முக்கியமான விடயம் அனுப்பி வைத்ததுதான்! ஐ.பி.கே.எவ். -ஐ அனுப்பியது சரியான முடிவுதானா?***

பதில்: படைகளை அனுப்ப நாங்கள் விரும்பியதாக யார் சொன்னது? படைகளை அனுப்புவது இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் ஒரு பகுதியல்ல. தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள். பேச்சுவார்த்தைகளின்போதும் ஒப்பந்தம் கையெழுத்தாகிய ஜூலை 27ம் திகதி காலை வரையிலும் இந்தியாவின் மிகப் பெரிய இராணுவப் படையை இலங்கைக்கு அனுப்பும் எண்ணம் இருந்ததில்லை. இலங்கை விடுதலைக்கட்சி (எஸ்.எல்.எவ்.பி.)யும், ஜே.வி.பி.யும் கொழும்பு முழுவதிலும் பெரும் கலகங்களை ஏற்படுத்தினர். ஒப்பந்தம் கையெழுத்தாகும் அன்று காலையிலும், அதற்கு முந்திய நாள் காலையிலும் அது இலங்கையின் சிங்களப் பகுதிகள் முழுவதிலும் பரவியது. கொழும்பின் தெற்கில் ஒரு இடத்தில் அதிபரின் இல்லத்தை மக்கள் கொளுத்தும் அளவுக்கு அது பூதாகாரமாகப் பரவியது. தென்பகுதியின் கலகத்தைக் கட்டுப்படுத்துவதற்காக தனது படைகளை யாழ்ப்பாணத்திலிருந்து விலக்கிக்கொள்ள ஜெயவர்த்தனா விரும்பினார்.

'யாழ்ப்பாணத்திலும் திருகோணமலையிலும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இந்தியப் படைகள் கொஞ்சப்பேராவது வரவேண்டும். ஏனென்றால் இப்பகுதியில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக என் சிங்களப் படைகளை நான் விலக்கிக்கொள்கிறேன்' என்று கூறியவர் அவர்தான்.

ராஜீவ் காந்தி, 'இந்தியப்படைகள் வேண்டும் என்று நீங்கள் நிச்சயமாக நினைக்கிறீர்களா? ஏனென்றால், இதனால் இந்தியா விமர்சிக்கப்படலாம். இலங்கை விமர்சிக்கப்படலாம்' என்று கூறியபோது, நான் அங்கிருந்தேன். 'நான் உங்களுக்கு முறையான எழுத்துமூலமான அழைப்பைத் தருவேன்' என்றார் அவர். 'முதலில் நாம் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவோம் பிறகு, கடிதம் அவசியம்தான் என்று நீங்கள் நினைத்தால் அதில் இந்த ஒப்பந்தம் திறமையோடு அமுல்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கு உங்களுக்கு படைகள் வேண்டும் என்று கேளுங்கள்' என்றார் காந்தி. ஆகவே இது ஒரு தனிப்பட்ட விசயமும்கூட.

***கேள்வி- புலிகள் எதிர்த்துப் போராடுவார்கள் என்று எதிர்பார்த்தீர்களா?***

*(பதிலுடன் மிகுதி அடுத்தவாரம்)*

# பௌத்த மதக்கோட்பாடும் 'சிங்கள பௌத்தமும்'

நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடப்பாடு, நல்லுள்ளத்தோர் தலைப்பாடு ஆகிய எண்வகையான தூயநெறிகளை உள்ளடக்கிய ஒரு மார்க்கமே பௌத்த மதமாகும். பௌத்த மதக் கோட்பாட்டின்படி துறவிகளாக இருப்போர் அவர்களது அடிப்படைத் தேவைகளான பிச்சைப் பாத்திரம், இரண்டு ஆடைகள், ஒரு சவரக்கத்தி, ஊசி நூல் ஆகியவற்றைத் தவிர ஏனைய பொருட்களை வைத்திருப்பதும் விலக்கப்பட்டுள்ளது. கௌதம புத்தர், பௌத்த கோட்பாட்டை நெறிப்படுத்தியபோது துன்பங்களைத் துடைத்து விடுதலையைக் காண்பதற்கே முக்கியத்துவம் கொடுத்தார். இதன் அடிப்படையில்தான் பௌத்த மதம் நான்கு பேருண்மைகளை உணர்த்துகிறது. அவையாவன: துன்பம் இது எனக் கண்டுகொள்ளல், துன்பம் தோன்றும் வகையும் காரணமும் அறிந்து தெளிவடைதல், துன்பம் நீங்கும் தன்மையை உணர்ந்துகொள்ளல், துன்பம் நீக்குவதற்கான நெறிமுறைகளை அறிந்து அதனைப் பின்பற்றுதல் ஆகியன.

ஏதேது- இவ்வாரம் அரசியல் அலசலுக்குப் பதிலாக பௌத்த மதக் கோட்பாடுகளை விளக்கும் வகையில் இப்பத்தி ஆரம்பிக்கப்படுகிறது என நீங்கள் சற்றுக் குழப்பமடைந்திருக்கலாம். பௌத்தத்தின் கோட்பாடுகளை நான் இங்கு குறிப்பிடவேண்டியதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. பௌத்த மதம் ஒரு தூய அறநெறியைப் போதிக்கும் ஒரு மதமாக இருப்பினும் சிறீலங்காவில் உள்ள பௌத்த துறவிகள் எவ்விதமான வாழ்க்கையை வாழ்ந்துவருகிறார்கள் என்பதை விளக்குவதற்கு பௌத்தத்தின் உண்மையான கோட்பாடுகள் பற்றி ஓரளவு தெரிந்திருப்பது அவசியமென்பதாலேயே இந்த விளக்கத்தை நான் கொடுத்தேன்.

மீண்டும் சிறீலங்கா பௌத்த துறவிகள் பக்கம் இப்போது பார்வையைத் திருப்புவோம். உண்மையிலேயே பௌத்தம் என்கின்ற நெறியினை பின்பற்றுவதற்கு அருகதையற்ற வகையிலேயே சிறீலங்காவின் 100க்கு 99 வீதமான பௌத்த துறவிகளும் இருக்கின்றார்கள். 'துன்பம் எதுவெனக் கண்டு அத்துன்பத்திலிருந்து மீளும் வழியையே பௌத்தநெறி வலியுறுத்துகிறது. ஆனால் சிறீலங்காவின் பௌத்த பிக்குகளுக்கும் அதன் பிரதான தலைமைத்துவங்களுக்கும் போரும், மனித உயிர் இழப்புக்களும், வேதனைகளும் கட்டிக்கரும்பாக இனிக்கும் ஒரு விடயமாகத்தான் இருக்கின்றது. தமிழ்த் தேசியத்திற்கெதிராக சிறீலங்காவின் அரசியல் தலைமைகள் ஏவிவிட்ட கொடிய போருக்கு காலங்காலமாக ஆதரவழிக்கும் விதமாகவே பௌத்த பீடங்கள் செயற்பட்டு வந்திருக்கின்றன - வருகின்றன. சிறீலங்காவின் அரசியலில் ஒரு விபரீதமான போக்கு ஒன்று எப்போதும் தொடர்ந்து வருவதென்றால் அது அந்நாட்டின் அரசியலும் பௌத்த மதமும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து வருவதுதான். தேர்ந்தெடுக்கப்படும் அரசியல் தலைமைகள் தாம் தேர்ந்தெடுக்கப்பட்டதும் முதலில் செய்யும் ஒரே ஒரு விடயம் பௌத்த தலைமைத்துவங்களிடம் ஆசி பெறுவதுதான். அதன்பின்னர் மதபீடங்களின் இழுப்பிற்கெல்லாம் வளைந்துகொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இந்த அரசியல் தலைமைத்துவங்களுக்கு இருக்கின்றது. சிறீலங்காவின் வரலாற்றினைப் புரட்டிப்பார்த்தால் பௌத்த மதபீடங்களைப் பகைத்துக்கொண்டு யாரும் ஆட்சி செய்ததாக சரித்திரம் கிடையாது. இது அந்நாட்டைப் பிடித்த ஒரு சாபக்கேடும்கூட. சகோதரத்துவத்தினைப் போதிக்க வேண்டிய மதத்துறவிகள் இங்கு வெறிகொண்டு தமிழர்களின் இரத்தத்தைக்குடிக்க ஆசைப்படுவது நவநாகரிக யுகத்தில் வெட்கித் தலைகுனியக்கூடிய ஒரு விடயமாக இருந்தாலும் சிறீலங்காவில் இதுதான் மதக் கலாச்சாரமாக வேரூன்றிவிட்டது.

> 'துன்பம் எதுவெனக் கண்டு அத்துன்பத்திலிருந்து மீளும் வழியையே பௌத்தநெறி வலியுறுத்துகிறது. ஆனால் சிறீலங்காவின் பௌத்த பிக்குகளுக்கும் அதன் பிரதான தலைமைத்துவங்களுக்கும் போரும், மனித உயிர் இழப்புக்களும், வேதனைகளும் கட்டிக்கரும்பாக இனிக்கும் ஒரு விடயமாகத்தான் இருக்கின்றது.

இப்போது நாம் இக்காலகட்டத்திற்கு வருவோம். நோர்வே நாடு அதன் சமாதான முயற்சிகளை ஆரம்பித்த கையோடு பௌத்த மத பீடங்கள் தமது வழமையான தமிழ்த் தேசிய விரோதப்போக்கினையும் வீச்சாக கக்க ஆரம்பித்துவிட்டன. 'விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்கள் கூடாது.' போர் மூலமே புலிகள் அழிக்கப்படவேண்டும்; என்பதையும் இம் மத பீடங்கள் அரசியல் தலைமைகளுக்கு வலியுறுத்துகின்றது. துன்பம் எது எனக் கண்டு அதிலிருந்து விடுபடும் முறையைப் போதிக்கும் பௌத்த மதத்தில் சிறீலங்காவின் பௌத்த துறவிகள் இரத்தம் சிந்தும் கொடூரமான போர் எவ்வித குறைவுமின்றி நடாத்தப்பட வேண்டும் எனக் கோருவதை பௌத்த மதத்தின் எப்பிரிவுக்குள் அடக்கிக்கொள்வது?

காலம் காலமாக தமிழ்த் தேசியத்திற்கெதிரான வகையில் செயற்படும் சிங்களப் பேரினவாதிகளுக்கு சிறீலங்கா பௌத்தம் 'கவசமாக' நின்று காத்துக்கொள்வதே அன்றிலிருந்து இன்றுவரை நடந்துவருகின்றது. பௌத்த மத பீடங்கள் சிங்களப் பேரினவாதத்திற்கு காப்புக் கவசமாக இருப்பதால்தான் பல பேரினவாதிகள் தமது தமிழர் விரோதப்போக்கிற்கு மதத்தினை ஒரு துருப்புச் சீட்டாக பயன்படுத்திவருகின்றனர். அன்றுதொட்டு இன்றுவரை பேச்சுவார்த்தை, சமாதானம் எனக் கதையளக்கும் சிறீலங்காவின் தலைமைகள் ஒரு முறை பீடாதிபதிகளைச் சந்தித்தாலே போதும் உடனே அவர்கள் தமது சுய ரூபத்தினை வெளிக்காட்டுவார்கள். இருதரப்பினரின் நோக்கமும் தமிழ்த் தேசியத்தை ஒடுக்குவதே நோக்கமென்பதால் இவ்விடயத்தில் அவர்களுக்குள் முரண்பாடு ஏற்பட்டுக்கொள்ளாது. ஆனால் கடந்த காலங்களில் சிறீலங்காவின் பௌத்த மதபீடங்கள் சந்தித்திராத ஒரு தலைமைத்துவம் தற்பொழுது தமிழர்களுக்கு இருப்பதால் இனிமேலும் அவர்களது வெறிக்கூச்சல்? எடுபடுமா என்பது சந்தேகமே. அந்த வெறிக்கூச்சலுக்கு வேண்டுமானால் சிங்கள அரசியல் தலைமைத்துவங்கள் செவிசாய்க்கலாம். ஆனால் எல்லைகள் கடந்து எதேச்சாதிகாரம் புரிவதற்கு சிங்களப் பௌத்த தலைமைப் பீடங்களுக்கு இனியும் சந்தர்ப்பம் வாய்க்குமா என்பது சந்தேகமே. பிரித் ஓதப்பட்டு காப்புநூல் கட்டப்பட்டு போருக்கு அனுப்பப்படும் சிங்களச் சிப்பாய்களுக்கு தற்பொழுது என்ன நடக்கின்றதென்பதை பௌத்த மத பீடங்கள் கண்ணாரக் கண்டுகொள்வது வெளிப்படையல்லவா!

**பேம்பி**

## தமிழ் மக்கள் சுதந்திரக் காற்றை சுவாசிக்க விரும்புகிறார்கள்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

டுக்களையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. காலக்கெடுக்களை நிர்ணயிப்பதே ஒரு நிபந்தனையை விதிப்பதாக முடியும். இந்த கால வரம்பிற்குள் விடுதலைப் புலிகளையும் உட்படுத்தலாம் என சந்திரிகா கருதுவாரானால் அவருக்கு ஏமாற்றமே காத்துநிற்கும். ஏனென்றால் நாம் அவரது கால அட்டவணைத் திட்டத்திற்குள் மாட்டிக்கொள்ளப் போவதில்லை. பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னராக தனது அரசியலமைப்புத் திருத்தங்களை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டுமென்ற நிர்ப்பந்தம் சந்திரிகாவுக்கு இருக்கலாம். பாராளுமன்ற ஆசனங்களில் அமர்ந்திருப்பவர்களுக்கும் அந்த நிர்ப்பந்தம் இருக்கலாம். ஆனால் விடுதலைப் புலிகள் ஒரு விடுதலை இயக்கம். சந்திரிகாவின் காலவரம்பிற்குள் செயற்பட வேண்டுமென்ற அரசியல் நிர்ப்பந்தங்கள் எதுவும் எமக்கில்லை.

**கேள்வி:-** தமிழரின் இனப் பிரச்சினையை தீர்ப்பது குறித்து சந்திரிகா அரசும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்று கூடி கலந்தாலோசித்துவருவது குறித்து?

**பதில்:-** தமிழரின் இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கு முட்டுக்கட்டைகளாக நின்று, பிரச்சினை இழுபடுவதற்கும் தீவிரமடைந்திருப்பதற்கும் காரணமான வரலாற்றுக் குற்றவாளிகளான இந்த இரு சிங்கள கட்சிகளும் ஒன்று கூடிக்கதைப்பது ஆக்கபூர்வமான விடயம். தமிழரைப் பொறுத்தவரை தென்னிலங்கைச் சிங்களக் கட்சிகள் ஒன்றுகூடிக் கலந்தாலோசிப்பது முக்கியமல்ல. இந்த சர்வ கட்சி கூட்டு முயற்சிகளும், இணக்கப்பாடுகளும் திம்புக்கோட்பாடுகளாக பிரகடனப்படுத்தப்பட்ட தமிழரின் தேசிய அபிலாசைகளை நிறைவுசெய்யும் ஒரு தீர்வுத் திட்டத்தை உருவாக்குமா என்பதுதான் முக்கியம். சந்திரிகாவின் சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் சாராம்சத்தில் சிங்களப் பேரினவாதக் கட்சிகள். இக் கட்சிகளது அரசியல் நலன்கள் சிங்களத் தொகுதிகளில் வேரூன்றிக் கிடக்கின்றன. இவ்விரு கட்சிகளுமாக இணைந்து பெரும்பான்மை சிங்களவரின் நலனைப்பேணும் வகையில், தமிழருக்கான அரசியல் அதிகாரத்தை மேலும் வெட்டிக் குறைத்து, தமிழரின் தாயகத்தை துண்டாடி, ஒரு இறுக்கமான ஒற்றையாட்சியை உருவாக்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இப்படியான ஒரு புதிய அரசியற் சட்டம் உருவாக்கப்படுமானால் சிங்களக் கட்சிகள் ஒன்றுபட்டதில் தமிழர்களுக்கு எவ்வித பலனும் ஏற்படப்போவதில்லை.

**கேள்வி:-** பௌத்த பீடாதிபதிகளின் எதிர்ப்புப்பற்றி?

**பதில்:-** தமிழரின் பிரச்சினையைத் தீர்க்க சிங்கள ஆட்சிபீடங்கள் முயற்சிகள் எடுக்கும்பொழுது பௌத்த மகாசங்கத்திலிருந்து எதிர்ப்புக் கிளம்புவது சிங்கள அரசியல் வரலாற்றில் ஒரு விபரீதமான புதிய நிகழ்வு அல்ல. பௌத்த குருமாரின் எதிர்ப்பால் ஒப்பந்தங்களும் உடன்பாடுகளும் கிழித்தெறியப்பட்ட வரலாற்றை எமது மக்கள் நன்கறிவர். இந்தக் கசப்பான வரலாற்று அனுபவம் காரணமாகவே பௌத்த பீடத்தின் கடும் எதிர்ப்பை அறிந்து தமிழ் மக்கள் மனமுடைந்திருக்கிறார்கள். பௌத்த மகாநாயக்க தேரர்களினதும் மற்றும் பௌத்த தீவிரவாத இயக்கங்களதும் எதிர்ப்பு சமாதான முயற்சிக்கு பெரும் இடறாக அமையும்.

**கேள்வி:-** நோர்வேயில் ஏற்பட்ட ஆட்சிமாற்றம் பற்றி?


**பதில்:-** நோர்வேயின் மத்தியத்துவ நிலைப்பாட்டிலும் கொள்கையிலும் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லையென புதிய நோர்வே அரசு உறுதியளித்திருக்கிறது. புதிய நோர்வே வெளிவிவகார அமைச்சரை விரைவில் சந்திக்கவிருக்கிறேன்.

**கேள்வி:-** பொதுவான மேற்குலக ஆய்வாளர்களினாலும் அதிகாரிகளாலும் தற்பொழுது நடைபெறும் ஆயுதப்போராட்டம் ஒரு சிக்கலான நிலைக்குள் அல்லது ஸ்தம்பிதமான நிலைக்குள் வந்துவிட்டது என்ற வாதம் முன்வைக்கப்படுகின்றதே? அவ் வாதத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ளுகின்றீர்களா?

> தமிழீழத்தின் கலாச்சார தலைநகரான யாழ்ப்பாணத்தை அடைவதே விடுதலைப் புலிகளின் இலக்காகும். விடுதலைப் புலிகள் அவ் இலக்கினை எட்டும்பொழுது சிங்கள இராணுவத்தினர் சிலவேளைகளில் அங்கு இருக்க மாட்டார்கள்.

**பதில்:-** இல்லை. நான் அவ் வாதத்திற்கு இணங்கவில்லை. மேற்குலக இராணுவ ஆய்வாளர்கள் உண்மையில் வடபுல கள நிலைமைகள் பற்றி சரியான விளக்கத்தை கொண்டிருக்கவில்லை. தற்பொழுது விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா இராணுவத்திற்கும் இடையே நிலப்பரப்பினை தக்க வைப்பதற்கான பெரிய போராட்டமே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. ஆனையிறவு, சாவகச்சேரி மற்றும் அரியாலைப் பிரதேசங்களில் விடுதலைப் புலிகள் சமரிடுவதுடன் தமது நிலப்பரப்புக்களை பலப்படுத்திக் கொள்வதிலும் தற்போது ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இதே நேரம் சிறீலங்கா இராணுவமும் யாழ்ப்பாணத்தில் உள்ள தமது நிலைகளுக்கு ஆபத்து வந்துவிடும் என்ற நோக்குடன் பெரிய அளவிலான துருப்பு நகர்வுகளை மேற்கொள்வதுடன் யுத்தத்திற்கான ஆயத்தத்தையும் செய்கின்றது.' பெரும் சமர் ஒன்று எந்தவேளையிலும் அங்கு வெடிப்பதற்கான சூழ்நிலையே தற்பொழுது இருக்கின்றது. எனினும் இச்சமர் பற்றி தீர்க்க தரிசனம் சொல்லுவது சற்றுக் கடினமானது என்றாலும், ஒன்றை மட்டும் நான் உறுதியாக சொல்கிறேன் விடுதலைப் புலிகள் யாழ். குடாவிற்கான பாதைகளை திறப்பதற்கு பெரும் பிரயத்தனம் செய்துவருகின்றார்கள். தமிழீழத்தின் கலாச்சார தலைநகரான யாழ்ப்பாணத்தை அடைவதே விடுதலைப் புலிகளின் இலக்காகும். விடுதலைப் புலிகள் அவ் இலக்கினை எட்டும்பொழுது சிங்கள இராணுவத்தினர் சிலவேளைகளில் அங்கு இருக்க மாட்டார்கள்.

இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வி சிந்துஷா நடராஜா, செல்வி காயத்திரி சிவலிங்கம், செல்வி.யே.சுயாதா, செல்வன் மகேஸ்வரன் முகுந்தன், செல்வி ஜெஷி தியாகராஜா, செல்வன் கே.ஈழமன்கரிகாலன் ஆகியோரை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.




## உங்கள் கைவண்ணம்



பெயர்: துவாரகா ரவி
வயது: 10 (09.12.1989)
இடம்: கொர்கைம் ரெக்
ஜேர்மனி

அங்.இல: G102

### விபுலாநந்த அடிகள்

விபுலாநந்த அடிகள் மட்டக்களப்பிலே காரைதீவு என்னும் ஊரிலே பிறந்தார். இவருடைய தந்தையாரின் பெயர் சாமித்தம்பி. தாயாரின் பெயர் கண்ணம்மை. உயர் திரு சுவாமிகள் இவருக்கு விபுலாநந்த அடிகள் என்னும் பட்டப் பெயரைச் சூட்டினார். இவர் எழுதிய நூல்களுள் யாழ்நூல் மிகவும் சிறந்தது. அவர் தம் 55ம் வயதில் 1947ம் ஆண்டில் 7ம் மாதம் 19ம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

## அறிஞர் முற்றம்

### குழந்தைகளுக்கு கதை சொன்ன ஈசாப்

சீ! சீ! இந்தப் பழம் புளிக்கும் என்று சொல்லிக்கொண்டே தனக்கு எட்டாத முந்திரிகைப் பழக்குலையை விட்டு ஓடிப்போன நரியின் கதை உங்களுக்குத் தெரியுமா. உலகத்தில் உள்ள எல்லா நாட்டுக் குழந்தைகளுக்கும் இக்கதை தெரியும். முதன் முதல் இக்கதையைச் சொன்னவர் ஈசாப் என்பவர். இவர் இதைப்போல பல கதைகள் சொல்லியிருக்கிறார். இவர் கிரேக்க நாட்டவர்; 2,500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர். முதலில் இவர் ஓர் அடிமையாக இருந்தாராம்; பிறகு விடுதலை பெற்று ஊர் ஊராகச் சென்று சிறுசிறு கதைகளைச் சொல்லி வந்தார். அவற்றின் மூலம் மக்களுக்கு நீதிகள் புகட்டி வந்தார்.

இவருடைய கதைகள் எல்லாம் சுவை நிறைந்து இருக்கும். இக் கதைகள் எல்லாமே இவர் சொன்னவையல்ல. இவற்றுள் பல ஏற்கெனவே இந்தியாவிலிருந்து கிரேக்க நாட்டுக்குச் சென்றவை. ஈசாப் இக்கதைகளை எழுதி வைக்கவில்லை. இவருக்கு 2,000 ஆண்டுகளுக்குப் பிறகு வாழ்ந்திருந்த பாதிரியார் ஒருவர் இவற்றையெல்லாம் தொகுத்து அச்சிட்டு வெளியிட்டார். ஈசாப் சொல்லாத கதைகள் பலவும் இத் தொகுப்பில் சேர்ந்துள்ளன. ஈசாப் கதைகள் இப்போது உலகில் எல்லா மொழிகளிலும் வெளிவந்துள்ளன.

## முல்லாவின் கதை படியுங்கள்


### குதிரையில் வந்தவர்கள்

முல்லா நஸ்ருதீன் ஊருக்கு வெளியே காலாற நடந்துகொண்டிருந்தார். எதிரே நான்கு குதிரைகள் வந்துகொண்டிருந்தன. அவற்றின் மீது திடகாத்திரமான இளைஞர்கள் நால்வர் உட்கார்ந்திருந்தனர்.

முல்லா குதிரை மீது வருபவர்களைப் பார்த்தார். உடனே அவர் மனம் 'வருபவர் யாராக இருக்கும்' என்று சிந்தித்தது.

'வருபவர்கள் குதிரை வீரர்களாக இருக்கலாம். அவர்கள் பகை வீரர்களாகவும் இருக்கக் கூடும். அவர்கள் என்னைப் பிடித்துக்கொண்டு, தங்கள் ஊருக்குப் போகக்கூடும். தங்கள் ஊரில் என்னை யாருக்கேனும் அடிமையாக விற்கக்கூடும்.'

முல்லா இப்படிக் கற்பனை செய்தவாறே, மீண்டும் குதிரைகளில் வருபவர்களைப் பார்த்தார். அவர் செய்த கற்பனை அவரை அஞ்சச் செய்தது. உடனே அங்கிருந்து வேகமாக ஓடினார். அருகே தெரிந்த இடுகாட்டில் ஒரு சமாதியின் பின்னே ஒளிந்துகொண்டார்.



குதிரையின் மீது வந்தவர்கள் படை வீரர்களல்ல. அவர்கள் இளம் வியாபாரிகள். அவர்கள், சாலையில் நின்ற ஒருவர் தம்மை முறைத்துப் பார்த்ததையும், பிறகு இடுகாட்டில் ஓடி ஒளிந்ததையும் கண்டார்கள். தம்மைப் பார்த்து ஒருவர் ஏன் பயந்து ஓட வேண்டும்? இதைத் தெரிந்துகொள்ள விரும்பி இடுகாட்டில் நுழைந்தார்கள். முல்லா எங்கே ஒளிந்திருக்கிறார் என்று தேடிக் கண்டுபிடித்துவிட்டார்கள்.

சமாதியின் பின்னே ஒளிந்துகொண்டிருக்கும் முல்லாவின் அருகில் நான்கு குதிரைகளும் நின்றன. ஒருவன், 'ஐயா, நீங்கள் ஏன் இங்கே வந்தீர்கள்?' என்று கேட்டான்.

குதிரையில் வந்தவர்கள் புகை வீரர்கள் அல்ல, படை வீரர்களும் அல்ல என்பதைத் தெரிந்துகொண்ட முல்லா, தாம் பயந்து வந்ததற்காக வெட்கப் பட்டார். என்றாலும் சாமர்த்தியமாகப் பதில் சொன்னார்.

'உங்களால் நான் இங்கு வந்தேன்! என்னால் நீங்கள் இங்கே வந்ததைப் போல!'

எப்படி முல்லாவின் பதில்!

## கவிதை முற்றம்

### முயல்




வெள்ளை
முயல் ஓடுது
வேகமாக ஓடுது
குள்ள முயல்
ஓடுது
குதித்துக் குதித்து ஓடுது.

முத்துப் போன்ற கண்ணினால்
மேலும் கீழும் பார்க்குது
தத்தித் தத்தி விண்ணிலே
தாவிக் குதிக்கப் பார்க்குது.

நெட்டையான காதையே
நீட்டி நீட்டி ஆட்டுது
குட்டையான வாலையே
குறு குறுன்னு ஆட்டுது!

- புவியரசன்

## கண்டுபிடியுங்கள்



இந்தப் படத்தில் எத்தனை வட்டங்கள் உள்ளன?
கண்டுபிடியுங்கள், முடியாவிட்டால் விடை அடுத்தவாரம்.

கடந்தவார விடை:

பத்திரிகை

1. பதி 2. பத்தி 3.பரி
4. பகை 5. பரிதி
6. பதிகை 7. பரிகை 8. பத்திரி 9. திரி
10. திரிகை 11. திகை 12. கை 13. கைதி.




- பி. சுவாமிநாதன்

விடைகள் படங்களிலேயே உண்டு.

# ஓயாத அலையென எழுந்திடுவீர் ஐ.நாவை நோக்கி

ஆண்டுதோறும் ஓகஸ்ட் மாதத்தில் ஐக்கிய நாடுகள் சபை(ஐ.நா) மனித உரிமைகள் உப ஆணைக்குழு கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது. அச் சமயம் புலம்பெயர் ஈழத் தமிழர் ஐ.நா.நோக்கி அணி அணியாகத் திரண்டு தமிழீழ மக்கள் படும் துயரங்களை வெளிப்படுத்துவதோடு, தமது தாயகத்தையும் விடுதலையையும் அங்கீகரிக்கக் கோரி சர்வதேச சமூகத்திடம் நியாயம் கோரி அழுத்தத்தைக்கொடுத்து வருகின்றன.

இவ் வருடம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உப ஆணைக்குழு நடைபெறும் ஓகஸ்ட் மாதத்தில் அல்லாது, ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு நடைபெறும் காலத்தில் ஏப்ரல் 3ம் திகதி பேரணி இடம்பெறுகிறது. ஓகஸ்ட் மாதத்தில் ஐ.நா மனித உரிமைகள் உப ஆணைக்குழு நடைபெறும்போது, மனித உரிமைகள் தொடர்பான நிபுணர்களே இவ் ஆணைக்குழுவில் கலந்துகொள்வர். நாடுகளின் பிரதிநிதிகளோ, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளோ இவ் உப ஆணைக்குழுவில் கலந்துகொள்வதில்லை, மாறாக மார்ச்-ஏப்ரல் மாதங்களில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில், ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளினது பிரதிநிதிகளும், ஐ.நா. சபையின் அங்கீகாரம் பெற்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொள்கின்றனர்.

இவ்வாறு அனைத்துலகின் மனித உரிமைகள் தொடர்பான பிரதி நிதிகள் ஒன்றுகூடும் தருணமே, தமிழீழ மக்கள்படும் துயரங்களையும், சிறீலங்கா அரசின் தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலையினையும் வெளிப்படுத்தி, தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் தார்மீக நியாயத்தினை அனைத்துலகம் உணர எடுத்துரைப்பதற்கு மிகப் பொருத்தமான தருணமும் என உணரப்பட்டமையால், இம்முறை பேரணி ஏப்ரல் 3ம் திகதி நடாத்தப்படுவதற்கு முக்கியமான காரணமாகும்.


புலம்பெயர்ந்த ஈழத் தமிழர் வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாக இந்த ஐ.நா. பேரணி உருப்பெற்றுவிட்டது. 'இந்த யுகம் எமது யுகம்' என்ற எமது தமிழீழத் தேசியத் தலைவரின் கூற்றுப்படி இம்முறை நடைபெறும் பேரணி 'இது எமது யுகம்...! ஓயாத அலையென எழுந்திடுவீர் ஐ.நா.வை நோக்கி' என்ற பதாகையின் கீழ் இடம் பெறவுள்ளது. மலர்ந்துவிட்ட இந்தப் புதுயுகத்தில் புலம்பெயர் ஈழத் தமிழரின் முதல் மாபெரும் நிகழ்வாக இந்நிகழ்வு இடம்பெறப் போகிறது.

எமது தாயகத்தில் எமது போராளிகளும், மக்களும் 'இப் புது யுகம் எமக்கானது' என்ற உறுதியுடன் தமது பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கின்றனர். சிறீலங்கா அரசின் கொடூரமான இராணுவ நடவடிக்கைகளையும் வெற்றிகரமாக எதிர்கொண்டு உயிர்ப்புடன் எமது தாயகத்தினை மீட்டெடுத்து வருகின்றனர். இத்தகையதொரு தருணத் தில், அனைத்துலகின் பிரதிநிதிகளும் ஜெனிவாவில் ஒன்றுகூடும் வேளையில், எமது மக்களின் நியாயங்களை, எமது தாயகத்தின் விடுதலைக் குரலை ஐக்கிய நாடுகள் சபையின் முன்னால் தமிழீழ மக்களின் பிரதிநிதிகளாய் நின்று ஓங்கி ஒலிக்கவேண்டியது புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களாகிய எமது கடமையல்லவா.

**ஏப்ரல் 3ம் திகதி ஜெனிவாவில்**
**ஒன்றுகூடுவோம்!**
**அனைத்துலகுக்கும் எமது தாயகத்தின்**
**குரலை ஓங்கி ஒலிப்போம்.**



## நாற்று







அதிகாலை 5 மணி. சேவல் கூவும் சத்தம் ஒன்று எங்கோ இருந்து காற்றில் மிதந்து வந்தது. சிவசேகர் படுக்கையை விட்டு எழுந்தார். அவர் மனதில் தினமும் நினைப்பதை இன்று வாய் முணுமுணுத்தது. தினமும் விடிகின்றதே நமக்கு எப்போது விடிவு கிடைக்கும். அவர் கண்களில் கண்ணீர்.

எல்லோரையும் போல் சிவசேகரும் அவர் மனைவி குழந்தையுடன் நாளை திரும்பி விடலாம் என்ற எண்ணத்தோடு உடுத்திய உடுப்புடன் ஒரு பொருட்களும் எடுக்காமல் இடம் பெயர்ந்துவந்தவர்தான். ஆனால் அவர் நினைத்தமாதிரி அடுத்தநாள் போக முடியவில்லை. அடுத்த மாதமும் போக முடியவில்லை. அன்று சாவிற்குப் பயந்து அந்தப் பெரிய வீட்டை விட்டு வந்து இன்று நித்தமும் சாகும் வாழ்க்கை தேவையா? என்று தினமும் தன்னைத் தான் கேட்கும் கேள்வி இன்றும் அவர் மனதில் எழுந்தது.

நான்கு வயது நிரம்பாத ஒரு சிறு குழந்தையின் சத்தம் அவர் நினைவலையை அறுத்தது. அவர் கால்களைச் சுற்றிக்கொண்டிருந்த அவரது மகள் மீனா ஏக்கத்துடன் தந்தையைப் பார்த்தபடி 'அப்பா பசிக்குது. அப்பா நேற்றைக்கு பசிக்குதென்று அம்மாவிடம் கேட்டேன். அதற்கு அவர் இன்று இந்தப் பாணைச் சாப்பிடம்மா! நாளை நிச்சயமாகச் சோறு தருவேன் என்று கூறிவிட்டு இன்று ஏன் இன்னும் சமைக்கவில்லை' என்று பயத்துடன் கேட்ட அந்தக் குழந்தையைத் தூக்கி இறுக அணைத்துக்கொண்டார். அவர் கண்களில் கண்ணீர் வழிந்தது. 'இன்று உனக்கு அம்மா சோறு தருவார்கள் என் மகளே' என்றார். நிஜமா என்று கண்கள் படபடக்கக் கேட்டவள் சந்தோசத்துடன் இறங்கி ஓடினாள்.

மகளிடம் உறுதி கூறி விட்டோமே அதை எப்படி நிறைவேற்றுவது என்று அவர் 'மனம் ஏங்கியது. ஆனால் எப்படியும் அதை நிறைவேற்றிவிட வேண்டும். 'இது அவர் மனதில் உடனே எடுத்த சபதம்'

முகம் கழுவி விட்டு அந்த ஓலைக் குடிசையினுள்ளே சென்றார். அவரது மனைவி செண்பகம் முகட்டைப் பார்த்தபடி சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். அவள் கண்களில் கண்ணீர்த் துளிகள் அரும்பி இருந்தன. மீனா அவள் அருகில் அமர்ந்து விளையாடிக் கொண்டிருந்தாள். மனைவியின் பார்வை இவர் பக்கம் திரும்பியது. உடனே கண்களை அவசரமாகத் துடைத்தவள் முகத்தில் சிரிப்புடன் 'இல்லையில்லை அது கட்டாயமாக கணவன் மனம் நோகாமல் இருப்பதற்காக வரவழைத்த சிரிப்பு' மனைவியைப் பார்த்தபடி ஒரு கிழமையில் எப்படிக் கஸ்ரப்பட்டாலும் மூன்று நாட்கள்தான் வேலை கிடைக்கின்றது. உனக்கும் என் மகளுக்கும்கூட நல்ல உணவு தர வழியில்லாமல் போய்விட்டதே என்று அவர் தழுதழுத்த குரலில் கூற 'என்னங்க வெளிநாடு சென்றவர்கள் எல்லாம் புண்ணியம் செய்தவர்கள். நாம் தான் மாட்டுப்பட்டுவிட்டோம். பேசாமல் மூன்றுபேரும் நஞ்சை அருந்திவிடுவோம் என்று சேலைத் தலைப்பில் முகம் புதைத்து விம்மினாள்' இல்லையில்லை நாம் ஏன் சாகவேண்டும் நாம் என்ன கோழைகளா? இப்படி ஒவ்வொரு தமிழனும் நினைத்தால், நாளை இந்த மண்ணில் தமிழ் இனமே அழிந்துவிடும். எல்லோரும் பயந்து வெளிநாடு என்ற பெயரில் ஓடி மறைகின்றார்கள். ஆனால் அவர்கள் கூட ஒரு சிறு நம்பிக்கையுடன்தான் போகின்றார்கள். 'ஒருநாள் இல்லை ஒருநாள் மீண்டும் நம் தாய் மண்ணில் கால் பதிப்போம்' என்ற ஆசையில் அங்கு சென்று எவ்வளவு தூரம் பாடுபட்டு உழைக்கின்றார்கள் எந்த நாட்டிற்குப் போனாலும் நம் நாட்டில் உள்ள சுதந்திரம் எந்த நாட்டிலும் கிடைக்காது. அங்கு அவர்களுக்கு நரக வாழ்க்கைதான். தாயைப் பிள்ளை பார்க்காமலும், தகப்பன் பிள்ளைகளுடன் அன்பாக நாலு வார்த்தை கூட பேச முடியாத வாழ்க்கை. எந்த நேரமும் வேலை. ஆகையால் அவர்கள் புண்ணியம் செய்தவர்கள் என்று சொல்லாதே. என்று தன் கோப அனலை மனைவியின் மீது வீசி எறிந்தார். பயத்துடன் பார்த்த மனைவியை கனிவுடன் பார்த்தார். அவள் என்ன செய்வாள் என்று அவர் மனம் கூறியது.

நேரம் 9 மணியாகிவிட்டது. வேலை தேடப் புறப்பட்டார். ஒவ்வொரு இடத்திலும் வேலை கேட்டவர் ஏமாற்றத்துடன் திரும்பினார். சூரியன் கீழ் வானத்தை நோக்கி மறையத்தொடங்கி விட்டது. தன்னிச்சையாக மணிக்கூட்டைப் பார்த்தவர் ஓ! ஆறு மணியாகி விட்டதே என்று மனதில் கூறிக்கொண்டார். அப்போது அவர் மனம் தன் வீட்டை நோக்கிச் சென்றது. அவருக்குத் தன் வீடு செல்லவே மனம் இல்லை. போனால் தன் பிள்ளை ஆவலுடன் தன்னைப் பார்க்கும். என் கையில் ஒன்றுமே கொண்டு வரவில்லை என்று தெரிந்தவுடன் அந்தச் சின்னஞ்சிறு விழிகளில் கண்களில் கண்ணீர் துளியிடும். அதைப் பார்க்க அவருக்கு மனம் இல்லை. இப்படியே மனம் எதைஎதையோ எண்ண அவர் கால்கள் தன் பாட்டிற்கு நடந்தன. சோர்வுடன் நடந்தவரை ஒரு வீட்டில் இருந்து வந்த குரல் தடுத்து நிறுத்தியது.

'இதுதான் சொன்னேன் படித்தவர்களை வேலைக்குச் சேர்க்கக்கூடாது என்று. சொன்னால் கேட்டால்தானே. சொந்தம் என்று சொன்னாய். நாளை வீடு கட்டத் தொடங்குவதாக உறுதி கூறிவிட்டேன். ஆனால் இன்று வந்து நாளை தான் கணக்காளராக பணிபுரிய ஒரு நிறுவனத்தில் வேலைக்குப் போவதாகக் கூறிவிட்டான். நாளை நான் மட்டும் தனியாக எப்படி வேலையைத் தொடங்குவேன். உதவிக்கு ஓர் ஆள் வேண்டும். யாரை அழைப்பது என்று ஆத்திரத்தில் தொடங்கி புலம்பலில் முடித்தார் அந்த வீட்டுப் பெரியவர்.'

உடனே சிவசேகரின் முகத்தில் பிரகாரம். அவர் கைகள் படலையைத் தட்டின. 'யாரது' என்று குரல் கேட்க உள்ளே சென்ற அவரை ஆச்சரியத்துடன் பார்த்த பெரியவர். 'யார் நீங்கள்' என்று கேட்டார். என்னுடைய பெயர் சிவசேகர், எனக்கு யாராவது வேலை தரமாட்டார்களா என்று காலையிலிருந்து அலைகிறேன். ஆனால் எல்லா இடங்களிலும் ஏமாற்றம்தான். எனது வீட்டில் எனது மனைவியும் மகளும் இரண்டு நாட்களாகச் சரியான உணவு இல்லாமல் இருக்கிறார்கள். இன்று அவர்களுக்கு என்ன பதில் சொல்லப்போகின்றேன் என்று தெரியாமல் சிந்தித்தபடி வந்தேன். நீங்கள் பேசிக்கொண்டிருந்ததை நானும் கேட்டேன். தயவுசெய்து அந்த இடத்தை எனக்குக் கொடுத்துவிடுங்கள், இடையில் நிறுத்தமாட்டேன்' என்று கண்களில் கண்ணீர் மல்கக் கேட்டார். அவரைக் கூர்ந்து நோக்கிய பெரியவருக்கு உடனே அவர்மேல் இரக்கம் பிறந்தது. 'நாளை முதல் வேலைக்கு வந்துவிடுங்கள். நான் எங்கு வேலை செய்தாலும் நீங்களும் என்னுடன் வரலாம்' என்றவர், தன் மனைவியை நிமிர்ந்து பார்த்தார். அந்தப் பார்வையின் அர்த்தம் புரிந்தவள் உடனே உள்ளே சென்று 100 ரூபாய் பணத்தைக்கொண்டுவந்து கொடுத்தாள்.

மகிழ்ச்சியுடன் அதைப் பெற்றுக்கொண்டவர் தனது இருப்பிடத்தை நோக்கி ஓட்டமும் நடையுமாகச் சென்றார்.

காலையில் சென்றவரை இன்னும் காணவில்லையே என்று வீட்டுத் திண்ணையில் கவலையுடன் அமர்ந்திருந்தவளுக்கு, ஓர் உருவம் தூரத்தில் அவர்கள் குடிசையை நோக்கி ஓட்டமும் நடையுமாக வருவது தெரிந்தது. அது வேறுயாருமில்லை, சிவசேகரின் உருவம்தான். தங்களை நோக்கி ஓடிவருவதையும் கையில் ஏதோ பொருட்கள் கொண்டு வருவதையும் பார்க்க அவர்களில் முகம் மலர்ந்தது. 'அம்மா அப்பா வந்துவிட்டார் என்றபடி தந்தையை நோக்கி மீனா துள்ளி ஓடினாள்.' தன்னை நோக்கித் துள்ளி ஓடிவந்த மகளை அள்ளி அணைத்தவர், இனி உனக்கு வேண்டியதை எல்லாம் வாங்கித்தருவேன், அம்மா தினமும் நல்ல உணவு உனக்குத் தருவா என்று கூறி மனைவியைப் பார்த்து புன்னகை புரிந்தார்.

வரும் வழியில் கடையில் வாங்கிய பொருட்களையும் மிகுதிப் பணத்தையும் மனைவியிடம் கொடுத்தார். அதைப் பெற்றுக்கொண்டவள் தன் மனதில் எழுந்த கேள்விகளை அடக்கிக்கொண்டு சமையற் கட்டைநோக்கிச் சென்றாள்.

முகம் அலம்பிவிட்டு வந்தவர், தன் மனைவி கொடுத்த தேநீரைச் சுவைத்துக் குடித்தபடி மகள் மீனாவுடன் விளையாடினார்.

சிறிது நேரத்தில் சமையலை முடித்த பின் மகளுடன் விளையாடும் சிவசேகரது முகத்தில் என்றுமிலாதவாறு புன்னகை நிரம்பி வழிவதைப் பார்த்தவள் முகத்திலும் புன்னகை மலர, அவர்களை உணவருந்த அழைத்தாள்.

உணவு உண்டு முடித்த பின் . வழக்கம்போல் வீட்டுத் திண்ணையில் மகளைத் தன் மடியில் படுக்க வைத்தபடி நிலாவைப் பார்த்த வண்ணம் அமர்ந்திருந்தார். தன் வேலையை முடித்துவிட்டு அவர் பக்கத்தில் வந்து அமர்ந்துகொண்ட மனைவியிடம் 'அன்று வேலை கிடைத்த விதத்தையும் அவர்கள் பணம் தந்து அனுப்பியதையும் மிக்க மகிழ்ச்சியுடன் கூறினார். அதை ஆவலுடன் கேட்டவள் இந்தக் காலத்தில் இவ்வளவு நல்ல மனிதர்களா என்று வியந்தாள்.

தன் மகளைத் தூக்கியவர் மனைவியுடன் நாளைய விடியலின் நம்பிக்கையுடன் அந்தச் சிறிய குடிசையினுள்ளே புகுந்தார்.

(முற்றும்)

கி.சோபா.

# கவிக்களம்

## செம்மணி

உங்களுக்கு
தெரிகிறதா - என்
மௌனத்தின்
சோகம்...?

அன்றைய
நாட்கள் - எப்படி
மறக்கும்.....?

உப்பி...விழி
பிதுங்கிய
முகங்களை....

கை கால்கள்
நொருக்கப்பட்டு...
நொருக்கப்பட்ட
கைகள் கட்டப்பட்டு...
உடல் இரத்த
பிண்டமாகி...
நிலத்தோடு
இழுத்து வரப்பட்ட
என் தேசத்தவரை
எப்படி மறக்க...?

இருள்கூட
இறுகிப் போன
அந்த நடு நிசியில்...
ஆட்காட்டி
குருவிகூட
வரத் தயங்கிய - அந்த
இராத்திரியில்...
என் வெளிக்கு
உடல்களோடு...
அவர்கள்
வந்தார்கள்...!

வாகன வெளிச்சத்தில்
என்னில் - ஆங்காங்கே
குழிகள் வெட்டினர்...

இறந்துபோன
உடலங்களை...
குற்றுயிராய்
மூச்சிழுத்து
முனகிய எம்மவரை....

அம்மாவை....
மனைவியை....
குழந்தையை....
சொல்லி அழுதவர்களை....

கை கூப்பி
சப்பாத்து கால்களின்
மீது வீழ்ந்தவர்களை...!
பயனின்றி
அண்ணார்ந்து
மேகத்தை பார்த்து
கதறியவர்களை...
எப்படி மறக்க....!

குழியின் மேல்வர
முயல...
சப்பாத்து கால்களால்
உதையப்பட்டவர்களை..
குழியில் மண்
விழ விழ
திமிறி திமிறி
அசைந்த - அந்த
மானுடங்களை....
முழுமையாய்
மூடும்வரை
ஈனமாய்
முனகிய - என்
ஊரவரை....

எப்படி மறக்க ?
வெப்பியாரம்
மேலிட
என் மீது
உப்புக் காற்று
மூசி அடித்தது
பின்...
அடங்கி போனது
என்னில்
புதைந்த
என்னவரின்
மூச்சைப்போல...

என் கண்கள்
கொப்பளிக்க
கருமேகத்திற்குள்
முகம் புத்தைத்து
அழுதேன்
மழைத்துளிகளாய்...
அவர்கள் வண்டிகள்
கண்டிவீதியால்
போய்க்கொண்டிருந்தன...
கொலைவெறி இன்னும்
அடங்கவில்லை...

***- யாழ்பாடி காந்தன்***
***லண்டன்.***

## மூச்சு இழந்துவிடவில்லை

***இளமே!***
***இளைத்து விட்டாயா?***
***இடம்மாறி, இடம்மாறி***
***இடம்மாறிய***
***நிகழ்வுகளால் - நீ***
***இளைத்துவிட்டாயா?***
***உதைபட்டு, உதைபட்டு***
***உருண்டு நெளிந்து***
***இதைவிட***
***இனியென்ன***
***இடமாற்றம்?***
***அது ஒரு காலம்!***
***தொடர்ந்ததும்***
***தொடர்வதும் உன்னால்தானாம்...***
***இனி வரும் காலம்***
***உன் கையில் என்கிறது***
***காற்று***
***'காற்று இன்னும் மூச்சு இழந்துவிடவில்லை.***
***காலம் சொல்லிற்று!!***

***- எஸ் ஈஸ்வரதாசன்***
***லண்டன்.***

# கடந்த நூற்றாண்டு கண்ட இரு பெரும் போர்கள்

கடந்த வாரம் இப் பத்தியில் முதலாம் உலகப்போர் தோன்றுவதற்கான காரணங்கள் சிலவற்றைப் பார்த்தோம். அவற்றுடன் வேறும் சில காரணங்கள் முதலாம் உலகப்போர் தோன்றுவதற்கான நிலைமையினைத் தோற்றுவித்தன. இக்காரணங்கள் நாடுகளுக்கிடையே வெறுப்பையும் கசப்பினையும் உருவாக்கிப் பெரும் போர் ஒன்று வெடிப்பதற்கான நிலைமையினைத் தோற்றுவித்திருந்தாலும் போர் நிலைமையானது நீறு பூத்த நெருப்பாகத்தான் இருந்தது. ஆனால் ஒஸ்திரியா நாட்டில் ஏற்பட்ட ஒரு பிரச்சினை போர் ஒன்றினைத் தோற்றுவிக்க உடனடிக் காரணமாக அமைந்துவிட்டது. இவ்வாரம் அதனைப் பார்ப்போம்.

### மொறோக்கோ பிரச்சினை

முதலாம் உலகப்போர் வெடிப்பதற்கு முன்னர் வட ஆபிரிக்க நாடான மொறோக்கோவினை தன்னாட்சிக்குட்படுத்த பிரான்ஸ் விரும்பியது. ஆனால் பிரான்சின் இவ் விருப்பத்திற்கு ஜேர்மனியின் இரண்டாம் கெய்சர் வில்லியம் முட்டுக்கட்டையினைப் போட்டது மட்டுமல்லாது மொறோக்கோவினை அவர் ஒரு சுதந்திர நாடாக்க விரும்பினார். இந்த நிலையில் மொறோக்கோவில் ஏற்பட்ட உள் நாட்டுக் கிளர்ச்சியைப் பயன்படுத்தி அங்கு அமைதி நிலையை உண்டாக்கும் விதத்தில் பிரான்ஸ் தன் செல்வாக்கைப் பிரயோகிக்க முனைந்தது. இதன் அடிப்படையில் பிரெஞ்சுத் துருப்புக்கள் மொறோக்கோவின் தலைநகருக்கு அனுப்பப்பட்டன. பிரான்ஸ் தனது படைகளை அனுப்பியதைக் கண்ட ஜேர்மனிக்குத் தானும் படைகளை அனுப்ப வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. ஜேர்மனியும் தனது துருப்புக்களை மொறோக்கோவிற்கு அருகிலுள்ள அகாதீர் துறைமுகப் பிரதேசத்திற்கு நகர்த்தியது. இவ்வேளை ஏற்கனவே ஜேர்மனிமீது காழ்ப்புக் கொண்டிருந்த பிரித்தானியாவும் இதுதான் சந்தர்ப்பம் என நினைத்து பிரெஞ்சுத் துருப்புக்களுக்கு ஆதரவாகத் தனது படைகளையும் அனுப்பியது. தனக்கெதிரான சிக்கல்கள் வளர்வதைக்கண்ட ஜேர்மனி மொறோக்கோ விடயத்தில் அடக்கி வாசிக்க நினைத்து, அகாதீர் துறைமுகப்பகுதிக்கு அனுப்பப்பட்ட, தனது துருப்புக்களை மீளப் பெற்றுக்கொண்டது. ஆயினும் ஜேர்மனியின் மனதில் பிரான்சை வஞ்சம் தீர்க்கும் எண்ணத்தினை இந்த நிலைமைகள் மேலும் வளர்த்துவிட்டன.

### 'லொறைன்' பிரச்சினை

முதலாம் உலகப்போர் தொடங்குவதற்குப் பல தசாப்தங்களிற்கு முன்னரே பிரெஞ்சு - பிரசியா போர் வெடித்தது. இப்போர் நடைபெற்ற காலம் 1870ம் ஆண்டிலிருந்து ஒரு வருட காலப்பகுதியாகும். இந்தப் போரின்போது பிரான்சின் வளங்கொழிக்கும் 'அல்ப்ஸ் - லொறைன்' ஆகிய பிரதேசங்கள் ஜேர்மனின் கரங்களில் வீழ்ந்தன. ஜேர்மனிக்கு இப்பிரதேசங்கள் 'பொன் முட்டையிடும் வாத்துக்கள்' போலத் தென்பட்டதால் லொறைன் பகுதியிலிருந்து ஜேர்மனி பெருமளவு ஆதாரத்தினைத் தேடிக்கொண்டது. தனது பகுதியான லொறைன் மூலம் ஜேர்மனியின் பொருளாதாரம் வளர்ச்சியடைவதைக் கண்ட பிரான்சிற்கு கவலை மட்டுமல்ல, ஆத்திரமும் தலைதூக்கியது. மீண்டும் இப்பகுதிகளைப் பெறத்தக்க தருணம் ஒன்றினைப் பிரான்ஸ் எதிர்பார்த்துக்கொண்டிருந்தது.

### இத்தாலியின் ஆதிக்க அவா

போருக்கு முன்னர் முக்கூட்டு உடன்படிக்கைகளில் அங்கம் வகித்த இத்தாலிக்கு அதிக நாடுகளைக் கைப்பற்றவேண்டும் என்ற மண்ணாசையும் ஆதிக்கவெறியும் தலைதூக்கியது. இதனால் போரின் மூலமாக அதிக நாடுகளைத் தான் கைப்பற்றிக் கொள்ளலாம் என்ற நினைப்பில் 1915ம் ஆண்டு நேச நாடுகளுடன் இத்தாலி உறவு கொண்டது. இந்த உறவின் அடித்தளமே இத்தாலிக்கு இருந்த ஆதிக்கப் பேராசைதான். இத்தாலியின் இந்தப் பேராசையும் முதலாம் உலகப் போருக்கு ஒரு காரணமாக அமைந்தது.

மேற்கூறப்பட்ட காரணங்கள் முதலாம் உலகப்போரினை உருவாக்குவதற்கான நிலைமையினை நீறு பூத்த நெருப்பாகத் தோற்றுவித்தாலும், போர் வெடிப்பதற்கான உடனடிக் காரணம் ஒஸ்திரியா நாட்டு வடிவில் வந்தது.

1914ம் ஆண்டு யூன் மாதம் 28ம் திகதியன்று ஒஸ்திரியா நாட்டினை உலுக்கும் விதத்தில் ஒரு சம்பவம் நடைபெற்றது. இளவரசர் பேர்டினன்ட்டையும் அவரது துணைவியாரையும் சேர்பியாவைச் சேர்ந்த ஒரு நபர் படுகொலை செய்துவிட்டார். ஒஸ்திரியாவிற்கு தனது மண்ணில் நிகழ்ந்த இக்கொலை சேர்பியா மீது பெரும் ஆத்திரத்தைத் தோற்றுவித்தது. எனவே இக்கொலையினைக் காரணமாகக்கொண்டு சேர்பியாவை அழிப்பதற்காக ஒஸ்திரியா போர் ஒன்றினைத் தொடங்க பெரும் அழிவுகளுக்கும் இழப்புக்களுக்கும் காரணமான முதலாம் உலகப்போரும் வெடித்துக் கிளம்பியது.

ஒஸ்திரியா சேர்பியாமீது போரைத்தொடுக்க, சேர்பியாவிற்கு ஆதரவாக ரஷ்யா போரில் குதித்தது. ஜேர்மனி ரஷ்யாவிற்கு எதிராகத் தனது படைகளைக் குவிக்க, பிரான்ஸ் ரஷ்யாவிற்கு ஆதரவை அளிக்க முன்வந்தது. இந்த நிலை ஜேர்மனிக்கும் பிரான்சிற்கும் இடையேயான போர் ஒன்றிற்கும் வித்திட்டது. ஏறக்குறைய அனைத்து நாடுகளும் போரிலே தீவிரமாக இறங்க நடவடிக்கைகளை மேற்கொண்டன.

1839ம் ஆண்டு பிரித்தானியத் தலைநகர் லண்டனில் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டது. லண்டன் உடன்படிக்கையென அழைக்கப்படும் அவ் உடன்படிக்கையில் பெல்ஜியம் நடுநிலைமையினைக் கடைப்பிடிக்கும் ஒரு நாடென அனைத்து ஐரோப்பிய நாடுகளும் முடிவு செய்ததுடன் பெல்ஜியத்திற்கு தாக்குதலில் இருந்து விலக்களிக்கவும் தீர்மானித்திருந்தனர். ஆனால் முதலாம் உலகப்போர் வெடித்த வேளையில் ஜேர்மனி இந்த ஒப்பந்தத்தை மதிக்காது பெல்ஜியத்தின் மீதுகூட அது போரினைத் தொடுத்தது. ஜேர்மனியின் இந்த நடவடிக்கை அனைத்து ஐரோப்பிய நாடுகளுக்கும் அதிர்ச்சியினையும் ஆத்திரத்தினையும் தோற்றுவித்தது. பிரித்தானியா இதில் முன்னணி வகித்ததுடன் ஜேர்மனியை அது எதிர்க்கவும் முடிவு செய்தது. இப்போது உலகப்போர் முழுமூச்சாக ஆரம்பித்துவிட்டது. அனைத்து வல்லரசு நாடுகளும் இப்போரில் பங்குகொண்டதனால் உலகின் மக்கள் தொகையில் ஏறக்குறைய 93 சதவீதமானோர் இப்போரில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்கெடுத்துக்கொண்டனர். மிகக் கொடுமையான முறையிலும், கடுமையான முறையிலும் போர் நடைபெற உலகமே அதுவரை அனுபவித்திராத இன்னல்களைச் சந்திக்கத்தொடங்கியது.

முதலாம் உலகப்போருக்கு முதல் நடைபெற்ற போர்களில் பயன்படுத்தப்பட்ட ஆயுத தளபாடங்களை விட மிக நவீனரகமான ஆயுத தளவாடங்கள் இப்போரில்தான் பயன்படுத்தப்பட்டன. பீரங்கி வண்டிகளும், இயந்திரத் துப்பாக்கிகளும், வான்படைகளும், நச்சுவாயுப் பிரயோகமும், தொலைதூரப் பீரங்கிகளும், நீர்மூழ்கிக் கப்பல்களும் போர் ஒன்றில் பயன்படுத்தப்படுவதை உலகம் அப்போதுதான் முதன்முறையாகப் பார்த்தது.

அடுத்தவாரம் போரின் போக்குப் பற்றிப் பார்ப்போம்.

**- சீ.பி.**

*இப் பத்தியில் வாரம் ஒரு நாடாக, உலகில் அகரவரிசைப்படி அமைந்துள்ள நாடுகள் அனைத்தினதும் முழுமையான விபரங்கள் வெளிவருகின்றன.*




# ஆப்கானிஸ்தான்

தென்மேற்கு - மத்திய ஆசியாவில் மலைப்பிரதேச, பாலைவன நாடாக உள்ளது. ஆப்கான் இஸ்லாமிய குடியரசு என அழைக்கப்படும் இதன் எல்லைகளாக வடக்கே துருக்மெனிஸ்தான், உஸ்பெகிஸ்தான், தஜிக்கிஸ்தான் போன்றவையும், கிழக்கே பாகிஸ்தானிய காஸ்மீர், சீனா, தெற்கே பாகிஸ்தான், மேற்கே ஈரான் போன்றவை உள்ளன. ஆப்கானிஸ்தானுக்கு மிக அருகில் உள்ள கடல் 480 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள பாகிஸ்தானின் அரபுக்கடல்தான். 18ம் நூற்றாண்டில் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் பலவித இன மக்களாலும் கலப்புக் கலாச்சாரங்களாலும் இது பிரிவடைந்திருந்தது. கிழக்கிற்கும் மேற்கிற்கும் ஓர் கலாச்சார பாரம்பரிய தொடர்புகளை ஏற்படுத்தும் ஓர் நாடாகவும் ஆப்கானிஸ்தான் இருந்தது.

இதன் பரப்பளவு 652,000 சதுரக் கிலோ மீற்றர்களாகும். 1997ம் ஆண்டு செய்யப்பட்ட கணிப்பின்படி அந்நாட்டின் சனத்தொகை 23,738,085 ஆக இருந்தது. ஆப்கானிஸ்தானின் ஐந்தில் நான்கு பகுதிகள் பெரும் மலைகளை கொண்டவையாகவும் அத்துடன் வேறுசில பகுதிகள் பாலைவனங்களைக் கொண்டதாகவும் உள்ளன. ஆப்கானிஸ்தானின் கிழக்கே வாக்கான் வழி எனப்படும் குறுகிய கணவாய்ப்பகுதியில் உள்ள நௌசாக் மலையுச்சி 7485 மீற்றர்கள் உயரங்கொண்டது. இதுவே அதிகமாகன உயரம் கொண்டதுமாகக் கருதப்படுகிறது. ஆப்கானிஸ்தானில் ஏராளமான நதிகள் ஓடுகின்றபோதிலும் அநேகமானவை குளிர்காலத்தில் உறைந்துபோகின்றன. வடபகுதியின் எல்லையினூடாகப் பாயும் அமுதார்யா நதி, நாட்டின் அகலம் கூடிய நதியாக கணிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், தென்மேற்கே பாயும் கெலமென்ட் நதி நீளமான நதியாகும். காபூல்நதி காபூல், ஜெரளாபாத் போன்ற பகுதிகளில் உள்ள நிலப்பரப்புகளுக்கும் பள்ளத்தாக்குகளுக்கும் நீரை வழங்கிச் செல்கின்றது. ஆப்கானிஸ்தானின் காலநிலை நிரந்தமானதொன்றல்ல. குளிர்காலத்தில் அங்கு அதிகளவு மழை பெய்கின்றது. பாலைவனப்பகுதிகள் வருடாந்தம் 10 சென்ரி மீற்றர் மழையைப் பெறும் அதே வேளை, மலைப்பகுதிகள் 100 செ.மீற்றருக்கும் அதிகமான மழையைப் பெறுகின்றன. குளிர் காலத்தில் மலைப்பகுதிகளில் வெப்பநிலை சாதாரண அறை வெப்பநிலையில் இருந்து (-18°) சென்ரிகிறேட்டாக குறைவடையும் அதே வேளை கோடை காலத்தில் 46° முதல் 50° சென்ரிகிரேட் வரை வெப்பநிலை உயர்ந்து செல்வதுண்டு. அதைவிட மேற்கு பகுதியினூடாக வீசும் வெப்பம்கூடிய காற்றானது பாலைவனப் பகுதியில் இருந்து பெருவாரியான மணலையும், புழுதியினையும் கொண்டு வருவதுண்டு. ஆப்கானிஸ்தானின் காலநிலைக்கு ஏற்றவகையில் தென்பகுதியில் ஒருசிலவகை மரங்களே வளருகின்றன. ஆனால், வடக்கே ஏராளமான பெரு மரங்கள் உட்பட செடிகள், கொடிகள் வளருகின்றன.

ஆப்கானிஸ்தானில் சுமார் 200ற்கு மேற்பட்ட தாவர வகைகள் அவதானிக்கப்பட்ட போதிலும் அநேகமானவை மிகவும் அருகியே காணப்படுகின்றன. அதேபோல் 123 வகை மிருகங்கள் அங்கு அவதானிக்கப்பட்டுள்ளன. ஆனால், தற்போது சிறுத்தை, மான், மரை, ஆடுகள், மாடுகள் மற்றும் சிறு விலங்குகளும் மாத்திரமே காணப்படுகின்றன. அதேபோல் 460 வகைப் பறவைகள் ஆப்கானிஸ்தானில் உள்ளபோதிலும் அநேகமானவை அழிந்துகொண்டு வருகின்றன. அவற்றுள் சைபீரிய வாத்து வகைகளும் அடங்கும். ஆப்கானிஸ்தானில் மாணிக்கக்கல், தங்கம், செம்பு, நிலக்கரி, இயற்கைவாயு போன்றவை சேமிப்பில் உள்ளன. அந்நாட்டில் முந்திரிகை, அரிசி, உருளைக்கிழங்கு, பார்லி போன்ற தானியவகைகள் விளைவிக்கப்படுகின்றன. நாட்டின் நாணயமாக ஆப்கானி உள்ளது.

ஆப்கானிஸ்தானின் 99 வீதமான மக்கள் இஸ்லாமியர்களாக உள்ளனர். மிகுதியானவர்களில் இந்து, சீக், யூத இன மக்கள் குறிப்பிடத்தக்கவர்கள். 80 வீதமான மக்கள் பாஸ்ரோ, டாரி மொழிகளை பேசுகின்றார்கள். பெரும்பான்மையான இனப்பிரிவு மக்களாக பாஸ்ரோன் மக்கள் உள்ளனர். தஜிக், உஸ்பெக், ஹசாரா, துருக்மேன், அய்மேக் போன்ற இன மக்கள் அடுத்த கட்டத்தில் உள்ளனர். இவற்றுள் மொங்கோலியர் காலத்தில் செஞ்சிக்கானின் ஆக்கிரமிப்பின் பின்னால் குடியேறிய சீன பூர்வீகத்தைகொண்ட ஹசாரா இன மக்கள் கிழக்கு பகுதியில் வாழ்கின்றனர். ஆப்கானிஸ்தானின் மூன்றில் இரண்டு பிரிவு மக்கள் விவசாயிகளாக உள்ள போதிலும் நாட்டின் முழுப்பகுதிகளில் 12 விகிதமே விவசாயத்திற்கு உகந்ததாக உள்ளது. ஆப்கானிஸ்தானில், இரயில் பாதை என்பது கிடையாது. சுமார் 20,800 கி. மீற்றர் தரைப்பாதை அண்டை நாடுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்த பயன்படுத்தப்படுகிறது. நாட்டின் பிரதான நகரங்களாக காண்டகார், ஹெறாட், மசார் ஈ செரிப், ஜெராலாபாத், காபூல் போன்றவை உள்ளன. தலைநகரான காபூலில் 25 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். ஆப்கானிஸ்தான் 70களின் ஆரம்பத்தில் கல்வி அறிவில் மிக உச்சத்தில் இருந்தது. பின்னர் அங்கு ஏற்பட்ட அரச எதிர்ப்பு நடவடிக்கைகள், சிவில் யுத்தங்கள் போன்றவற்றால் கல்வித்துறை மிகவும் பாதிப்படைந்தது. இப்போது ஐ.நாவின், சில அரசசார்பற்ற நிறுவனங்களின் துணையுடன் கல்வி மீண்டும் மேம்படுத்தப்பட்டு வருகின்றது.

**வரலாறு**

ஆப்கானிஸ்தான் 5000 வருடகால சரித்திர தொன்மைகொண்ட ஒரு நாடாகும். ஆய்வாளர்களின் கணிப்பின்படி பல புராதன நகரங்கள் ஆப்கானிஸ்தானில் புதையுண்டு போயுள்ளதாகக் கூறப்படுகின்றது. மகா அலெக்ஸ்சாண்டர், டாரியஸ் 1, செங்கிஸ்கான், டிமூர்பெல்க், பாபர் போன்ற சக்கரவத்திகளாலும் பல நாடோடி குழுக்களாலும் பலமுறை ஆப்கானிஸ்தான் ஆக்கிரமிக்கப்பட்டது. 1747ல் புதிய ஆப்கானிஸ்தானின் உருவாக்கம் ஆரம்பமாகியது. பார்சியரை தோற்கடித்து அகத் ஷா டுரானியினால் புதிய ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. 19ம் நூற்றாண்டில் வடபகுதியில் இருந்த ரஷ்யாவினாலும், இந்தியா மற்றும் கிழக்கு பகுதிகளில் இருந்து பிரித்தானியாவினாலும் ஆப்கானிஸ்தானுக்கு நெருக்குதல்கள் கொடுக்கப்பட்டன. 1839 - 1842, 1878 - 1880 போன்ற காலங்களில் இரண்டு யுத்தங்களை பிரித்தானியா ஆப்கான்

*(தொடர்ச்சி 23-ம் பக்கம்)*

# புத்தி சிகாமணி

## பதில்கள்

கேள்வி:- இங்கு 100 பிராங் செலவழித்து, 400 கிலோ மீற்றர் கார் ஓடி ஆடம்பர விழாக்களில் கலந்துகொண்டு அன்பளிப்பும் கொடுக்கின்ற சிலர், வீடுதேடி வரும் புனர்வாழ்வுக் கழகத்தினருக்கு உதவி செய்ய மறுக்கின்றனரே?

*கோ.சுகிதரன் - சுவிஸ்.*

பதில்:- அதில் கிடைக்கின்ற மனமகிழ்ச்சியும், பொழுதுபோக்கும் இதன் மூலம் கிடைப்பதில்லை என்பதனால் இருக்கலாம். ஆனால் அதனைவிட இதன் மூலம் கிடைக்கப்போகும் ஆத்மதிருப்தியையும் தங்களது கடமையையும் உணர்வார்களேயானால் நிச்சயமாக மனமுவந்து உதவி செய்வார்கள்.

★ ★ ★

கேள்வி:- சிறிலங்காவில் உள்ள பௌத்த பிக்குகளின் இலட்சியம் தான் என்ன?

*ரவிசங்கர் - பாரிஸ், பிரான்ஸ்.*

பதில்:- முதலாவது- தமிழர்களை அழிப்பது!, இரண்டாவது- தமிழர்களை அழிப்பது!! மூன்றாவது- தமிழர்களை அழிப்பது!!!

★ ★ ★

கேள்வி:- புலம்பெயர் நாட்டில் சகோதரங்களுக்கிடையிலேயே போட்டி பொறாமை உள்ளது. இதைப்பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

*கோ.சுகிதரன் - சுவிஸ்.*

பதில்:- அடுத்த கேள்வியை பாருங்கள்.

★ ★ ★

கேள்வி:- எனது சகோதரங்கள் எனது மனைவிக்கு எந்தவிதத் தீங்கும் செய்யாதபோதும், நான் எனது சகோதரங்களுடன் பழகுவதை எனது மனைவி தடுப்பது ஏனோ?

*மைந்தன் - லென்ஸ்புறாக், சுவிஸ்.*

பதில்:- பணம்?!

★ ★ ★

கேள்வி:- தமிழீழத்தில் உள்ள செம்மணிக்கும், தமிழகத்தில் உள்ள வெண்மணிக்கும் இடையில் என்ன ஒற்றுமை?

*திரு. கரன் - பாரிஸ், பிரான்ஸ்.*

பதில்:- இங்கு சிங்கள இனவெறியர்களால் கொன்று புதைக்கப்பட்டார்கள். அங்கு சாதிவெறியர்களால் எரித்து கொல்லப்பட்டார்கள். இரண்டு இடத்திலேயுமே பலியெடுக்கப்பட்டது தமிழர்களின் உயிர்கள்தான்.

★ ★ ★

கேள்வி:- தமிழீழத்தில் காட்டிக்கொடுக்கும் துரோகிகளை, இப்போதும் காதலித்துக் கொண்டிருப்பவர்களை என்னென்று சொல்லாம்?

*மைந்தன் - லென்ஸ்புறாக், சுவிஸ்.*

பதில்:- தெரியாமல் செய்தால் திருத்தலாம். தெரிந்துகொண்டே செய்தால் காக்கைவன்னியர்கள் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டியதுதான்.

★ ★ ★

கேள்வி:- இலக்குத் தவறிவிட்டதே?

*க. நிமலன் - இவ்றி, பிரான்ஸ்.*

பதில்:- இலட்சியம் தவறவில்லை...

★ ★ ★

கேள்வி:- உமது பெயரை ஏன் புத்திசிகாமணி என்று வைத்திருக்கிறார்கள்? எனது நண்பன் உம்மை மக்கு சிகாமணி என்று சொல்கிறான். நான் என்ன சொல்வது (தயவு செய்து இந்த சிக்கலைத் தீர்க்கவும்)?

*இ.பரமேஸ்வரன் - டுசில்டோப், ஜேர்மனி.*

பதில்:- புத்தி சிகாமணி என்பது எனது பெயரில்லை. 'பித்து' சிகாமணி என்பதுதான் என்னை எல்லோரும் அழைக்கும் பெயர். நாகரிகத்திற்காக ஒரு சிறிய மாற்றம் செய்தேன். அவ்வளவுதான்!

★ ★ ★

கேள்வி:- தமிழ் இனம் சாதியம் பார்ப்பதன் மூலம் அடையும் நன்மைதான் என்ன? அல்லது இதன் மூலம் சாதிக்கப்போவதுதான் என்ன?

*வி.பரந்தாமன் ஜேர்மனி*

பதில்:- O

★ ★ ★

கேள்வி:- கொழும்பில் தாக்குதல் நடத்தியவர்களுக்கு ஈழமுரசு வணக்கம் செலுத்தியுள்ளதே?

*எஸ்.சுகந்தன் - ஒபர்வில்லியே, பிரான்ஸ்.*

பதில்:- கொழும்பில் தாக்குதல் நடத்தியவர்களுக்கு மட்டுமல்ல, தமிழினத்தின் சுதந்திர விடிவிற்காக தங்களது உயிர்களை அர்ப்பணிக்கிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு தமிழினமே தலைவணங்கித்தான் ஆகவேண்டும்.

★ ★ ★

**CAR CHECK**
**Mot & Repair Center**
உங்களுடைய சகல திருத்த வேலைக்கும், M.O.T க்கும்
தொடர்புகொள்ளவேண்டிய இடம்:
(Honda & Nisson Dealer க்கு அருகாமையில்)
Unit 17 Stonefield Close.
Off Stonefield Way
Ruislip - Middx.
தொடர்புகளுக்கு: 0181-841 1880
(சுகுமார்)
இக்கூபோனை கத்தரித்துக் கொண்டு வருபவர்களுக்கு £5 ஈழமுரசு

**Palm Beach**
RESTAURANT
10%OFF
ALL TAKE AWAY ORDERS
P.Sivarupan
*Proprietor*
Finest South Indian & Sri Lankan Cuisine
17 Ealing Road,
Wembley
Middlesex HA0 4AA
Tel: 020 8900 8664
Mobile: 079 3958 7338
Home: 020 8900 1990

**ARCHIE'S**
*Audios - Videos - CD's*
*Whole Salers & Retailers*
205 Edgware Road,
Colindale,
London NW9 6LY
T.P: 0181-205 3652

**A.J**
**VIDEO & AUDIO**
A.J. VIDEO & AUDIO
Leading Agent for:
Tamil videos, Audios, CDs,
Sri Lankan News papers,
Tamil magazines
14, Loampit hill,
Lewisham
London SE13 7SW
Contact:
VASANTHAN &
SUGNTHAN
Tel: 0181-694-6653

**For Sale/ Leasehold**
Fully Fitted General Store
Based in CANVEY ISLAND, Essex.
விற்பனைக்கு/குத்தகைக்கு
CANVEY ISLAND, Essex இல்
அமைந்துள்ள நல்ல நிலையில்
இயங்கிக்கொண்டிருக்கும்
மளிகை ஸ்தாபனம்



Trading on High Stroot Within residential area since more than 20 Years. Genuine retirement; Owner is looking for quick sale/lease.
Very large like mini market. With immaculate spacious residentiel two bedroom accommodation on the first floor.
For Further details contact
Tel: 01268683373
Pub Lo

**SHASME**
*Super Store*
இலங்கை இந்திய மளிகைச் சாமான்கள்
வீடியோ, ஓடியோ, CD, சஞ்சிகைகள்,
பத்திரிகைகள், மரக்கறி வகைகள், கடல்
உணவுப்பொருட்கள் Gnanam Phone
Card அனைத்தையும் பெற்றுக்கொள்ள
Birmingham த்தில் ஒரே தமிழ்க்கடை
*211, Lady Pool Road,Balsall Heath,*
*Birmingham B 12, 8 LG*
*Tel No: 0121-4465896*

* மளிகைப் பொருட்கள்
* உடன் மரக்கறிகள்
* உடன் மீன் வகைகள்
* மற்றும் பொருட்களின் மொத்த இறக்குமதியாளர்கள்
**Sri Murugan**
Wiesen Str-10, 4900 Langenthal,
Switzerland
உரிமையாளர்: மாணிக்கம் இளமுருகன்
Tel: 062/922 17 98-Fax: 062/922 78 33

சிவாசினி
வாகன சேவை
*Chivashini Transport*
வாகன தேவைகளுக்கு
24 மணி சேவை
தொடர்புகட்கு:*சிவாஜினி வீடியோ*
06 14 61 69 84
01 42 09 23 59
01 49 37 26 03
01 42 05 44 04



Pub Fr

உங்கள் இல்லங்களில்
நடைபெறும் வைபவங்களுக்கு
வேண்டிய அனைத்துத்
தேவைகளையும் பூர்த்தி
செய்வதுடன், சுவை மணம்
குன்றாத உடன்
கோப்பித்தூளும்
பெற்றுக்கொள்ள
**தென்றல் இல்லம்**



60, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle
Tel: 01 42 09 36 09
Pub Gra.

உங்களுக்குத் தேவையான
மளிகைச் சாமான்கள், பத்திரிகைகள்,
சஞ்சிகைகளுக்கு
**KANNA**
**Euro Enterprises**
198, Arch Way Road
(முருகன் ஆலயத்திற்கு அருகில்)
High Gate,
N6 5BB, London.
T. Phone- 0181-3483356

# தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - *பிரித்தானியா*
# TAMILS REHABILITATION ORGANISATION

## 10 TH ANNUAL INTERNATIONAL FOOTBALL TOURNAMENT
## 10வது வருடாந்த சர்வதேச உதைபந்தாட்டப்போட்டி

**7 A SIDE KNOCKOUT**

தமிழீழ உணவகம் பல்வேறு
தமிழீழ உணவு வகைகள்
குறைந்த வகையில் சுடச்சுட
விற்பனைக்குண்டு

**Along with Under 10,12,14,16 Football & Netball**

ஒரே இடத்தில் சகல
பொருட்களையும் வாங்கக்கூடிய
முறையில் பல்வேறு வியாபார
நிறுவனங்கள் தமது கடைகளை
நடாத்த உள்ளன.


**30 Th April 2000**
**SUNDAY**
**BANK HOLIDAY**
**AT 9.00 A.M**

**வினோத விளையாட்டுப்போட்டி**

**மீட்ட மண்ணில் மீளக்குடியமர்வுத் திட்டத்திற்கான நிதி சேகரிப்பு**

**DOUGLAS EYRE SPORTS CENTRE**
COPPERMILL Lane, WALTHAMSTOW
LONDON E 17 7HE

**UNDER 14 CHILDREN SPORTS**
ENTRIES ACCEPT At 11.30 A.M
SPORTS START AT 1.30 P.M
*FOLLOWING EVENTS WILL BE HELD*
25,50,100 Metres
Sack Race, Bun Race, Spoon Race
Cycle Race
Age Groups: Under 5,6,8,10,12 & 14



தொடர்புகட்கு: 0181-520 5876, விளையாட்டு: 0181-503 3503
79 Hoe Street, Walthamstow, London E17 4SA
TRO CHARITY SHOP: 520 Forest Road. London E17

**Admission: £ 2.0**
Pub gra Lo

# கலைந்த சொற்கள் எண்: 51

கீழ் உள்ளவற்றில் 152 சொற்கள் கலைந்திருக்கின்றன. சொற்கள் நேர் கோட்டிலும் இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல், மூலைப்பக்கம் என இருக்கும். இச்சொற்களை கண்டுபிடித்து கோடிடவும். சொற்களில் சேராத சில எழுத்துக்கள் மேலதிகமாக உள்ளன.

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சு | ப | ம் | ப | ம் | வி | றை | ப் | பு | வெ | ம் | உ | ப | சா | ர | ம் |
| ன் | ம | ர | ப | ப | ரு | க | ல் | ல | றை | க | க | ல | ர | ல் | உ |
| வ | ழ | ப் | பு | ட | ப | ய | க | தை | ந் | ல | இ | ரி | க | ம | க |
| ய | ரு | ன் | வெ | ண் | இ | ம் | ட் | மா | ம் | உ | ல் | லா | ச | ம் | ன் |
| தி | ர | வ | ம் | ம | ய | ட | ட | த | ர | ரை | ல | ம் | ப | க | வி |
| பு | ப் | ல | க | பு | வ | ட் | ட | ம் | மு | க | ற | ன் | ம் | க | தி |
| ர | ம் | க | ப | ப் | கா | ப | ம் | த | ம் | ற் | ம் | ள | ட | ய் | ம |
| த | ளி | ப | க | ர | க | ம் | ய | ர | மு | ட | வ | ன் | செ | ய | ல் |
| ம் | ம் | ப | ம் | க | தி | த | தி | பு | பி | க | ற் | ப | க | ம் | லி |
| க | ள் | ள | ம் | ர | தி | த் | ப | ப் | க | ற | ப் | பு | ய | னை | கை |
| ளி | ள் | உ | வ | க | ஆ | ர | ரு | ரு | ப | பு | ப் | ரி | அ | ப | த |
| ப | பு | ம் | ரு | க | வ | இ | வ | ப | ப் | ர் | வா | பு | பு | ற் | க |
| பு | கு | ங் | ட | ச | வ | த | ன | ம் | தீ | பு | வெ | ள் | ளி | வி | ழா |
| இ | க | ம் | ம் | ள் | மை | ம் | த | ப | ச | ப் | பு | கா | ப | க | ல் |
| ல் | த | ம | ள | லா | க | ரு | ரு | ர | ப | ம் | ப | த் | தி | ரி | கை |
| ல | த | ம் | ல் | த | கு | க் | தா | ம் | மு | ரி | ப | த | ம | ம் | வ |
| ம் | ல | இ | ண | க் | க | ம் | ம | பொ | சு | க | து | வ | ரு | ர | ம் |
| நி | கு | ம் | ல | ள் | வ | க | ர் | ரு | வ | ன் | ப் | வ | ம் | ண | ம் |
| ம் | ர | க் | ழ | க் | ட | ம் | ள | ள் | ப | பு | உ | பு | ர | ம் | ம் |
| த | ம | ம் | ட | ப | க | ப | ள் | ம் | ன் | பி | ப் | ம | ம | ம் | ர் |
| மு | து | உ | ல் | வ | ம் | ம் | க | வ | ர | கா | ப | று | று | ல | பு |
| கு | ர | லா | ர் | வ | ண | மா | ழ | ம் | து | வ | ள | ம | ம | ப் | ம் |
| ல் | க் | க் | ம் | ண் | யா | கி | பு | பா | டை | து | ம் | ல | வா | த | பு |
| கு | க | க | கி | கு | ர | ங் | கு | ப | ப் | ற | ர் | ர் | ப | ப் | ரு |
| ம் | ரி | லூ | ல் | க | பி | பி | று | ய | ப | வு | ப் | ச் | வ | ழ | வ |
| ச | த் | த | ம் | வ | ண | ஆ | யு | த | ம் | பு | சை | சி | க | ர | ம் |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இருப்பிடம் | பிறப்பு | பருத்தி | இரத்தம் | பருப்பு | பத்திரம் | பரவசம் | திரவம் | பம்பரம் | வம்சம் | பசப்பு |
| முற்றம் | கவளம் | இலந்தை | கரும்பு | பாதுகாப்பு | தருணம் | பருக்கள் | மறுப்பு | மக்கள் | இல்லாமை | திரவம் |
| கரகரப்பு | காப்பகம் | பகலவன் | பள்ளம் | வெப்பம் | சம்பவம் | வரம்பு | சபதம் | தம்பட்டம் | குருதம் | ரதம் |
| கடற்கரை | இல்லறம் | முடவன் | வன்செயல் | வருடம் | தாக்குதல் | சடங்கு | கருங்கல் | வள்ளம் | இல்லம் | ஆரம்பம் |
| ஆத்திரம் | கம்பளி | கரகம் | புரதம் | கள்ளம் | பதியம் | கலப்பு | புதியவன் | மல்லிகை | திருப்பம் | இலக்கம் |
| கிண்ணம் | தீர்ப்பு | துடைப்பம் | உலகம் | அரிப்பு | பிரயாணம் | இடபம் | மாணவர் | விம்பம் | பதமம் | துவரம் |
| மரணம் | வரம்பு | மறுமலர்ச்சி | மலர்வு | சிவப்பு | வார்ப்பு | பத்திரிகை | துன்பம் | பள்ளம் | மாம்பழம் | பல்லாக்கு |
| கபடம் | கம்பம் | உப்பளம் | உல்லாசம் | மண்டபம் | கறப்பு | வாரியம் | விற்பனை | முகப்பு | ஆறுபடை | மும்முரம் |
| வழப்பு | இணக்கம் | கள்ளர் | பிரம்பு | ஆணவம் | சிகரம் | புருவம் | மறுப்பு | கிரகம் | ஆயுதம் | கிழவன் |
| வதனம் | பருப்பு | குக்கல் | கல்லூரி | வர்க்கம் | சத்தம் | குரங்கு | குமுதம் | வடக்கு | வடகம் | இயல்பு |
| சம்மதம் | கற்பகம் | தைமாதம் | இயல்பு | வட்டம் | கட்டடம் | பருகல் | கம்பன் | விகடன் | கம்மல் | விறைப்பு |
| கல்லறை | உலகம் | பரமன் | உபசாரம் | பதம் | இகம் | காரம் | உள்ளி | மரம் | புரம் | செய்தி |
| இதம் | வரம் | பழம் | பச்சை | துறவு | மலர் | பரிசு | பயறு | தரம் | துலாம் | உரல் |
| நிலம் | பகல் | கற்பு | சுபம் | புயம் | மகரி | கடம் | பரம்பொருள் | | வெள்ளிவிழா | |

பெயர்:...........................................................................


முகவரி:...........................................................................

...........................................................................

...........................................................................

பிறந்த நாள்:........................................ சந்தாதாரராயின் சந்தா எண்:........................................

## கலைந்த சொற்கள் எண்–50 விடைகள்



ஈழமுரசின் சென்ற எண் கலைந்தசொற்கள் பகுதிக்கு 220 இற்கும் மேற்பட்ட வாசகர்கள் விடையெழுதி அனுப்பியிருந்தார்கள். அவர்களில் சரியான விடையெழுதிய வாசகர்களில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து வாசகர்களின் விபரங்கள் வருமாறு.

1) வினோ சுதாகர்
2800 Delemont,
Swiss.

2) S. வாசுகி
93500 Pantin,
France.

3) அருணாசலம் கிசோன்
93700 Drancy,
France.

4) திருமதி சி. பத்மசீலன்
0577 Oslo,
Norway.

5) M. அந்தோனிப்பிள்ளை
Ilford-Essex
London IG3-8AL

LUNE

இவர்களுக்கு *Lune International* நிறுவனத்தினரால் பெறுமதி மிக்க நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

கலைந்த சொற்கள் எண்-51 இற்கான சரியான விடையும், கலைந்த சொற்கள் எண்- 52ம், 13 - 19 ஏப்ரல் 2000 ஈழமுரசில் வெளிவரும்.

தயாரிப்பு: சவேயூ சவுந்தரராஜா

கலைந்த சொற்கள் எண்-51 இற்கான விடைகள் வந்துசேர வேண்டிய கடைசி நாள்: 07.04.2000
(போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி:

கலைந்த சொற்கள்
Eelamurasu
22, Rue Perdonnet,
75010 Paris, France.

## பலதும் பத்தும்

## சிறையிலும் தொடர்ந்த கொலைகள்

சிலோவேனியா, யூகோசிலாவிய கூட்டமைப்பிற்குள் இருந்தவேளை, அதாவது 1979ம் ஆண்டில், மெட்டோட் ட்றோபேச் என்பவர் தான் செய்த கொலைகளுக்காக பொலிசாரால் கைது செய்யப்பட்டார். அப்போது அவருக்கு வயது 50. ஐந்து பெண்களை இவர் கொலை செய்திருந்தார். அவர்களை தனது வீட்டிற்கு அழைத்து வந்து கொலை செய்ததன் பின் சிறு துண்டுகளாக வெட்டி ரொட்டி சுடும் அடுப்பில்போட்டு எரித்துள்ளார். இக் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதில் அவருக்கு 20 வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

நீண்டகாலம் அமைதியாக இருந்தவருக்கு மீண்டும் இருப்புக் கொள்ளவில்லை. அர்த்தமற்ற வாழ்க்கையில் சலிப்படைந்தார். தான் எதன் மூலம் பிரபல்யம் அடைந்தேனோ அந்தப் பெயர் இப்போது மங்கிவிட்டதே எனக் குறைப்பட்டுக்கொண்டவர், மீண்டும் எப்படியாவது அதனை மீட்டுக்கொள்ள வேண்டும் என திட்டமிட்டார். 20 வருடங்களின் பின் விடுதலையாகும் தருணத்தில் சிறைக்குள் தன்னுடன் நீண்டகாலம் ஒன்றாக இருந்த சக கைதிகள் இருவரை கொலை செய்துவிட்டார். ஆனால் அவருக்கு இப்போது வெட்டி எரிக்க அடுப்புத்தான் இல்லை.

தற்போது மேலும் 15 வருட சிறைத்தண்டனை அவருக்கு கிடைத்துள்ளது.

## ஓய்வெடுக்கப்போய் மாட்டிக்கொண்டார்

பிரான்சின் மெட்ஸ் பகுதியில் இச்சம்பவம் நடந்தது. 38 வயதான அந்த நபருக்கு வேலையில்லை. சரியான தங்குமிடமும் இல்லை. நிரந்தரமாக வீடொன்று இருந்தும் அவருக்கு அங்கே தங்கப்பிடிக்கவில்லை. அப்படியானவர் ஒருநாள் உல்லாச தளபாடக் கடையொன்றின் சாய்மனைக் கதிரையில் உறங்கிக் கொண்டிருந்த ஒரு ஞாயிறு காலைவேளை, பொலிசாரால் எழுப்பி விடப்பட்டார். அதற்கு முன்தினம் இரவு, அதாவது சனியன்று அந்த நிறுவனத்தில் திருடுவதற்கு இவர் திட்டமிட்டார்.

அதன்படி நிறுவனம் பூட்டப்பட்டதன் பின், நன்றாக இரவானதும் அதன் ஓர் கண்ணாடியை உடைத்து உள்ளே புகுந்தும்விட்டார். ஆனால் கால்களால் கண்ணாடியை உடைத்தவேளை சிறு காயம் ஏற்பட்டு விட்டது. அங்கிருந்த ஒரு துணியை கிழித்து கால்களுக்கு கட்டுப்போட்டுக் கொண்டவர், அருகில் இருந்த சாய்மனைக் கதிரையொன்றில் சற்று ஓய்வெடுப்போம் என சாய்ந்துவிட்டார். ஆனால் தூக்கம்தான் எல்லோருக்கும் எதிரியாயிற்றே. அப்படியே நன்றாக அயர்ந்து தூங்கிவிட்டார்.

மறுநாள் காலை பொலிசார் வந்து தட்டியெழுப்பியபோதுதான் விழித்துள்ளார். அந்த நிறுவனத்திற்குள் காயங்களுடன் அவர் நடமாடித் திரிந்ததால் விலையுயர்ந்த தரைவிரிப்புக்களில் எல்லாம் இரத்தம் சிந்தியுள்ளது. அதனை சுத்தப்படுத்த மாத்திரம் அந்த நிறுவனத்திற்கு 12,000 பிரெஞ்சு பிராங்குகள் செலவாகியுள்ளன. அதைவிட கண்ணாடியையும் மாற்றவேண்டும். இந்த செலவெல்லாவற்றையும் உள்ளே புகுந்தவர்தான் பொறுப்பேற்றாக வேண்டும்.

அவரிடம் பணம் இருந்தால், அவரேன் அந்த நிறுவனத்தை உடைக்கப்போகிறார்!? பாவம் இப்போது கம்பிக்கு பின்னால் ஓய்வாக இருக்கிறார்.

(20-ம் பக்கத் தொடர்ச்சி)


## ஆப்கானிஸ்தான்

மேல் தொடுத்தது. இறுதியில் ஆப்கானின் அரசரான அப்துர ரகுமான் கான் உடைய அரசிற்கு பெருந்தொகைப் பணத்தைக் கப்பமாக பெற்றுக்கொண்டு பிரித்தானியா உதவியது. தந்தையின் மறைவின் பின் 1919ல் பதவியேற்ற அமானுல்லா கான் நாட்டில் சமய, கலாச்சார மாற்றங்களை ஏற்படுத்த முனைந்தார். ஆனால், சமயத்தலைவர்களதும் இஸ்லாமியப் போதகர்களதும் எதிர்ப்புக்களையடுத்து 1929ல் பதவியைத் துறந்தார். அதன்பின் மொகமட் ஷாகீர்கான் புதிய அரசராக பதவியேற்றார். 1964ம் ஆண்டு அரசியல் அமைப்பில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டது. அரசரினால் நியமிக்கப்பட்ட பிரதமரும் அவரது அமைச்சரவையும் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டது. முதன்முறையாக ஆப்கானிஸ்தானில் பெண்கள் வாக்களித்தனர். ஏராளமான அலுவலகளில் பெண்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டனர்.

இந்த அரசாட்சி 1973ம் ஆண்டு யூலை 17ம் திகதி இராணுவப் புரட்சி ஒன்றின்மூலம் தூக்கியெறியப்பட்டது. 1974ல் பதவியேற்ற இராணுவ ஆட்சியானது சோவியத் யூனியனின் நெருங்கிய நட்பைக்கொண்டிருந்தது. 1978ம் ஆண்டு ஆப்கான்- சோவியத் நட்புறவு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஆனால், சோவியத்தின் ஆளுமையை எதிர்த்து மக்கள் கிளர்ந்தெழுந்தனர். நாட்டின் பல பகுதிகளிலும் ஆர்ப்பாட்ங்கள் நடத்தப்பட்டது. இதனையடுத்து1979ம் ஆண்டு சோவியத் படைகள் ஆப்கானிஸ்தானிற்குள் நுழைந்தன. அங்கிருந்த கம்யூனிஸ்ட அரசிற்கு ஆதரவு தெரிவித்து உள்நுழைந்த சோவியத் படைகளுக்கு எதிரான தாக்குதல்களை முஜாகீதீன்கள் மேற்கொண்டனர். இவர்களுக்கான ஆதரவு அமெரிக்காவினால் வழங்கப்பட்டது. சோவியத் யூனியனால் ஆப்கான் ஜனாதிபதியாக பார்பரா கர்மால் நியமிக்கப்பட்டார். இவர் 1986ம் ஆண்டு வெளியேற்றப்பட்டு அவரது இடத்திற்கு முகமட் நஜீபுல்லா நியமிக்கப்பட்டார். இதற்கிடையே 1988ம்ஆண்டு சோவியத்தும் அமெரிக்காவும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி 1989ம் ஆண்டு பெப்ரவரி 15ல் சோவியத்படைகள் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறிக்கொண்டன. 9 வருட ஆக்கிரமிப்பில் சோவியத்யூனியன் தனது 15,000 படையினரை இழந்தது. சோவியத்தின் வெளியேற்றத்தை அடுத்து, நஜீபுல்லா கம்யூனிச ஆதரவுடன் ஆட்சியமைத்தார். 91ம் ஆண்டு அமெரிக்காவும் சோவியத் யூனியனும் ஆப்கானிஸ்தானின் இரு தரப்பினருக்கும் ஆயுத உதவி செய்வதில்லை என ஒப்புக்கொண்டன. 1992ல் முஜாஹ்தீன்கள் காபூலை கைப்பறிய போது நஜீபுல்லா தூதரகத்தில் அடைக்கலம் புகுந்தார். அடுத்த இரண்டு வருடங்களும் ஆப்கானில் ஆட்சி அமைப்பதில் முஜாஹ்தீன்களுக்கு இடையே பலத்தமோதல் இதற்கிடையே தலிபான்கள் அமைப்பு தோற்றம் 1994ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் தோற்றம் பெற்றது.

இவ் அமைப்பு வெகு விரைவிலேயே ஆப்கானின் அனேகமான பிராந்தியங்களை கைப்பற்றிக் கொண்டார்கள். ஆப்கானிஸ்தானின் முன்னாள் ஆட்சியாளர்கள் வடபகுதிக்கு பின்வாங்கிக் கொண்டார்கள். இப்போது ஆப்கானிஸ்தானின் 90 வீதமான பிராந்தியத்தை கைப்பற்றிக்கொண்டுள்ள தலிபான்கள் நிலையான ஆட்சியொன்றினை அமைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். அனாலும் தொடர்ந்து மோதல்களும் இடம்பெற்றுக்கொண்டுதான் வருகின்றன.

மனிதர்களின் கற்பனைக்குத்தான் அளவேயில்லை. அதற்காக இப்படியா? வீதியில் செல்லும் மற்றவர்களுக்கு தடங்கலாக இருக்கின்றதே. சரி! அதை யார் பொருட்படுத்துவார்கள்? ஆனால், தன்னை எல்லோரும் கவனிக்கிறார்கள் என்பதை மட்டும் இவர் உணர்ந்துகொண்டுள்ளார். கனடாவில் வான்கூவர் நகரில் இந்த டைனோசர் மனிதர் துவிச்சக்கர வண்டியில் செல்வதை அனேகமானோர் கண்டிருப்பார்கள்.



## சிறைமீண்ட சந்தோசம் மீண்டும் சிறைக்குள் தள்ளியது

இது பிரான்சின் வடபகுதியில் 'லில்' நகரத்தில் அண்மையில் நடந்த ஒரு சம்பவம். 19 வயதான அந்த இளைஞன் அன்றுதான் சிறையில் இருந்து வெளியே விடுதலையாகி வந்தான். வந்தவன் தனது விடுதலையை கொண்டாடவேண்டும் என எண்ணி நண்பர்களுடன் இணைந்து கொண்டான். அவனும் இன்னும் இரு நண்பர்களுமாகச் சேர்ந்து மூக்குமுட்ட மது அருந்தினார்கள். வீதியெல்லாம் அலைந்து திரிந்திருக்கிறார்கள். ஆனால், அது கொண்டாட்டம் ஆகாதே என எண்ணியவர்கள், மிதமிஞ்சிய மதுபோதையில் ஓர் திருப்பத்தை ஏற்படுத்த முனைந்தார்கள்.

என்ன திருப்பம்? மூவருமாக சேர்ந்து நகரில் ஓடிக்கொண்டிருந்த ஒரு பொதுப் போக்குவரத்து வண்டியை கத்திமுனையில் கடத்தினார்கள். சாரதிக்கு இடையிடையே அடியும்போட்டு அந்த வாகனத்தை நகரின் வீதிகளில் எல்லாம் தாறுமாறாக ஓடும்படி செய்தார்கள். எவ்வளவு நேரத்திற்குதான் அந்த விளையாட்டுக்கள் தொடரும். அதுவும் இரவாகியவேளை நகரில் வாகன நடமாட்டம் அதிகமாக இருக்கும் தருணம் பொலிசார் மட்டும் இல்லாமலா போவார்கள்? ஓர் சமிக்ஞை விளக்கடியில் பேருந்து நின்றவேளை பொலிசார் அதற்குள் ஏறி மூவரையும் கைது செய்தனர்.

இனியென்ன! வெளியே வந்தவர், வெளியே இருந்த தனது நண்பர்களையும் கூட்டிக்கொண்டு மீண்டும் அதே தினம் சிறைக்குள் போய்விட்டார். எட்டுமாதம், ஆறுமாதம், இரண்டு மாதம் என ஒவ்வொருவருக்கும் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.


2000ம் ஆண்டில் இலாபநோக்கமற்ற 14வது வருட சேவையின் தொடர்ச்சி (1986 - 2000)

பாரிஸ் தமிழர் கல்வி நிலையம்

Centre Parisien d'Education pour les Tamouls

பிரெஞ்சு அரசால் அங்கீகரிக்கப்பட்டது No d'Ordre 86-3394

புதிதாக பிரான்சுக்கு வந்ததால் பிரெஞ்சு மொழி அறிவின்மை உங்கள் அன்றாட அலுவல்களுக்கு தடையாக உள்ளதா?
ஏற்கனவே பல பாடசாலைகளில் பிரெஞ்சு கற்றும் சரளமாக உரையாட, எழுத முடியாமல் உள்ளதா?

கல்விச் சேவையில் நாம் முன்னணியில் திகழ்வது தற்செயலானதல்ல

- இலாப நோக்கமற்ற பொது ஸ்தாபனம்,
- 14 வருட நிறைந்த கல்விச் சேவை,
- ஆற்றல், அனுபவமுள்ள ஆசிரியர்கள்,
- காலத்திற்கேற்ப மாற்றி அமைக்கப்பட்ட பாடத்திட்டங்கள்.

ஏற்கனவே கல்வி கற்ற பல்லாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுடன் நீங்களும் ஏன் பயன்பெறக் கூடாது? குறுகிய காலத்தில் உங்களைத் தயார்செய்ய ஆரம்பமாகிறது.

2000 ஆண்டுக்காலப் பகுதிக்கான புதிய வகுப்புகள்

புதிய பிரெஞ்சு வகுப்பு

- உச்சரிப்பு (La phonétique)
- அடிப்படை இலக்கணம் ( La grammaire)
- உயர் இலக்கணம் : (La grammaire)
- உரையாடல் (Les conversations)
- கடிதம் எழுதுதல் (Les lettres)

ஆசிரியர் கஜன்

01.04.2000

16:00 - 17:30 (சனி)

ஏற்கனவே நடைபெறும் வகுப்புக்களில் புதிய பாடங்கள்
மாலை 13 : 00 - 14 : 30 Les Conversations
மாலை 14 : 30 - 16 : 00 Le Passé Composé
மாலை 17 : 30 - 19 : 00 Les Semi - auxiliaires

புதிய ஆங்கில வகுப்புக்கள்

- உச்சரிப்பு
- உரையாடல்
- பொதுப்பரீட்சைக்கு தயார் செய்தல்
- ஆங்கில நாடுகளில் சரளமாக ஆங்கிலத்தில் உரையாட

17:30 - 19:00 சனி
16:00 - 17:30 ஞாயிறு

புதிய கேக் அலங்கார வகுப்புக்கள்

உங்கள் வீட்டு சுபகாரியங்களுக்கு நீங்களே கேக் தயார் செய்ய.
பிரெஞ்சு, ஆங்கில முறைப்படி கேக் தயார் செய்ய. (ஞாயிறு) 16:00 - 17:30

அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும் (சனி, ஞாயிறு 13:00 - 21:00) 165, Rue de Charonne, 75011 Paris.
Tél : 01.43.56.17.91 E-Mail: assptec@aol.com M° : Charonne ou Alexandre Dumas
- நிர்வாகம்

# சீன மக்களைக் கவர்ந்த தத்துவ அறிஞர் கன்பூசியஸ்

**உலக வரலாற்றில் கடந்த 2000 ஆண்டுக ளுக்கு மேலாக மனித வாழ்வியலில் பல்வேறு மாறுதல்கள் ஏற்படுவ தற்குக் காரணமாக இரு-ந்த பிரசித்தி பெற்ற பல ரது விபரங்கள் இத் தொட ரில் வெளிவருகின்றன.**

## உலக வரலாற்றில் பதிவானவர்கள்

சீன மக்களின் அடிப் படைக் கருத்துக்க ளைத் தொகுத்து ஒரு கோட்பாடாக வகுத்த முதல் மனிதர் பெரும் சீனத் தத்துவ அறிஞரான கம்பூசியஸ் ஆவார். அவருடைய கோட்பாடு தனி மனிதனின் அறவொழுக்கத்தை யும், அற நெறியின் அடிப்படை யில் மக்களை ஆண்டு பணிபுரி யும் அரசாங்கத்தைப் பற்றிய கருத்தையும் தழுவியது. 2000 ஆண்டுகளாக சீன மக்களின் வாழ்க்கையும், பண்பாடும் இதில் ஊறித் திளைத்திருந்தன. இதன் செல்வாக்கு உலக மக்கள் தொகையின் ஒரு பகுதி முழுவ தும் பரவியிருந்தது.

வடகிழக்குச் சீனாவில் இன் றைய 'ஷாண்டுங் மாநிலத்தி லுள்ள லூ எனும் பகுதியில் கி.மு. 551 இல் கன்பூசியஸ் பிறந் தார். அவரது இளமைப் பருவத் திலேயே அவர் தந்தை இறந்தார். ஆகவே கன்பூசியசும் அவரு டைய அன்னையும் வறுமையில் வாழ்ந்தனர். வருங்காலத் தத்துவ அறிஞரான அவர் இளைஞராக இருந்தபோது, சிறிய அரசாங்க அதிகாரியாகப் பணிபுரிந்தார். ஆனால் பல ஆண்டுகளுக்குப் பிறகு அவர் பதவி துறந்தார். பிறகு 16 ஆண்டுகளாக மக்களுக் குப் போதித்து வந்த காலத்தில் அவரது கோட்பாட்டைக் கேட்டு ஏராளமான பேர் அவ ரைப் பின்பற்றினர். அவருக்கு 50 வயதாக இருக்கும்போது, லூ அரசாங்கத்தில் அவருக்கு ஓர் உயர் பதவி வழங்கப்பெற்றது. ஆனால் 4 ஆண்டுகளுக்குப் பிறகு அரசவையிலிருந்த எதிரிகள் அவரை பதவியிலிருந்து விலக்கி அரசைவிட்டே வெளியேற்றி விட்டனர். அடுத்த 13 ஆண்டுக ளாக அவர் அங்குமிங்கும் அலைந்து திரிந்து போதித்து வந்தார். பிறகு அவர் தாயகம் திரும்பி தம் வாழ்வின் இறுதி 5 ஆண்டுகளை அங்கு கழித்தார்.

**அவர் கடவுளைப் பற்றி மிக அரிதாகவே குறிப்பிட்டார். மறு உலக வாழ்வு பற்றி வாதிக்க மறுத்தார். எல்லா வகையான மெய்விளக்க ஊகக் கோட்பாடுகளையும் தவிர்த்தார்.**

கி.மு. 479 இல் அவர் இறந்தார்.

கம்பூசியஸ் ஒரு மதத்தை நிறு வியவராகப் போற்றப்படுகின் றார். ஆனால் அது முற்றிலும் உண்மையன்று. அவர் கடவு ளைப் பற்றி மிக அரிதாகவே குறிப்பிட்டார். மறு உலக வாழ்வு பற்றி வாதிக்க மறுத்தார். எல்லா வகையான மெய்விளக்க ஊகக் கோட்பாடுகளையும் தவிர்த் தார். அடிப்படையில் அவர் ஓர் உலகியல் தத்துவ அறிஞர்; தனி மனித, அரசியல் அறநெறியிலும் ஒழுக்கத்திலும் அக்கறை காட் டினார்.

கன்பூசியசின் கருத்துப்படி, 'ஜென்', 'லி' ஆகியவையே இரு முக்கிய நற்பண்புகளாகும். உயர்ந் தோர் இவற்றிற்கேற்ப ஒழுகுவர். 'ஜென்' என்பது சிலவேளை 'அன்பு' என மொழி பெயர்க்கப் படுகின்றது, ஆனால் அதைப் 'பிறரிடம் காட்டும் அன்பு கூர்ந்த அக்கறை' என விளக்குதல் நன்று. 'லி' என்பது ஒழுக்க முறைகள், வழிபாடு, வழக்கம், ஒழுக்க நயம், முறைமை ஆகிய வற்றைக் குறிக்கும்.

கன்பூசியஸ் காலத்திற்கு முன்பே முன்னோர் வழிபாடு அடிப்படை சீன சமயமாக இருந் தது. அவர் குடும்பப்பற்றையும் பெற்றோரிடம் காட்ட வேண் டிய மதிப்பையும் வலியுறுத்தி அதற்கு உறுதியளித்தார். மனை வியர் கணவருக்கும், குடிகள் அர சருக்கும் மதிப்பளித்துக் கீழ்ப்ப டிய வேண்டுமென்றும் அவர் போதித்தார். ஆயினும் அந்தச் சீன ஞானி கொடுங்கோன் மையை ஆதரிக்கவில்லை. அரசு மக்களின் நலனுக்காக இருக்கிற தென்றும், மக்கள் அரசின் நல னுக்காக இல்லையென்றும் அவர் நம்பினார். அரசன் வன்முறை யாலன்றி அறநெறி முன்மாதிரி யினால் ஆள வேண்டுமெனப் பலமுறை வலியுறுத்தி வந்தார். அவரது மற்றொரு கோட்பாடு கிறிஸ்து பெருமானின் பொன் னான விதியின் திரிபு; அதாவது 'பிறர் உனக்கு எதைச் செய்ய வேண்டாமென விரும்புகிறாயோ, அதை பிறர்க்குச் செய்யாதே.'

கன்பூசியசின் அடிப்படை நோக்கு பழமைப் பற்றுடையது. அவர் கடந்த காலமே பொற் காலமென்று நம்பினார். அரசரும் மக்களும் பழைய அறநெறித்த ரங்களையே பின்பற்ற வேண்டு மென்று வலியுறுத்தினார். ஆயி னும் உண்மையில், அறநெறி முன்மாதிரியினால் ஆளவேண் டுமெனும் கன்பூசியசின் இலட் சியம் முற்கால நடைமுறையாக இருந்ததில்லை. ஆகவே கன்பூசி யஸ் புதியது புனைந்த சீர்திருத் தவாதியாகவே இருந்தார்.

கன்பூசியஸ் சூ வம்ச காலத் தில் வாழ்ந்தார். அது சீனாவில் பெரும் அறிவுக் கிளர்ச்சிக் காலமாகத் திகழ்ந்தது. அவர் காலத்திலிருந்த ஆட்சியாளர்கள் அவருடைய திட்டத்தை ஏற்க வில்லை. ஆனால் அவர் இறந்த பின் அவருடைய கருத்துகள் நாடு முழுவதும் பரவின. ஆயி னும் கி.மு. 221 இல் சின் வம்ச காலம் தோன்றியதும் கன்பூசிய சின் கொள்கைகள் நலிவுறத் தொடங்கின. சின் வம்ச முதல் மன்னரான ஷி-ஹுு - வாங்தை கன்பூசியசின் செல்வாக்கை அழி த்து, கடந்தகாலத் தொடர்பை அறுத்தெறிய உறுதி பூண்டார். கன்பூசியசின் போதனைகள் பரப்புவதைத் தடுக்கவும், அவரு டைய நூல்களை எல்லாம் எரிக் கவும் ஆணையிட்டார். இத் தடுப்பு முறைகள் தோல்வியடைந் தன. சில ஆண்டுகள் கழித்து சிந் வம்ச காலம் முடிவுற்றதும் கன்பூசிய அறிஞர்கள் திரும்பவும் அவருடைய கோட்பாடுகளைப் பரப்பத் தொடங்கினர். அதன் பிறகு தோன்றிய ஹான் வம்ச காலத்தில் (கி.மு. 206 —கி.பி.220) கன்பூசியக் கொள்கை சீன அர சின் தத்துவமாக நிலைநாட்டப் பெற்றது.

ஹான் வம்ச காலம் முதல் நாளடைவில் சீன அரசர்கள் அர சாங்க அலுவலர்களை அரசுப் பணித்தேர்வு மூலமாகத் தேர்ந் தெடுக்கத் தொடங்கினர். காலப் போக்கில் இத்தேர்வுகள் கன்பூசி யசின் நூல்களைப் பற்றிய அறி வின் அடிப்படையிலே நடை பெற்றன. சீனப் பேரரசில் அர சாங்க ஆட்சித் துறைப் பணி யில் சேர்வதே உயர் வருமானத் திற்கும் சமூக நன்மதிப்பிற்குமு ரிய முக்கிய வழியாக இருந்த தால், அரசுப் பணித் தேர்வுகளில் பெரும் போட்டி ஏற்பட்டது. ஆகவே, சீனாவில் பல தலை முறைகளாக அறிவும் ஆர்வமு மிக்க இளைஞர் பலர் கன்பூசிய சின் நூல்களைப் பல ஆண்டுக ளாக ஆழ்ந்து படித்து வந்தனர். பல நூற்றாண்டுகளாக, சீன ஆட் சித் துறையினர் கன்பூசிய தத்து வத்தில் ஊறித் திளைத்த நோக் குடையவராக இருந்தனர். இம் முறை சீனாவில் (சில தடங்கல் கள் தவிர) கி.மு. 100 முதல் கி.பி. 1900 வரை ஏறக்குறைய 2000 ஆண் டுகளாக நிலைபெற்றிருந்தது.



கன்பூசியசின் கொள்கை சீன அரசாங்கத்தின் தத்துவமாக மட் டும் இருக்கவில்லை. சீன மக்க ளுள் பெரும்பாலோர் கன்பூசிய சின் இலட்சியங்களை ஏற்றுக் கொண்டிருந்தனர். அவை 2000 ஆண்டுகளாக அவர்களுடைய வாழ்விலும் சிந்தனையிலும் உய ரிடம் பெற்றிருந்தது.

கன்பூசியஸ் சீன மக்களைக் கவர்ந்ததற்குப் பல காரணங்கள் உள்ளன. முதலாவது அவரு டைய வாய்மையும் நேர்மையும் ஐயத்திற்கிடமானவையல்ல. இரண்டாவது, அவர் மிதவாதி யாகவும், நடைமுறைவாதியாக வும் இருந்தார். மக்கள் தம்மால் சாதிக்க முடியாதவற்றைச் செய் யுமாறு அவர் சொல்லவில்லை. அவர்கள் ஒழுக்கமுடையவர்க ளாக இருக்கவேண்டுமென்று அவர் கூறியபோது, அவர்கள் புனிதர்களாக இருக்கவேண்டு மென்று அவர் எதிர்பார்க்க வில்லை. இதிலும் பிறவற்றிலும் அவர் சீன மக்களின் நடைமுறை மனப்பாங்கையே பிரதிபலித் தார். அவருடைய கொள்கைகள் சீனாவில் பெரும் வெற்றி பெற் றதற்கு இதுதான் ஒருவேளை காரணமாக இருக்கக்கூடும். கன்பூசியஸ் சீன மக்களைத் தம் அடிப்படை நம்பிக்கைகளை விட்டு விடுமாறு கேட்கவில்லை. அதற்கு மாறாக அவர் அவர்க ளுடைய மரபான அடிப்படை இலட்சியங்களையே தெளிவாக வும் உறுதியாகவும் திரும்ப எடுத் துக்கூறினார். ஒருவேளை உலக வரலாற்றில் வேறு எந்தத் தத் துவ அறிஞரும் கன்பூசியசைப் போல் தம் நாட்டவரின் அடிப் படைக் கருத்துகளுடன் அவ்வ ளவு நெருங்கி இருந்ததில்லை எனலாம்.



மக்களின் உரிமைகளைவிட மிகுதியாக வலியுறுத்தும் கன்பூ சியக் கொள்கை இன்றைய மேல் நாட்டு நோக்குதல் செயல் திற மற்றதாகவும் கவர்ச்சியில்லாத தாகவும் தோன்றலாம். ஆயினும், அரசாங்கத்தின் கோட்பாடு என்ற வகையில் அது நடை முறையில் பயனுறுதியுள்ளதாக இருந்தது. உள்நாட்டு அமைதி யையும், செழிப்பையும் பேணும் திறமையை அது பெற்றிருந்த தால் பொதுவாக சீனா 2000 ஆண்டுகளாக நல்லாட்சி பெற்ற நாடாகத் திகழ்ந்தது.

கன்பூசியசின் இலட்சியங்கள் சீனப் பண்பாட்டுடன் நெருங்கிப் பிணைந்திருந்ததால், அவை கிழக்கு ஆசியாவுக்கு வெளியே பெரிதும் பரவவில்லை. ஆயினும் கொரியாவிலும் ஜப்பானிலும் அவற்றின் விளைவுகளைக் காண லாம். அந் நாடுகள் இரண்டி லும் சீனப் பண்பாடு பெரிதும் செல்வாக்குப் பெற்றிருந்தது.

இன்று கன்பூசியசின் கொள்கை சீனாவில் மிகத் தாழ் ந்த நிலையை அடைந்துள்ளது. சீனப் பொதுவுடமைவாதிகள் கடந்த காலத் தொடர்புகளைத் துணிக்கும் முயற்சியில் கன்பூசி யசையும் அவருடைய கோட்பா டுகளையும் வன்மையாகத் தாக்கி வருகின்றனர். வரலாற்றில் கன் பூசியஸ் பெற்றிருந்த செல்வாக் குக் காலம் முடிவடைகின்றது எனலாம். ஆயினும் கடந்த காலத் தில் கன்பூசியசின் கருத்துகள் சீனாவில் ஆழ வேரூன்றியிருந் தன. 50 அல்லது 100 ஆண்டுகள் கழித்து வேறொரு சீனத் தத்துவ அறிஞர் கன்பூசியஸ், மா —சே துங் ஆகியோரின் கருத்துகள் வெற்றிகரமாக ஒருங்கிணைந் தால் நாம் வியப்படையத் தேவையில்லை.

ஜேர்மனி பொன் (Bonn) நகரில்
யாழ் ரவல்ஸ்
YARL TRAVELS
Köln - Str 79, 53111 Bonn.
உலகின் எப்பாகங்களுக்கும் மலிவு விலையில்
பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்
சிறீலங்கா, இந்தியா, சிங்கப்பூர், கனடா
ஆகிய நாடுகளுக்கு விசேட சலுகைகள்.
தொலைபேசி இலக்கம்: 0228/9652885 – தொலைநகல்: 0228/9652985
GE-Pub.

# வாரம் ஒரு விடயம்

## மாவோரிகள்

எம் மக்களுக்கு மேற்கு ஐரோப்பிய நாடுகள், வட அமெரிக்க நாடுகள் மீதுள்ள மோகத்தினைப்போல அவுஸ்திரேலியா, நியூசிலாந்தின் மீதும் மோகம் உள்ளதை யாரும் மறுக்க முடியாது. தற்பொழுது பலரது கண்ணிலும் ஒரு நவ நாகரிக நாடாக, வெள்ளையர்களின் நாடாகத் தெரியும் நியூசிலாந்து நாடு உண்மையிலேயே மாவோரி மக்களுக்குத்தான் சொந்தமானது. இவர்கள்தான் நியூசிலாந்தின் ஆதிக்குடியினர். மாவோரி மக்கள் திராவிடக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற வாதம்கூட முன்வைக்கப்பட்டும் உள்ளது. நாம் அந்த வாதத்திற்குள் செல்லாமால் மாவோரிகள் என்றால் யார் என்பதையும் அவர்களினது பண்பாட்டினையும் பற்றி இவ்வாரம் கொஞ்சம் பார்க்கலாம்.


நியூசிலாந்தின் ஆதிக்குடியினரான மாவோரிகளை பொலினேசிய மக்கள் எனவும் சிலர் குறிப்பிடுகின்றார்கள். மாவோரிகள் பொலினேசியப் பகுதிகளிலிருந்து நியூசிலாந்திற்கு வந்த காலம் குறித்து உறுதியான தரவுகள் எதுவும் இல்லை. ஒரு தரப்பு வரலாற்று ஆய்வாளர்கள் மாவோரிகளின் நியூசிலாந்து வருகையை கி.பி 800ம் ஆண்டளவில் நிகழ்ந்தது எனக் குறிப்பிடுகின்றனர். மறுதரப்பாரோ இவர்களது வருகை 11ம் நூற்றாண்டில் அல்லது 14ம் நூற்றாண்டில் நிகழ்ந்திருக்கலாமெனக் கருதுகின்றனர். எது எப்பிடியோ இன்றைய நியூசிலாந்தின் தேசிய இனங்களுள் மாவோரிகளே முதன்மையானவர்கள் என்ற சிறப்பான இடம் உள்ளதை யாரும் மறுக்கமுடியாது. ஆனால் காலச் சக்கரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் அவர்களை இன்று ஒரு கையேந்தி வாழும் வாழ்க்கைக்குள் தள்ளிவிட்டது. நியூசிலாந்து பகுதிக்குக் குடியேறிய மாவோரிகள் தமது பொலினேசியப் பண்பாட்டினைவிடச் சற்று வித்தியாசமான வாழ்க்கை வாழத்தொடங்கினர். வேட்டையாடுதல், காட்டுவளங்களைச் சேகரித்தல், மீன் பிடித்தல், குறிப்பிட்ட பயிற்செய்கையில் ஈடுபடுதல் போன்றவையே நியூசிலாந்து மண்ணில் அவர்கள் மேற்கொண்ட வாழ்வியல் நடவடிக்கைகள். ஆனால் இந்த வாழ்விற்கு ஆங்கிலேயக் கடற்படைத் தலைவரும் ஆய்வாளருமான ஜேம்ஸ் குக்கின் வருகை ஆப்புவைத்தது. ஜேம்ஸ்குக் 1769ம் ஆண்டு நியூசிலாந்துப் பகுதிக்குச் சென்றதையடுத்து ஐரோப்பியர்கள் மளமளவென நியூசிலாந்தில் குடியேறத்தொடங்கினர். தாம் வாழ்ந்த மண்ணில் அந்நியர்கள் குடியேறுவதை மாவோரிகள் கடுமையாக எதிர்த்தபோதிலும் 1872ம் ஆண்டளவில் அவ் எதிர்ப்பு ஓய்விற்கு வந்துவிட்டது. அதன் பின்னர் மாவோரிகளின் வாழ்வில் ஐரோப்பிய நாகரீகம் புகுந்துகொள்ளத் தொடங்கியது.

இன்றைய மாவோரிகளை நகரவாசிகள், பழங்குடியினர் என இரு பிரிவாக வகுத்துக்கொள்ளும் விதத்தில் ஐரோப்பிய நாகரிகம் அவர்களைக் கூறுபோட்டுள்ளது. மாவோரிகளின் சமுதாயத்திற்கு அவர்களின் விரிந்த குடும்ப அமைப்பே சிறப்பான அங்கமாகக் கருதப்படுகின்றது. விரிந்த குடும்ப அமைப்புமுறை என்பது பெற்றோர், அவர்களது பிள்ளைகளை மாத்திரம்கொண்ட தனிக்குடும்ப அமைப்புடன் அவர்களது நேர்வழி உறவினர்களும் கிளைவழி உறுப்பினர்களும் சேர்ந்து வாழும் குடும்ப அமைப்புமுறையாகும். இவ்வகையான குடும்பங்கள் 'ஹப்பு' எனப்படும் குழுக்களாகக் கருதப்படுகின்றனர். மாவோரிகளின் சமுதாயத்தில் பல ஹப்புக் குடும்பங்கள் உள்ளன. இந்த ஹப்புக் குடும்பங்களுக்கிடையிலான சமுதாயச் சிக்கல்களைத் தீர்த்துவைப்பதற்கு மரபு வழியில் 'தொகுங்கா' எனப்படும் தலைவரும் இருக்கின்றார். மாவோரிகளின் சமய நம்பிக்கையும் கொஞ்சம் வித்தியாசமானது. இவைகளின் நம்பிக்கைப்படி மனிதன் எனப்படுபவன் உடல், ஆவி, உயிர்ஆற்றல் ஆகிய மூன்றினையும் கொண்டவன். அவற்றுள் ஆவி உடலிலிருந்து வெளியே சென்று உலக நிகழ்வுகளோடு தொடர்பு கொண்டதன்பின்னர் மீண்டும் உடலுக்குள் வாழும் தன்மைகொண்டது. ஆனால் உயிர்ஆற்றலானது உடலுக்குள் மட்டுமே வாழக்கூடியது. அது உடலைவிட்டு வெளியே சென்றால் இறப்பு நேரிடும் என்பது இவர்கள் நம்பிக்கை.


ஐரோப்பியர்களின் குடியேற்றம் மாவோரிகளுக்குள் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. இம் மாற்றங்கள் வளர்ச்சிப் போக்கானவையென ஒருசிலர் வாதிட்டாலும் மாவோரிகளுக்குக் கிடைத்தது என்னவோ அழிவுகள்தான். துப்பாக்கி பற்றி மாவோரிகளுக்கு ஆரம்பத்தில் ஒன்றுமேதெரியாது. ஆனால் ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின்னர் துப்பாக்கிகளை இவர்கள் பயன்படுத்தத்தொடங்கினர். இதனால் இவர்களுக்கிடையேயே அடிக்கடி மோதல்களும் ஏற்பட்டு பெரும் உயிரிழப்பு ஏற்பட்டது. 1814ம் ஆண்டில் மாவோரிகளின் எண்ணிக்கை 1, 00, 000 இற்கும் மேலிருந்தது. ஆனால் சில ஆண்டுகளுக்கு முன்னர் இவ் எண்ணிக்கையில் பெரும் சரிவு ஏற்படத் தொடங்கி 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான' கதையானது. ஐரோப்பியர்களின் வருகை மாவோரிகளின் அழிவிற்குக் காரணமானது மட்டுமல்ல, பல மாவோரிகளை அவர்களது கலாச்சார வாழ்வில் இருந்து நகர வாழ்விற்குள் தள்ளிவிட்டன. இன்று மாவோரிகள் முக்கால்வாசிக்கும் மேற்பட்ட பகுதியினர் நகரவாசிகளாக இருப்பதாகவே தரவுகள் சொல்லுகின்றன. மிகுதியானோரே பழங்குடியினராக இன்னமும் இருக்கின்றனர். 75 சதவீதமான இந்த மாவோரிகள் நகரவாசிகளாக இருந்தாலும் அவர்கள் உண்மையில் நகரவாழ்வினை அனுபவிக்கின்றார்களா? அல்லது நரக வாழ்வினை அனுபவிக்கின்றார்களா என்பதை உடனடியாக யாரும் கூறமுடியாது.

*தொகுப்பு: வேம்பு*

# காக்கைச் சிறகினிலே



தென்னிந்தியச் சினிமாவின் உயர்ந்த சாதி, தாழ்ந்தசாதி என்ற அடிப்படைத் தத்துவத்தில் இருந்து வெளிவரும் பி.வாசுவின் இன்னொரு படம் காக்கைச் சிறகினிலே. சிறையில் இருந்த பார்த்திபன் புல்லாங்குழலுடன் திரும்பி வரும் காட்சியுடன் படம் ஆரம்பமாகி, இறுதிவரை இளையராஜாவின் பின்னணியுடன் புல்லாங்குழலை வாசித்தபடி பிராமணக் குடும்பம் ஒன்றில் அநாதையாக வளரும் பார்த்திபன், அந்தக் குடும்பத்தின் விசுவாசமுள்ள, நம்பிக்கையுள்ள வேலையாளாக இருக்கின்றார். கோயிலில் பூசை நடக்கும்போது வெளியில் நின்று மணியடிப்பது இவரது வேலைகளில் ஒன்று. காரணம் பார்த்திபன் ஒரு தாழ்ந்தசாதி என்பதே. இந்நிலையில் ஒருநாள் குழந்தையொன்று அழும்போது பா்லாபிசேக்த்திற்கு வைத்திருந்த பாலை, ஆலயத்திற்குள் சென்று எடுத்துவந்து குழந்தைக்குப் பருக்கியதால் பஞ்சாயத்தின் முன் கொண்டுவரப்படும் பார்த்திபன், அங்கு அபிசேகத்திற்காக வைத்திருந்த ஆயிரம் குடம் பால்களில் குழந்தைக்கு கொடுத்தபாலே இறைவனைச் சென்றடைந்ததாக தனது பாணியிலேயே விளக்கத்துடன் கூறுவது மூடநம்பிக்கைத்தனங்களினால் சமூகம் வீணடித்துக் கொண்டிருக்கும் செயற்பாடுகளை சுட்டிக்காட்டுவதாக அமைந்திருந்தது பாராட்டும்படியாக அமைந்திருந்தது.



ஐயரின் மகளாக படிப்பை முடித்துவிட்டு வரும் ப்ரிதா விஜயகுமாரை சிறு வயதில் இருந்தே தூக்கிவளர்த்த பார்த்திபன், வளர்ந்த பின்னரும் பாசத்துடன் பழகுவது இருவருக்கும் இடையில் உள்ளது காதலே என்பதுபோன்ற தோற்றப்பாட்டை பார்வையாளர்கள் மத்தியில் ஏற்படுத்திவிட்டு, இரண்டுபேரிடமுமே அப்படியான எண்ணம் இல்லை என காட்டியதுடன், ப்ரீதாவை அவரது காதலனுடன் இணைத்து வைக்கவேண்டிய பொறுப்பும் பார்த்திபனிடம் வரும்போது வழக்கமான கதையமைப்பில் இருந்து சற்று மாறுபட்டுச் செல்கின்றது. ஐயராக வரும் எஸ்.விஸ்வநாத் கிராமப் பஞ்சாயத்துத் தலைவராக, நியாயமான தீர்ப்பு கூறிவரும் வேளை, 'உங்களது தீர்ப்பு ஒருநாள் தப்பாக அமையத்தான் போகுது, அப்போது என் முன் வந்து நிற்பீர்கள்' என பார்த்திபன் கூறுகின்றார். அதற்கு அப்படியொன்று நடந்தால் அதற்கு முன் தனது உயிர் போய்விடும் என்பார். இந்நிலையில் மனைவியாக வரும் லட்சுமி வில்லனான தனது மருமகன் எங்கே தனது மகளை திருமணம் செய்துவிடுவானோ எனப் பயந்து பயந்தே செத்துவிடுகிறார். ஊரார் பார்த்திபனுக்கும் ப்ரீதாவிற்கும் இடையில் தவறான உறவு எனும் கருத்துக்களைப் பரப்பிவிடுவதையும், பார்திபனின், ப்ரீதாவின் நடவடிக்கைகளின் மூலமும் அதனை உண்மையென நம்பிவிடும் தகப்பன், பார்த்திபனைத் தண்டித்தும் விடுகிறார். அதன் பின்னர்தான் தான் தவறான தீர்ப்பை வழங்கியதை உணர்ந்துகொண்டு, சொன்னது போலவே உயிரையும் விட்டுவிடுகிறார். பெற்றவர்களை இழந்த ப்ரீதாவை அவரது காதலனுடன் இணைத்துவைக்க முயற்சிக்கும் பார்த்திபன், அந்த ஊரில் உள்ள எஸ்.எஸ். சந்திரன், தியாகு போன்றவர்களால் தனக்கு வரும் தடைகளைக் கடந்து எப்படித் திருமணம் செய்து வைக்கிறார் என்பதே காக்கைச் சிறகினிலேயின் முடிவு.

நாடோடியாக வரும் ஹனீபா தனக்கு மது வாங்கிக்கொடுப்பவர்களுக்கு எல்லாம் தனது மகளை கட்டிவைப்பதாக உறுதியளிப்பதும், மறுநாள் பெண்கேட்டுச்செல்பவர்களை அடிப்பதும் பெற்றவர்களின் பொறுப்பற்ற தன்மையைக் காட்டுவதாக அமைந்துள்ளது. நகைச்சுவைக்காக வரும் வடிவேலு அடிக்கடி பார்த்திபனிடம் மாட்டிக்கொண்டு முழிப்பது, பாரதி கண்ணம்மாவை நினைவுபடுத்தினாலும், சைக்கிளை திரும்ப விடும்போதுதான் வாடகைப் பணம் தரலாம் என்று சொல்லியதைக்கேட்டு, வாடகைக்குச் சைக்கிளை எடுத்து மாதக்கணக்காகத் திருப்பிக்கொடுக்காமல் திரிவதும் ரசிக்கும்படியாக உள்ளது.

கலைஞானத்தின் மூலக்கதைக்குக் கதை, திரைக்கதை, வசனம் எழுதி பி.வாசு இயக்கியுள்ள இப்படத்திற்கு இசைஞானி இளையராஜா இசையமைத்திருக்கிறார். ஆர்.வி.உதயகுமாரின் பாடல்வரிகளும் அதற்கு இசைஞானியின் இசையமைப்பும் கேட்பதற்கு இனிமையாக அமைந்துள்ளன. வாடகைப் பிரதியில் பார்க்கலாம்.

*- செந்தூரன்*

# திருக்குறள் மனனப்போட்டி 2000

பாரிஸ் தமிழர்கல்வி நிலையத்தினரால் தர்ஷனா உணவகம், தங்கமாளிகை, தமிழாலயம் ஸ்தாபனங்களின் ஆதரவுடன் 12.03.2000 ஞாயிறன்று பாரிஸ் தமிழர் கல்வி நிலையத்திற்கு அண்மையில் அமைந்துள்ள A.G.E.C.A மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. தங்கமாளிகை உரிமையாளர் மங்கல விளக்கேற்றி போட்டிகளை ஆரம்பித்துவைத்ததுடன் போட்டியில் வெற்றியீட்டியவர்கட்கும் பங்குபற்றியவர்கட்கும் பரிசில்கள் வழங்கிச் சிறப்பித்தார். தர்ஷனா, தமிழாலய ஸ்தாபனத்தினர் ஏனைய முக்கிய வழிகளில் முன்னின்று, போட்டி சிறப்பே நடைபெற பெரிதும் உதவியிருந்தனர்.

கல்வி நிலைய ஸ்தாபகரும் காப்பாளருமாகிய திரு.சி.காராளபிள்ளை (இளைப்பாறிய அதிபர்) அவர்கள் சிறப்புரையாற்ற, தலைவர் திரு.சோ. கஜேந்திரன் (பிரெஞ்சு ஆசிரியர்) தலைமையுரையாற்றினார். போட்டியின் நிர்வாக ஒழுங்கமைப்புக்களை நிலைய செயலாளர் திரு. த. பாகீசன் நெறிப்படுத்த, போட்டிகளை நிலைய முன்னைநாள் தலைவர் திரு.இ.சிறீஸ்கந்தராசா தொகுத்து வழங்கினார்.

போட்டிகளின் நடுவர்களாக ஆசிரியர்களான திரு.ம. றொணி, திரு.த.சிவசிறி, திருமதி ச.சந்திரசேகரம், திருமதி J.மேரிவதனா, திருமதி இ.சத்தியவதனி, திருமதி V.சரோஜாதேவி ஆகியோர் கடமையாற்றினர்.

பல்வேறு தரப்பினரதும் ஒத்துழைப்புடனும் பாராட்டுக்களுடனும் நடைபெற்ற இப்போட்டியானது கல்வி நிலைய மாணவர்கள் தவிர்ந்த வெளிமாணவர்கள் மட்டத்திலும் பல்வேறு பிரிவுகளாக நடைபெற்று பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. நூற்றுக்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்குபற்றிய இப்போட்டியில் மாணவர்களின் ஊக்கத்தை மேம்படுத்த பங்குபற்றிய அனைவருக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டது. போட்டியின் சிறப்பம்சமாக வெளிமாணவர்களுக்காக பாலர் பிரிவில் பங்குபற்றிய மூன்று வயதுச் சிறுமி அடானா அனைத்து குறள்களையும் தெளிவாக ஒப்புவித்து முதற்பரிசையும் பெற்றுக்கொண்டார்.

**பரிசு பெற்றோர் விபரம்:**

**பாலர்பிரிவு:**

1ம் இடம் செல்வி ப. மிதுலா
2ம் இடம் செல்வி ஜெ. கீர்த்தனா
3ம் இடம் செல்வி சோ. துர்க்கா

**வெளிமாணவர்**

1ம் இடம் செல்வி அடானா
2ம் இடம் செல்வி சகானா
3ம் இடம் செல்வன் ந.நிந்துலன்

**கீழ்ப்பிரிவு:**

1ம் இடம் செல்வி நி. தீப்திகா
2ம் இடம் செல்வன் ஆ. திவாகர்
3ம் இடம் செல்வன் சோ. கஜன்

**மத்திய பிரிவு:**

1ம் இடம் செல்வி ஜனனி
2ம் இடம் உதிஷ்ரா
3ம் இடம் புளோரியா

**வெளி மாணவர்**

சிறப்பிடம் செல்வி. ரூ.அனர்ஜி

**மேற்பிரிவு:**

1ம் இடம் செல்வன் கெ. றொப்சன்
2ம் இடம் செல்வி ப. மதுரா
3ம் இடம் செல்வன் கோ. ஜனனன்

**உயர்பிரிவு:**

1ம் இடம் செல்வி சி. தனுஜா
2ம் இடம் செல்வன் ர. கஜிபன்
3ம் இடம் செல்வி. ச. கமலினி

**அதியுயர்பிரிவு:**

1ம் இடம் செல்வி ச. மதனா
2ம் இடம் செல்வி ச. சைலஜா
3ம் இடம் செல்வன் ந. கபில்ராஜ்

*தகவல். பு.சிறீசோடான்*

## நெதர்லாந்து மாவீரர்நாள் போட்டிகள் 2000

நெதர்லாந்து ஈழத்தமிழர் விளையாட்டு ஒன்றியம் நடாத்தும் 2000ம் ஆண்டிற்கான மாவீரர் நாள் விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாக உள்ளன.

1. உதைபந்தாட்டம் (ஆண்கள்)
2. மென்பந்து துடுப்பெடுத்தாட்டம் (ஆண்கள்)
3. கயிறு இழுத்தல் (ஆண்கள்)
4. 'டாம்' (இருபாலரும்)
5. முட்டி உடைத்தல் (ஆண்கள்)
6. சங்கீதக்கதிரை (பெண்கள்)
7. பூப்பந்தாட்டம் (அனைவரும்)
8. சுவட்டு மைதான போட்டிகள் (15 வயதிற்கு உட்பட்டவர், 10 வயதிற்குட்பட்டவர், 6 வயதிற்குட்பட்டவர்)

என இடம்பெறும். இவ்விளையாட்டுகளில் பங்கு பற்ற விரும்பும் வீரர்கள், வீராங்கனைகள், கழகங்கள் 21.04.2000க்கு முன்னர் ஒன்றியத்துடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு: V. செல்வம்
Sumatra Stade 27,
1944 WG Beverwijk,
தொலைபேசி: 0251 - 232661

# புகலிட நிகழ்வுகள்

## மலேசியாவில் குமாருக்கு இரங்கல்

அண்மையில் மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வும், கூட்டமும் இடம்பெற்றது. ஏராளமான உணர்வாளர்கள் கலந்துகொண்ட இந் நிகழ்வில் உலகத் தமிழர் நிவாரண நிதியத்தின் அமைப்பாளர் திரு.பசுபதி, மலேசிய தமிழ்நெறிக் கழகத்தின் தலைவர் இரா. திருமாவளவன், மற்றும் தமிழர் நிவாரண நிதியத்தின் சார்பில் திரு.நேசரட்ணம், திரு.கணேசலிங்கம் ஆகியோரின் இரங்கல் உரையும், திரு.வீ. பூங்குன்றனின் இரங்கல் கவிதையும் இடம்பெற்றது.

இதேவேளை மலேசியாவின் பினாங்கு பகுதியிலும் குமார் பொன்னம்பலத்திற்கு நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. மலேசிய தமிழ்நெறிக் கழகமும், உலகத் தமிழர் நிவாரண நிதியமும் இணைந்து இந் நிகழ்வை நடாத்தினார்கள். இந் நிகழ்வில் மு.தமிழ்வாணன், பழ.வீரன், சு.இராஜன் ஆகியோர் கலந்துகொண்டு குமார் பொன்னம்பலம் அவர்களின் வாழ்வு பற்றியும், புகலிட மக்களின் இன்றைய நிலை பற்றியும் உரை நிகழ்த்தினார்கள். அத்துடன் மலேசியாவில் குமார் பொன்னம்பலம் அவர்களின் மலர் ஒன்று வெளியிட்டு வைக்கப்பட்டது.

**– பழ. வீரன்.**

## ராம நவமி விழா

சித்திரை மாதம் 12ம் திகதி புதன்கிழமை (12.04.2000) ராம நவமிவிழா அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மண்டபத்தில் (Muthumari Amman Temple. 26, Rue département, 75018 Paris) ராதா கிருஷ்ண ஆலயத்தினரால் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது. அத்துடன் ராமாயணம், மகாபாரதம், பகவத் கீதை, பகவதம் கேள்வி - பதில் எழுத்துப் போட்டி பரீட்சையும் நடைபெறுகிறது. ராம நவமி பூசையைக் கண்டுகளித்து ராம பகவான் அருளை பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றார்கள்.

தொடர்புகளுக்கு:
ராதா கிருஷ்ணா ஆலயம்
தொலைபேசி: 01.43.03.09.51





சிம்ரன், ரம்பா, தேவஜானி, கௌசல்யா, சுவலட்சுமி, ரம்யாகிருஸ்ணன், இஷா கோபிகர் ஆகிய ஏழு முன்னணி நடிகைகளும் பிரசாந் - தாமு - சின்னிஜெயந் பாடகி ஹரிணி - அனுராதா ஸ்ரீராம், 15 நாட்டிய தாரகைகளுடன் சுலா, தேவா இசைக் குழுவினருடன் தேவா- தேவாவின் சகோதரர்கள் உங்களை காண வருகிறார்கள்

அரிய சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்
ரிக்கற் விற்பவர்களுக்கு விசேட விலைக்கழிவு உண்டு

நுழைவுச்சீட்டுக்கள் அனைத்து தமிழ் வர்த்தக ஸ்தாபனங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்
முற்கூட்டியே பதிவு செய்பவர்களுக்கு முன் வரிசை இருக்கைகளில் இடம் கிடைக்கும்

ONLY
RESERVATION

LE ZENITH
PARK DE LA VILLETTE
M° : Porte de Pantin ou Porte de la Villette

ரிக்கற்றுகளை மொத்தமாக பெற்றுக்கொள்ள விரும்புவோர் இவ் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

Le Dimanche 23 Avril à 17h00
23 ஏப்ரல் 2000 ஞாயிறு மாலை 5 மணிக்கு
(திங்கட்கிழமை அரச விடுமுறை நாள்)

KARUMARI VIDEO
12 Av Paul Vaillant Couturier, 93120 LA COURNEUVE
Tél : 01 48 35 00 61
Tél & Fax : 01 48 35 00 09

TAMIL ACHCHAKAM
59 Rue Louis Blanc, 75010 PARIS
Tél : 01 42 09 60 64

# நெதர்லாந்தில் நடந்த அமைதிப் பேரணி

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெறும் மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்தியும், அதேவேளை அரசியல் தஞ்சம்கோரி நிராகரிக்கப்பட்ட நிலையில் தமிழர்கள் திருப்பி அனுப்பப்படுவது அவர்களின் உயிர்களுக்கு ஆபத்தானது என்பதை வெளிப்படுத்தியும் நெதர்லாந்தில் கடந்த செவ்வாய்க்கிழமை 7ம் திகதி டென்காக் மாநகரில் அமைந்துள்ள நெதர்லாந்துப் பாராளுமன்றம் நோக்கி நெதர்லாந்து வாழ் தமிழர்கள் மாபெரும் அமைதிப் பேரணி ஒன்றினை நடாத்தியிருந்தார்கள்.

அண்மைக்காலமாக நெதர்லாந்தில் அரசியல் தஞ்சம்கோரி நெதர்லாந்து அகதித்திணைக்களத்தால் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்கள் சிறீலங்காவிற்கு நெதர்லாந்து அரசால் திருப்பி அனுப்பப்பட்டிருக்கின்றார்கள். அப்படி சிறீலங்காவிற்கு திருப்பி அனுப்பப்பட்டவர்கள் கொழும்பு விமான நிலையத்தில் வைத்து சிறீலங்கா அரசினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இப்படியாக சிறீலங்காவிற்குத் திருப்பி அனுப்பப்படுவதற்குக் காரணம் - தமிழர்கள் சிறீலங்காவில் பாதுகாப்பாக வாழலாம் என நெதர்லாந்து அகதித்திணைக்கள நீதித்துறை எடுத்த முடிவே.

எனவே இம் முடிவு உண்மைக்குப் புறம்பானது. தமிழர்களுக்கு எதிரானது என்பதனை நெதர்லாந்து அரசிற்கும் நெதர்லாந்து மக்களுக்கும் தெரியப்படுத்துமுகமாகவே இவ் ஊர்வலம் நடாத்தப்பட்டது. இவ் ஊர்வலத்தில் தமிழர்களுக்கு எதிராக சிறீலங்கா அரசினால் திட்டமிட்டு நடாத்தப்படுகின்ற கொடூரமான மனித உரிமை மீறல்களைத் தெரிவிக்கின்ற வகையிலே எமது மக்கள் பதாகைகள் மூலமாகவும் நிழற்படங்கள் மூலமாகவும் வெளிப்படுத்தினர். அத்துடன் சிறீலங்காவில் தமிழர்களுக்குப் பாதுகாப்பில்லை எனவே தமிழர்களை அங்கு இப்பொழுது திருப்பி அனுப்பாதே என மக்கள் முழங்கினர். சந்திரிகா பேசுவது சமாதானம், ஆனால் செய்வது போர். உங்களால் அபிவிருத்திக்கென்று கொடுக்கப்படுகின்ற பணம் - தமிழர்களை அழிக்கவே சிறீலங்கா அரசினால்






பயன்படுத்தப்படுகின்றன. சர்வதேச சமூகமே தமிழர்களின் புதைகுழிகளைப் பார்வையிடுவதற்கு உனது கண்களைத் திற. தமிழ்ப்பெண்களும் தமிழ்ச் சிறுவர்களும் அரசபடைகளினால் பாலியல் வதைகளுக்கும் பாலியல் படுகொலைகளுக்கும் உள்ளாக்கப்படுகின்றார்கள். ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் சிங்களச்சிறைகளில் விசாரணையின்றி தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள் - சித்திரவதை செய்யப்படுகின்றார்கள். தமிழ் மாணவர்கள் அவர்கள் கல்வி பயிலும் பாடசாலை வளாகத்திலேயே அரச படைகளால் கைது செய்யப்படுகின்றார்கள். இலட்சக்கணக்கான மக்கள் இப்போரினால் தமது உடமைகள் அனைத்தையும் இழந்து சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டுள்ளனர். மருந்துகளும் உணவுப் பொருட்களும் சிறீலங்கா அரசினால் தமிழர்களுக்கெதிராக தடைசெய்யப்பட்டுள்ளன. சிறீலங்கா அரசே! தமிழ் மக்களுக்கெதிரான உனது தாக்குதல்களை உடனடியாக நிறுத்து. சர்வதேசமே! சிறீலங்கா அரசிற்கான உனது உதவிகளை நிறுத்து, ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்காகக் குரல்கொடு, எம் மண்ணிலுள்ள போர்ச்சூழலே எம்மை இங்கு இடம்பெயர வைத்துள்ளது. இதுபோன்ற வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கிய வண்ணமும் கோசித்த வண்ணமும் ஊர்வலம் டென்காக் மாலிபெல்ட் திடலிலிருந்து மதியம் ஒரு மணியளவில் நெதர்லாந்து பாராளுமன்றம் நோக்கி நகர்ந்தது. நெதர்லாந்துப் பாராளுமன்ற முன்றலில் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தமிழ்மக்களுக்கெதிராக சிறீலங்கா அரசினால் திட்டமிட்டு நடாத்தப்படுகின்ற மனித உரிமை மீறல்களைச் சுட்டிக்காட்டும் மகஜர் ஆதாரத்துடன் தமிழர் ஐக்கிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களால் கையளிக்கப்பட்டது. அவர்கள் மகஜரை தமிழ்மக்கள் முன்னிலையில் பெற்றுக்கொண்டதுடன் இது பற்றி பாராளுமன்றத்தில் கதைப்பதாகவும் கூறினர். இம் மகஜர்கள் நெதர்லாந்து வெளிநாட்டமைச்சகத்திடமும் அகதிகள் பற்றி முடிவெடுக்கின்ற அகதித்திணைக்களத்தின் நீதியமைச்சகத்திடமும் கையளிக்கப்பட்டன. அப்பொழுது இம்மகஜரைப் பெற்றுக்கொண்ட அகதித்திணைக்களத்தின் நீதியமைச்சகத்திற்கான ஆலோசகர் கருத்துத் தெரிவிக்கையில், இப்பொழுது சிறீலங்காவின் நிலைமைபற்றி தாங்கள் ஆராய்ந்து கொண்டிருப்பதாகவும் இன்னும் ஆறுவார காலத்திற்குள் நல்லதொரு முடிவு எடுக்கப்படும் எனக் கூறியிருப்பதாக இம்மகஜரை அவரிடம் கையளித்த தமிழர் ஐக்கிய ஒன்றிய உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். அப்படி தமிழ் அகதிகள் பற்றி முடிவெடுக்கும்பொழுது ஆதாரத்துடன் தரப்பட்டிருக்கும் இம்மகஜரில் குறிப்பிடப்பட்டிருப்பதனையும் கவனத்திலெடுக்குமாறு தாம் கூறியதாக அவ் உறுப்பினர் தெரிவித்தார்.

இவ் ஊர்வலம் மீண்டும் பாராளுமன்றத்திலிருந்து நகர்ந்து, வந்தவழியாக ஊர்வலம் ஆரம்பித்த இடமான மாலிபெல்ட் திடலை அடைந்தது. இவ்வூர்வலத்தில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்களும் சில நெதர்லாந்து மக்களும் பங்குபற்றியிருந்தனர். முதன்முறையாக நெதர்லாந்தின் பல பிரச்சாரச் சாதனங்களும் இவ்வூர்வலத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துச் செய்திகளை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ் ஊர்வலத்தை நெதர்லாந்தில் உள்ள பல தமிழ் அமைப்புக்கள் ஒன்றிணைந்து தமிழர் ஐக்கிய ஒன்றியம் என்ற பெயரின் கீழ் நடாத்தியிருக்கின்றன. நெதர்லாந்தின் பல பாகங்களிலிருந்தும் போக்குவரத்து வசதிகள் இவ்ஊர்வலத்தில் பங்குபற்றும் மக்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. மாலை 4 மணிக்கு மாலிபெல்ட் திடலில் டென்காக் வாழ் தமிழ்மக்கள் இவ் ஊர்வலத்தில் பங்குபற்றியவர்களுக்கு குளிர்பானங்கள் வழங்கி இவ்வூர்வலத்தினை நிறைவு செய்துவைத்தனர்.

# 3வது ஆண்டு நிறைவு விழா மாலதி தமிழ்க் கலைக்கூடம்

(டென்மார்க்)

நியூபோ, சிவன்போ ஆகிய இரு நகரங்களை உள்ளடக்கியதான மாலதி தமிழ்க் கலைக்கூடங்கள் தமது மூன்றாவது ஆண்டு நிறைவு விழாவை கடந்த 04.03.2000 சனிக்கிழமை நியூபோ நகரில் கொண்டாடினார்கள்.

இந்த விழாவானது பி.பகல் 3.30 மணியளவில் திருமதி சின்னம்மா வாரித்தம்பி அவர்கள் மங்கலவிளக்கு ஏற்றி வைக்க, ஆரம்ப நிலையை அடைந்தது. தொடர்ந்து கொடி வணக்கப் பாடல் பிற்பாடு பிரார்த்தனை அமைதி வணக்கம் என விரிந்து மாணவர்களுடைய நிகழ்வில் பேச்சு, பாரதியார் பாடல்கள், பாடல்கள், கவிதைகள், விடுதலைப்பாடலுக்கான நடனங்கள் என மிகவும் திறம்பட ஒவ்வொரு நிகழ்வும் மேடையை அலங்கரித்தே சென்றன.

நமது கலைகளில் ஒன்றான வில்லுப்பாட்டும் சிவன்போ ஆசிரியர்களின் தயாரிப்பில் 'மாணவர்களால் ஒற்றுமை' எனும் தலைப்போடு... முயற்சியளாலும் திறம்படத் தந்திருந்தார்கள். தாளலய நாடகமும் சிவன்போ மாணவர்களால் 'நம்பிக்கை' எனும் தலைப்போடு தந்து சிறப்பித்தார்கள். தொடரும் நிகழ்வில் 'ஒற்றுமையின் பலம்' எனும் கதை சொல்லப்பட அதற்கான வெளிக் கொணர்வை மேடையில் செய்து காண்பித்தார்கள் நியூபோ மாணவர்கள். இதற்கான கதையை புருசோத்தமன் ஜெயலிங்கம் எனும் மாணவர் சொல்லிக்கொண்டார். இதைத் தயாரித்து வழங்கி இருந்தார் திருமதி மல்லீஸ்வரி ஆதவன். மடு மாதா ஆலய குண்டு வெடிப்பு நியூபோ மாணவர்களால் கதையோடு காட்சியாக மேடையில் நிகழ்த்திக் காட்டினார்கள். இந் நிகழ்வு பார்ப்போரை நெகிழவைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அவ்வளவிற்கு இது நேர்த்தியாக மாணவர்களால் செய்து காண்பிக்கப்பட்டிருந்தது. இதையும் திருமதி மல்லீஸ்வரி ஆதவனே வழங்கி இருந்தார். தொடர்ந்தும் 'செம்மணியின் அவலம்' இதுவும் கதையோடு காட்சியாகவே மேடையில் விரிந்திருந்தது. நியூபோ மாணவர்களால் இதுவும் சிறப்புற வழங்கப்பட்டது. இதுவும் திருமதி மல்லீஸ்வரி ஆதவனுடைய தயாரிப்பே.

இருட்டு எனும் தலைப்பிட்டு கவிதை திருரவிக்குமார் தயாரித்திருந்தார். இதில் பங்கேற்று இருந்தவர்கள் தீபாகரன் ரவிக்குமார், சிறீவாணி ரவிக்குமார். இதுவும் சிறப்புற அமைந்திருந்தது.

நாடகம் 'ஒரு சுமங்கலியின் அவலம்' இதில் சிவன்போ மாணவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார்கள். இதில் பங்கேற்ற மாணவர்கள் யாவரும் திறமையுடன் செயலாற்றி இருந்தார்கள். இதனூடு எமது தேசத்தில் போர் நடவடிக்கைகளால் விதவைகளாக்கப்பட்ட பெண்களின் நிலையை பார்ப்போரின் மனங்களை வருடிக்கொள்ளும் வகையில் மிகவும் திறமையோடு மேடையில் தயாரித்து வழங்கி இருந்தார் திருமதி ராணி சிறீதாஸ்.

இவற்றின் நடுவே சிறப்புரையை டென்மார்க் மாலதி தமிழ்க் கலைக்கூட நிர்வாகியான திரு.தி.அருளானந்தராசா தந்திருந்தார். இவர் தனது உரையில் 'மாலதி தமிழ்க் கலைக்கூடமானது மூன்றாவது ஆண்டை நிறைவு செய்து இப்படியானதொரு விழாவை சிறப்புறச் செய்வதைக் காணும்போதும் மனம் மகிழ்வடைகின்றது என்றும் இந்த முயற்சியானது எமது பெற்றோர்களினதும் ஊக்கத்துடனும் ஆக்கத்துடனும் மென்மேலும் வளர்ந்து விருட்சமாகும் என்பதில் ஐயமில்லை என்றும் தெரிவித்தார்.

விழாவில் 'தாயக நினைவுகள்' எனும் கண்காட்சியும் சிவன்போ மாணவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. கண்காட்சியில் எமது தேசம் சார் 'அரசியல், பொருளாதார வரலாற்று நிலைகளை விளக்கிக்கொண்டதோடு தமிழீழ தேசமும் அதன் நகர மையங்களும் தொழில் வாய்ப்புகளும், அன்றாட பாவனைப் பொருட்களும் தமிழீழ நினைவில் நீங்க, மாவீரர் துயிலும் இல்ல மாதிரி அமைப்புப் பார்ப்போரை தாயகத்துடன் இணைத்தே இருக்கும்.

இவற்றின் இணைவோடு இரு புத்தகங்களும் வெளியீடு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. முதலாவதாக இரு நகர ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து உருவாக்கிய 'துளிர்' எனும் நூலை திருமதி சின்னம்மா வாரித்தம்பி வெளியிட, மாலதி தமிழ்க் கலைக்கூட நிர்வாகி திரு.தி.அருளானந்தராசா பெற்றுக்கொண்டார். அடுத்து நியூபோ மாலதி தமிழ்க் கலைக்கூட ஆசிரியை திருமதி சின்னம்மா வாரித்தம்பி அவர்களினால் உருவாக்கப்பட்ட 'சிறுவர் கதைக்கதிர் 3' எனும் நூலும் திரு.உதயகுமாரன் இராஜதுரை அவர்களால் வெளியிட்டு வைக்க திருமதி மல்லீஸ்வரி ஆதவன் அவர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டது.

நிகழ்வின் முடிவாக விடுதலை கானங்கள் இரு நகரத்து மாணவர்களாலும் திறம்படத் தரப்பட்டிருந்தது. முதல் பாடலாக 'கல்வியும் எங்கள் மூலதனம் அதில் கத்தி வைக்கிறது ஆளும் இனம்' எனும் பாடலும், முடிவாக 'நம் புங்கள் தமிழீழம் நாளைபிறக்கும்' என்ற பாடலும் அமைத்து சிறப்புடன் நான்கு பாடல்களை முதல் முயற்சியாகத் தந்த இந்த மாணவ இசைக்குழு பாராட்டுக்கூடியதே

இறுதிப் பாடலுடன் நிகழ்வுகள் யாவும் இனிதே நிறைவுக்கு வந்தன.

– சே. ஆனந்தன்.

# வால் து வாஸ் தமிழ் பெற்றோர்களுக்கான கல்வி ஆலோசனை

பிரான்சில் வாழும் தமிழ் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வி மற்றும் எதிர்காலம் பற்றிய பூரண அறிவைப் பெற்றவர்களாக இருப்பது அவசியமானது. பிரான்சின் கல்வி நடைமுறை பல பெற்றோர்களுக்கு குழப்பமானதாகவும் புரியாததாகவும் இருப்பது பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு ஆரோக்கியமானதல்ல.

இக் குறைபாட்டை தீர்ப்பதற்காக பெற்றோர்களுக்கும் — மாணவர்களுக்கும் பிரான்சின் கல்வி நடைமுறை என்ன? அது எவ்வாறு, செயற்படுகின்றது? நாங்கள் எவ்வாறு அதனை தேர்வு செய்யலாம்? அரசு இதற்காக எமக்குச் செய்யும் உதவிகள் என்ன? என்பவை போன்ற விடயங்களுக்கு விளக்கம் தர வருகிறார் முன்னாள் கல்லூரி அதிபரும், கல்வி நிர்வாகத்தில் பங்குகொண்டுவருபவருமாகிய பேராசிரியர் ஜோன் மரியூலியா.

**காலம்:-** **01.04.2000 சனிக்கிழமை மாலை 5.30 மணி**
**இடம்:-** EMTREINTE
Centre Social Des Grandes Bornes
2, allée Maurice Ravel, 95190 Goussainville.
*– குசன் வில் தமிழ்ச்சங்கம்*

**காலம்:-** **02.04.2000 ஞாயிறு காலை 10.30 மணி**
**இடம்:-** SALLE D'ASCQ
59, rue D'Ascq, 95100 Argenteuil
*– ஆர்ஜெந்தெயில் தமிழ்ச்சங்கம்*

**காலம்:-** **02.04.2000 ஞாயிறு பிற்பகல் 2 மணி**
**இடம்:-** L.C.R
Linandes, 95000 Cergy
*– தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சேர்ஜி பொந்துவாஸ்*

**காலம்:-** **02.04.2000 ஞாயிறு மாலை 4 மணி**
**இடம்:-** M.J.C
10, bis AV. Paul Valéry, 95200 Sarcelles
*– கார்ஜ் சார்சல் தமிழ் சங்கம்*
*– வில்லியே லூ பெல் கோனேஸ் தமிழ்ச்சங்கம்*

# வங்கச் சிங்கம் -20

## சுபாஸ் சந்திரபோஸ்

### குழப்பம் வந்தது

சில நாட்களுக்குள்ளாகவே அந்தப் படையில் பெருங் குழப்பம் ஏற்பட்டது. என்ன குழப்பம் அது? ராஷ்பிகாரி போஸ் இந்திய தேசிய இராணுவம் அமைத்திருந்தாலும் ஜப்பானியரின் கைப்பாவையாகத்தான் அவர் இருந்தார். அவர்கள் சொல்வதை அவரால் தட்ட முடியவில்லை. ராஷ்பிகாரியின் படையை ஜப்பான் பயன்படுத்திக்கொள்ளப் பார்த்தது. ராஷ்பிகாரி ஒத்துக்கொண்டார். படை வீரர்கள் ஒத்துக்கொள்ளவில்லை.



இதனால்தான் படையில் பெரும் குழப்பம். ராஷ்பிகாரியால் அடக்க முடியவில்லை. தனது படையில் பெருங்குழப்பம் செய்தவர்களைத் தானே ஜப்பானியரை வைத்துக் கைது செய்யும்படியான சூழல் ஏற்பட்டது. அப்படிக் கைதானவர்களில் கேப்டன் மோகன் சிங்கும் ஒருவர். எதிர்த்தவர்கள் போக இருப்பவர்களை வைத்து மீண்டும் அப்படையினை ஒழுங்கு படுத்த அவர் படாதபாடு பட்டுக் கொண்டிருந்தார்.

### போஸ் அறிந்தார்

இந்தச் செய்தி ஜேர்மனியில் இந்திய தேசிய இராணுவத்தை அமைத்துப் படை நடத்திக்கொண்டிருந்த சுபாஸ் சந்திர போசுக்குத் தெரிந்தது. உடனே அவர் ஜப்பானுக்கும் ஏனைய தூரகிழக்கு நாடுகளுக்கும் செல்ல வேண்டும் என்று விரும்பினார்.

நாலாபுறமும் போர் மேகங்கள் சூழ்ந்திருந்த வேளையில் எப்படிப் போவது? வான் வழியும் பாதுகாப்பு இல்லை; கடல்வழியும் பாதுகாப்பு இல்லை; தரை மார்க்கமாகப் போவது என்பது எந்த விதத்திலும் சாத்தியமானது அன்று. என்ன ஆனாலும் புறப்பட்டே தீர வேண்டும். அதற்காக ஒரு வழியைத் தேர்ந்தெடுத்தே ஆகவேண்டும். முடிவில் கடல் வழியாகப் போவதென்று தீர்மானிக்கப்பட்டது. அமெரிக்கப் போர்க் கப்பல்களும் நீர் மூழ்கிகளும் அவைகளுக்குப் பக்கபலமாகப் பிரிட்டிஷ் போர்க் கப்பல்களும் ஆங்காங்கே வலம் வந்து கொண்டிருந்தன. இவற்றின் கொடூரக் கண்களுக்கு அகப்படாமல் தப்பித்துச் செல்லவேண்டும்.

### ஜப்பான் பயணம்

ஒரு ஜேர்மன் நீர் மூழ்கிக் கப்பலில் ஏறிக்கொண்டார். அவருடைய அந்தரங்கச் செயலாளர் கர்னல் ஹசன், லெப்டினன்ட் குலாம் ஹைதர், ஒரு ஜப்பான் அதிகாரி, இன்னொரு ஜப்பான் அதிகாரி ஆகியோரும் அவருடன் ஏறிக்கொண்டனர். ஆறு வாரங்கள் அந்த நீர்மூழ்கி பயணித்தது. எதிரிகளால் அதைக் கண்டு பிடிக்கவே முடியவில்லை. 1943–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20 ஆம் நாள் போசும் அவருடன் வந்தவர்களும் ஜப்பான் தலைநகரான டோக்கியோவை வந்தடைந்தனர்.

டோக்கியோவில் அவருக்குப் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. பத்து நாட்களுக்குமேல் அங்கு தங்கி இருக்கும் வாய்ப்புக் கிடைத்தது. ராஷ்பிகாரி போசைச் சந்தித்தார். அவரால் அமைக்கப்பட்டுக் கலைந்துபோன இந்திய தேசிய இராணுவத்தினரைச் சந்தித்தார். அவர்களுடன் அன்புடன் பேசினார். அவர்களை மனமாற்றம் அடையும்படி செய்தார். தாம் அமைக்கப்போகும் பெரும் படையில் அவர்களை இணைத்துக்கொள்வதாகக் கூறினார். அவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்.

### சிங்கப்பூர் வருகை

அதன் பிறகு ஜூலைத் திங்கள் 2ம் திகதி ஜப்பானிலிருந்து சிங்கப்பூர் வந்து சேர்ந்தார். அவருடன் ராஷ்பிகாரியும் மற்றும் சிலரும் வந்தனர்.

சிங்கப்பூர் நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது. எங்கு நோக்கினும் மகிழ்ச்சி வெள்ளம் அலைமோதி வழிந்தது. வரவேற்பு வளைவுகளும், பதாகைகளுமாக நகரமே அலங்கார உருவெடுத்து நின்றது. சிங்கப்பூரில் வாழும் இந்தியர்கள் மட்டுமின்றி சீன, ஜப்பானிய, மலேசிய மக்களும் போசின் வருகைக்குக் கட்டியங் கூறி நின்றனர்.

### இ.தே. இராணுவம் அமைப்பு

சிங்கப்பூர் வந்து சேர்ந்ததும் முதல் வேலையாக இந்திய தேசிய இராணுவத்தைச் சீர்திருத்தி அமைத்தார். ஜப்பானில் ராஷ்பிகாரி போசினால் அமைக்கப்பட்டிருந்த படையையும் வரவழைத்து இத்துடன் சேர்த்துக் கொண்டார். பிழைப்பிற்காகச் சிங்கப்பூரில் குடியேறி இருந்த இந்தியர்களையும் புதிதாகச் சேர்த்து ஒரு பெரும் படையை உருவாக்கினார். அப்படைக்குத் துப்பாக்கி சுடுவது முதல் எல்லாவிதப் பயிற்சிகளும் அளிக்கப்பட்டன.

சிங்கப்பூரில் இந்தியர்களில் வங்காளியரும் தமிழர்களும் பெரும்பாலோர். இவ்விருவரில் சுபாசின் படையில் பெரும் பங்கேற்றவர்கள் வங்காளியர்களைவிடத் தமிழர்களே! கடைசி வரை, தமிழர்கள்தான் நேதாஜியின் செயலுக்கெல்லாம் பக்கபலமாகவும் இருந்திருக்கின்றனர் என்பது தமிழர்களாகிய நமக்கெல்லாம் பெருமை தானே!

அதே ஆண்டு ஒக்டோபர் திங்கள் 21–ஆம் நாள் போஸ் சிங்கப்பூரில் சுதந்திர இந்தியாவைப் பிரகடனப்படுத்தினார். இந்தப் பிரகடனத்தை அங்கே திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் பலத்த கரவொலி எழுப்பி ஆதரித்தனர்.

### வீர உரை

போஸ் அங்கே திரண்டிருந்த வீரர்கள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் நீண்டதொரு வீர உரையாற்றினார். அவரது உரை பொய்க்கலப்பற்ற நிகழ்ச்சிகளின் தொகுப்புரையாக இருந்தது. அவரது உரையைக் கேட்ட ஒவ்வொரு வீரனும் தாய்நாட்டிற்காகச் செத்து மடிவதைப் பெரும் பாக்கியம் என்றே கருதிக்கொண்டான். படையில் சேர்ந்தால் சாகவேண்டிவரும் எனப் பயந்து ஒதுங்கியவர்கள் கூட 'என்னைச் சேர்த்துக்கொள்ளுங்கள்! என்னைச் சேர்த்துக்கொள்ளுங்கள்!' என ஓடோடி வந்தனர்.

சுதந்திர சர்க்கார் அமைத்துக்கொண்டதும் அதற்கு அவரே பிரதமராகவும் படைத் தளபதியாகவும் பொறுப்

*ஒரு ஜப்பான் அதிகாரி, இன்னொரு ஜப்பான் அதிகாரி ஆகியோரும் அவருடன் ஏறிக்கொண்டனர். ஆறு வாரங்கள் அந்த நீர்மூழ்கி பயணித்தது. எதிரிகளால் அதைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை.*

பேற்றுக்கொண்டார். பெண்கள் இலாகாவிற்கும் ஜான்சி ராணி மகளிர் படைப்பிரிவிற்கும், கேப்டன் லட்சுமி பொறுப்பேற்றிருந்தார். இப்பெண்மணி தமிழகத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### போர் அறிவிப்பு

சுதந்திர சர்க்கார் நிறுவப்பட்ட இரண்டு நாளைக்குப் பிறகு பிரிட்டன் மீதும் அமெரிக்கா மீதும் இந்தியா போர் தொடுத்து இருப்பதாய்ப் பிரகடனப்படுத்தினார். சுதந்திர சர்க்கார் மளமளவென்று வளர்ச்சி அடைந்தது. பல பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டன. புதிதாக நாணயங்கள் அச்சிடப்பட்டன; செய்தி இதழும் தொடங்கப்பட்டது.

### நிர்வாகம்

இந்திய சர்க்காரின் தலைமை அலுவலகம் சிங்கப்பூரிலிருந்து பர்மியத் தலைநகரான ரங்கூனுக்கு மாற்றப்பட்டது. இந்தியப் பகுதியில் நுழைவதற்குச் சிங்கப்பூரை விட ரங்கூனே வசதியாக இருந்ததால் அவ்வாறு செய்யப்பட்டது. 19 இலாகாக்கள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு ஊரிலும் உள்ள அரசுத் துறை அலுவலகங்கள் ஒவ்வொரு பகுதியைக் கவனித்துவந்தன.

அதன்படி *சிங்கப்பூரில் உள்ள அலுவலகங்கள்* கிழக்கு ஆசியாவில் உள்ளவர்களின் நலன்களைக் கவனித்து வந்தது. மலேயாவில் 76 அலுவலகங்களும், பர்மாவில் நூறும், தாய்லாந்தில் 26 அலுவலகங்களும் செயற்பட்டுவந்தன.

போஸ் அமைத்த சுதந்திர இந்திய சர்க்காரை, ஜப்பான், ஜேர்மனி, இத்தாலி ஆகிய நாடுகள் முதலில் அங்கீகாரம் செய்தன. அதன்பிறகு பர்மா, பிலிப்பைன்ஸ், மஞ்சுக்கோ, சையாம், குரோஷியா, அயர்லாந்து போன்ற நாடுகள் அங்கீகாரம் செய்தன.

[தொடரும்]

# நோயற்ற வாழ்வே...

## மனச்சோர்வு ஏன்?

எமது வாழ்வில் ஏதாவது ஒரு முறையாவது மனச்சோர்வினை உணர்ந்திருப்போம். மனச்சோர்வினைச் சந்திக்காத மனிதனே இல்லை என்றுதான் கூறவேண்டும். வருத்தம், தோல்வி, தாழ்வு மனப்பான்மை ஆகியன இந்த மனச்சோர்வின்போது சேர்ந்துவரும். நமக்கு இன்னல்கள் வரும்போது மனச்சோர்வு வருவது இயல்பான ஒன்றுதான். இது சிறிது நாட்களே நீடிக்கும். உளவியற்படி இதனை மனச்சோர்வு என்று கூற முடியாது. உளவியல், இதனை மனவருத்தம் என்ற வகுப்பிற்குள்ளேயே உள்ளடக்குகின்றது. ஆனால் மனிதனுடைய அன்றாட வாழ்வினைக் குழப்பும் வகையில் ஏற்படும் மனச்சோர்வுதான் இங்கு பிரச்சினைக்குரியதாகின்றது. இந்த மனச்சோர்வினால் தூக்கமின்மை, பசியின்மை, உற்சாகமின்மை போன்ற விளைவுகளும் ஏற்படலாம். குறிப்பிட்ட ஒரு விடயத்திற்காக ஏற்படும் மனச்சோர்வானது அவ்விடயம் அகன்றதும் அகலாவிடில் அந்நிலைமைக்கு ஆளானவர்கள் மனநல மருத்துவரை நாடவேண்டியது அவசியம். இல்லாவிடில் இது அவரை தீவிரமான மனச்சோர்வு நிலைக்கு இட்டுச்செல்லும். தீவிரமான மனச்சோர்விற்கு உட்படும் ஒருவர் தனது வாழ்வின் சந்தோசத்தையே முற்றாக இழந்துவிடுகிறார். தூக்கமின்மை குறிப்பாக அதிகாலையில் தூக்கமின்மை, பசியின்மை, நிறைகுறைந்து போவது, எதிலும் ஈடுபாடு இல்லாத தன்மை, பலவீனமான நிலை, குற்ற உணர்வு தலைதூக்கும் நிலை, ஆகிய நிலைகளுக்கு ஆளாகும் ஒருவர் தற்கொலை முயற்சியில்கூடத் துணிந்துவிடுவார். இதைவிட வேறொரு வகையான மனச்சோர்வு மனநோய் சார்ந்து வரும். இவ்வாறான மனச்சோர்வுக்கு உள்ளானவர்கள் யதார்த்த வாழ்விலிருந்து பிரிந்துசென்று குழப்பத்தில் வாழ்வார்கள். அவர்கள் தனது அன்றாட உணவுப் பழக்க வழக்கத்தையும் நிறுத்திவிடுவார்கள். தம்மிடம் யாரோ பேசுவதாகச் சொல்வார்கள். இவ்வாறு கூறும் அவர்கள் தமது மனதில் சில தவறான எண்ணங்களையும் வளர்த்துக்கொள்வார்கள். இந்த வகுப்பிற்குள் வருபவர்கள் கட்டாயமாக மனநலக் காப்பகத்தில் சேர்க்கப்பட வேண்டியவர்களாவர். மனச்சோர்வு விடயத்தில் நாம் ஒன்றை மட்டும் புரிந்துகொள்ள வேண்டும். மனச்சோர்வு பலவகையாக இருந்தாலும், இவ்வாறான மனச்சோர்வு எதனால் உண்டானதென பிரித்துச் சொல்லமுடியாதவாறு ஒன்றுக்கொன்று அதிக ஒற்றுமையுடன் இருந்துகொள்கின்றது.

மனச்சோர்வுக்கான காரணங்களைப் பார்த்தால் அவை பாரம்பரியம், உடல்நிலை மாற்றம், மனஇறுக்கம் தரும் மாற்றம், ஆளுமை மாற்றம் ஆகிய வகுப்புக்களாக அவை பிரிகின்றன. இதில் முதலாவதாக வரும் பாரம்பரியத்தை எடுத்துக்கொண்டால் குடும்பப் பாரம்பரியத்தில் உள்ள சிலருக்கு இது வழிவழியாக வருவதாக ஆய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப் பட்டுவருகின்றது. தந்தைக்கும் தாய்க்கும் மனச்சோர்வு இருந்தால் அது குழந்தைகளுக்கும் வர வாய்ப்பு உண்டு. இது இருதயக்கோளாறு , இரத்த அழுத்தம்போல பரம்பரைவழியாக வரும் தன்மைகொண்டதாகவும் கருதப்படுகின்றது. இரண்டாவதான உடல்நிலை மாற்றங்களை எடுத்துக் கொண்டால் உடலில் ஏற்படும் இரசாயன மாற்றங்களாலும், மூளையில் ஏற்படும் இரசாயன மாற்றங்களாலும் இது ஏற்படலாம்.

அடுத்ததாக மன இறுக்கம் தரும் மாற்றத்தினை எடுத்துக்கொண்டால்,

வாழ்வியலில் ஏற்படும் மாற்றங்கள், அதாவது பெண்களுக்கு மாதவிலக்கு நிற்கும் சமயம், குழந்தை பிறக்கும் சமயம், ஆண்களாயின் வேலையிலிருந்து ஓய்வு பெறும்போதும் மனச்சோர்வு ஏற்படுகின்றது. இறுதியான ஆளுமையை எடுத்துக்கொண்டால் ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்தன்மை உண்டு. ஆனால் ஒருவகையானவர்கள் தமது செயல் முறைகளையும் வாழ்க்கைப் பாதையினையும் மாற்றி வாழ்வார்கள். அதை மற்றவர்களும் பின்பற்றவேண்டும் என்று நினைப்பார்கள். ஆனால் மற்றவர்கள் அதனைப் பின்பற்ற மறுக்கும்போது இவர்கள் மனச்சோர்வுக்கு உட்பட்டு விடுவார்கள். இவ்வாறானவர்கள் மட்டுமல்ல, பிரியமானவர்களின் பிரிவு தொடர்ந்து தோல்வியைத் தழுவுதல், வாழ்க்கை கஸ்டமானது என்ற எண்ணம் ஆகியவை வலுவடைவதால் ஆளுமை சார்ந்த மனச்சோர்வு ஏற்படுகின்றது.

மனச்சோர்வுக்கு உட்பட்டவர்கள் உளவியல் மருத்துவரை அணுகுதல் வேண்டும். மனச்சோர்வுக்கு உள்ளானவரை குடும்பத்தாரும், நண்பர்களும் புரிந்துகொண்டு அவர்களை அன்புடன் உற்சாகப்படுத்த வேண்டும். தீவிரமான மனச்சோர்விற்கு உட்படுபவர்களுக்கு நவீன மருத்துவம் கைகொடுத்து அவர்களை குணமாக்குகின்றது.

### விலங்குக் கழிவுகளும் மருந்தாகும்

பெரும்பாலான பெண்களிற்கு மாதவிலக்கு ஏற்படமுன்னர் உடல் ரீதியான சில தாக்கங்கள் ஏற்படுகின்றன. இவற்றை பெண்கள் பொறுமையுடன் ஏற்றுக்கொள்வது அவர்களின் இயல்பு. ஆனால் தற்பொழுது இந்தச் சிக்கலுக்கும் வழி இருப்பதாக நிரூபணமாகியுள்ளது. இந்தச் சிக்கலுக்கான மருந்து விலங்குக் கழிவிலிருந்தே பெறப்படுகின்றது. ஆயினும் இந்த மருத்துவமுறையை பல நூற்றாண்டுகளாகப் பின் பற்றியது அமெரிக்கக் கண்டத்தின் பூர்வக் குடிமக்களாகிய செவ்விந்தியர்களே. கருவுற்ற பெண்குதிரையின் சிறுநீரை செவ்விந்தியப் பெண்கள் பருகி இந்தச் சிக்கலிலிருந்து மீண்டிருக்கின்றனர் என்னும் அவர்களின் இந்த இரகசியம் தற்பொழுது ஊசி மருந்தாகவும், வில்லைகளாகவும் வந்துவிட்டது. கருவுற்ற பெண்குதிரையின் சிறுநீரில் காணப்படும் வேதியல்கூறுகள் பிரிக்கப்பட்டு ஊசி மருந்தாகவும், வில்லைகளாகவும் மாற்றப்படுகின்றது. இம் மருந்துகள் இன்று பல பெண்களிற்கு பலனைக் கொடுத்துவருகின்றது.

# முறியாத பனை

## காலத்தைப் பதிவுசெய்து 20ம் யோன் எழுதுவது

கருணையினால் அல்ல - கவனியுங்கள்
கருணையினால் அல்ல - கடமையினால்
கேட்கிறோம் - கேளுங்கள் ஏது செய்தோம் நாம்?
கொஞ்சம் நில்லுங்கள்
பதில் சொல்லுங்கள். ஏது செய்தோம் நாம்?
எம் கடமைக்கு அப்பால் கவனம் பிசகி இருந்தோமா?
எமது கட்டுப்பாட்டுக்கு அப்பால் எதனையும் விட்டுக் கொடுத்தோமா?
*விட்டுக் கொடுத்தல் எங்கள் வரலாற்றில் கிடையாது.*
*தட்டிக் கேட்போம்-தவறுதான் அது எனில்*
*குட்டித் திருத்துவோம் - குற்றம்தான்*
*எனில் கொஞ்சமும் இரங்கோம் - வெட்டி*
*விழுத்துவோம். வீறு கொண்டு எழுவோம்.*
வீறுகொண்டு எழுந்தோம் - அதுதான் நடந்தது.
அதற்கு அப்பால் ஏதும் செய்தோமல்லோம்.
அப்பாவி என்போரை நாம் அல்லாட வைக்கவில்லை -
தப்பாக ஏதும் செய்தோரை நாம் விட்டு
வைக்கவில்லை - அதற்கு அப்பால்
அதிகாரம் செய்தோரை, அநியாயம் செய்தோரை,
அட்டூழியம் செய்தோரை, அடக்கி வைத்தோரை
நாம் சும்மா விட்டு வைக்கவில்லை.
*எம்மீது தூசி விழுந்ததெனில் துடைத்து*
*விடுவோம் - பாசி படர்ந்ததெனில் பற்றி*
*எறிவோம் - நாசம் செய்தவரெனில்,*
*நாம் சும்மா விடுவோமா? நாசமறுப்போம்*
*நயவஞ்சகரை விடோம்.*
நாசம் தானே நடந்தது! இல்லையா?
பாசம் பெருகியது போல் தான் பகர்ந்தனர் -
வேசம் அதுவென்று விளங்க எத்தனை
நாள் பிடித்தன. அதற்கிடையில் மோசம் போனோமே!
எண்ணிலடங்கா உயிர்கள் சரிந்தனவே!
**சாவை நோக்கி நாம் சரிந்தோமே!**
பாவம் என்று எமக்கிரங்க ஆர் இருந்தனர் -
*எவரும் இரங்குவார் என்று நாம் ஏன்*
*ஏங்கவேண்டும்? எதிர் பார்க்க வேண்டும்?*
*நம் பசிக்கு நாமே உண்ண வேண்டும்.*
*நம் துயருக்கு நாமே அழவேண்டும்.*
*நம் தூக்கத்திற்கு நாமே உறங்கவேண்டும்.*
*நம் தாகத்திற்கு நாமே தண்ணீர் அருந்த வேண்டும்.*
*நம் வாழ்விற்கு நாமே வகை செய்ய வேண்டும்.*
நமக்கென்று இங்கொருவர் இல்லை. அவரவர்
பாடு அவரவருக்கு - அவரவர் கடமை அவரவர்
செய்கிறார் - நமது வேலை நமக்கானது - நமது
வேலையைத்தான் நாம் இப்போ செய்கிறோம் - நம்
தலையில் இடி விழுகிறபோது நாம்
தாங்குகின்றோம் - நம் காலின்கீழ்
குழி விழுகிறபோது - நாம் தாண்டுகின்றோம்
கடல் பெருக்கெடுத்து நம்
கரை அரிபடுகிறபோது - நாம் தடுக்கின்றோம்
மலை பிளந்து மண்ணை விழுங்குகிறபோது,
நாம் முண்டு கொடுக்கிறோம்
*காட்டு விலங்குகளிலிருந்து கடிபடாதிருக்க*
*நாமே பாதுகாப்பு தேடுகிறோம் - நாட்டு*
*மிருகங்களிலிருந்து நாமே தப்புவதற்கு*
*செய்ய வேண்டியதை செய்ததில் தவறு*
*எப்படிக் காண்பர்?*
ஞாபகம் கொள்ளுங்கள் மார்ச் 24ம் திகதி
**1990 – மார்ச 24ம்** திகதி இறுதித்துளிரும்
நம் மண்ணை விட்டு வெளியேறியது.
**1987– யூலை 27** அதனை நன்றாக
ஞாபகம் கொள்கிறோம் - அனைவருக்கும்
தெரிந்தநாள் அது - இரும்பு விலங்குடன்
இன்னொரு இரும்பு விலங்கினைப்
பூட்டியநாள் - அந்த நாளை ஞாபகம் கொள்கிறோம் -
*அப்போது சோளகம் வீசியது அல்லவா?*
*சோளகத்தின் பிற்கூறு அது - இறுதியில்*
*சுழற்சி அது என்று இறுமாப்புடன்*
*வீசியது. தலையிலும் மண், கண்ணிலும் மண்,*
*வாயிலும் மண் போட்டது அது -*
*கடல் சடென கொந்தளித்தது*
*சடக்கென அமைதியுமாகிப் போனது*
*நாம் அப்போ நம்பினோம் -*
எதைத்தான் நாம் நம்பியிருக்கவில்லை.
இடர்ப்பட்டோமே! இறுதி நாட்கள்
அவை என்று கண்டோமே - இனி
இருக்க இயலாது, இறப்புத்தான் என்று
நொந்தோமே! செல்வச் சந்நிதியான்
தன்னையே காத்துக் கொள்ள முடியாக்
காலம் அது. **1987** மே–யிலிருந்து
நாய்போல் அலைந்தோமே! உடைந்தோமே!
*வடமராட்சியில் இருந்து வந்தவர்களே கூறுங்கள்*
*உங்கள் வாழ்வில் அந்த நாட்களில்*
*என்ன நடந்தது என்று கூறுங்கள்.*
*வடமராட்சி வரண்டது. வளம் இல்லாதது -*
*ஆனால் வளம் இருந்தது. - மகத்தான வளம்*
*மனித வளம் அது.*
வளங்கள் அத்தனையும் இழக்கும்படியாக
வந்தது. கோயில் கோயிலாகத் திரிந்தோம்
குளம் குளமாக மடிந்தோம் - எமது மண்
எமக்கில்லாது போயிற்று - வேற்று மொழிக்
கூச்சல் - இரத்தம் பிசுபிசுத்த சப்பாத்துக் கால்கள்...
விரல் நுனியில் விவகாரம்
கண் தெறிப்பிலும் குரூரம் - நாம்
அலைந்தோம் - உலைந்தோம், அல்லாடிப்போனோம்!!
ஆயிரக்கணக்கில் ஆட்களை
இழந்தோம்.
*அதனால் தான் 1987 யூலை 27இல்*
*எழுதப்பட்ட ஒப்பந்தத்தின் முன்*
*அந்த நாட்களில் - 1987 யூன் மாதமா?*
*அந்த நாட்களில் ஒரு பறவை வந்ததே -*
*பறந்து வந்ததே - அரிசி போட்டதே*
*பருப்பு போட்டதே - மூட்டையாய்*
*கொட்டியதே - பத்துக் குடும்பத்திற்கும்*
*பத்தாது - என்றாலும் வயிறு குளிர்ந்ததே*
வந்தது குண்டர் படையல்லர்
தொண்டர் படை என்று வயிற்றில்
பால் வார்த்ததே! பசுஞ்சோலை
பூத்ததே என்று பார்த்திருந்தோமே -
அதனால் தான் 1987 யூலை 27இன்
ஒப்பந்தத்தில் மகிழ்ந்திருந்தோமே!
மனசார வாழ்த்தி நின்றோமே!
*பாண் வரும், பருப்பு வரும் என்று*
*பார்க்கவில்லை - பால் வரும், பழம்*
*வரும் என்று பார்த்திருந்தோம்-*
மா வரும், மண்ணெண்ணெய் வரும்
என்று பார்த்திருக்கவில்லை. மாறாத
சோகம் தீரும் என்று காத்திருந்தோம்.
*மீன் வரும், தேன் வரும் என்று*
*காத்திருக்கவில்லை - மீண்டது வாழ்வு- மீண்டும்*
*வீசுவது வசந்தம் என்று பார்த்திருந்தோம்.*
அந்த நாளில் நாம் அநியாயம் செய்தோம்
அநியாயம் என்று தெரிந்துதான்
செய்தோம் - ஆடினோம், பாடினோம்
குதூகலித் தோடினோம் - கோயில்
கும்பிட்டோம் - வாழ்வு மீண்டதென்று
வணங்கினோம்.
**கல்வி கற்கும் காளையர்கள்**
**கருவி தூக்கி வந்தனர்**
**வெல்வதென்று சூளுரைத்தெம்**
**செல்வியர் எழுந்தனர்.**
கருவிகள் மீட்க எத்தனை காலங்கள்
சென்றன - எத்தனை உயிர்கள் பறி
போயின - கருவியை கைப்பற்றுவதற்காக
இரத்தம் சிந்திய காளையர் எத்தனை!
உயிரையே சிந்திய உத்தமர் எத்தனை?
*அத்தனையும் யோசியாது ஆயுதத்தை*
*ஒப்படைத்தோம் - ஒப்படைக்குமாறு*
*நிர்ப்பந்திக்கப்பட்டோம் - ஒப்படைக்கும்*
*போது ஒழுகியது கண்ணீர்த்துளி அல்ல*
*இரத்தத்துளி. கருவியைக் கைப்பற்றுவதற்காக*
*காலமாகிப்போன ஒவ்வொரு*
*வீரரும் நெஞ்சில் வந்து ஒட்டிச் சென்றார்கள்.*
கண்ணீர் துளிவிட்டு, கனன்றெழும்
துயர் அடக்கி, மண்ணில் புதையுண்ட
மாவீரரை மனதெண்ணி- ஒப்படைத்தோம்
ஓராயிரம் ஆயுதம் - **சோளகக்**
**காற்று சுமந்து ஊரெங்கும்**
**சொல்லித் திரிந்தது**
**அந்தச் சோகத்தை..**
மாமரமும் இலை சரசரக்க தன் வருத்தம்
தெரிவித்தது. பனையோ ஆடாது,
அசையாது
மௌனம் காத்தது. மகத்தான துயரை
தன்னுள் புதைத்தது.
*ஆயுதம் ஒப்படைத்தவுடன் அனைத்தும்*
*முடிந்ததா? அல்லவே - வளைந்துபோ*
*என்றது வல்லூறு - அல்லது*
*முறிந்து போவாய் என்றது அது -*
*வளைவதா? முறிவதா? வளைந்தால்*
*வாழ்நாள் முழுக்க வளைய வேண்டும்*
*முறிந்தால் மண்ணுள் ஆழப் புதைய*
*வேண்டும்.*
இரண்டும் அல்ல என்ற பின்தான்...
**எம் இருப்புக்கு உயிர்ப்பு வந்தது**
நெஞ்சு நிமிர்ந்து எழுந்தது **பனை!**
**முறியாது** என்று பகர்ந்தது
வாழ்வு நிலைக்கும் என்று வழிமொழிந்தது
எழுதப்பட்டது ஒப்பந்தம் அல்ல
எரிக்கப்பட்ட தீப்பந்தம் என்று
தெரிந்தது - கொட்டப்பட்டது மூட்டை
அரிசி அல்ல, கொட்டிக் கிடந்தது
வாய்க்கரிசி என்று அறிந்தது.
*அனைத்துக்கும் ஓர் முடிவு வந்தது,*
*அநியாயத்திற்கோர் அவலம் நேர்ந்தது.*
*எங்கள் வீதியை மறித்தவர் வீணர்*
*என்ற உணர்வு வந்தது - எங்கள்*
*வாசலில் நின்றவர் விரோதி என்ற*
*உணர்வு தெரிந்தது*
எங்கள் வீட்டிலும், வாசலிலும், வீதியிலும்
தோட்டத்திலும், ஆக்கிரமித்து நிற்க
இவர்கள் யார்? அக்கிரமம் செய்ய
இவர்கள் யார்? அந்நியராய்
வந்தவர் செய்த ஆய்க்கினை
பொறுக்க முடியா என்ற போர்க்குணம்
எழுந்தது - கிளர்ந்தனர் மனிதர் -
*கத்தியை நிலத்தில் குத்தி*
*கத்திக்கொண்டு ஓடியது அந்நியப்*
*படை. வெற்றியை தோளிற் சுமந்து*
*வீரஞ்செறிந்த போர் நிகழ்த்தியது*
*எங்கள் விடுதலைப்படை.*
திரும்பிய பக்கமெல்லாம் வெடி -
திகைக்க வைத்தபடி முகத்தில் அடி -
திணறியபடி ஓடியது அந்நியப்படை
காலடி வைத்தால் கண்ணிவெடி -
இந்தப் பெரிய படை இந்த வீரமாய்
இழந்ததே - அஞ்சி நடுங்கி, அனல்
தெறிக்க ஓடியதே! அப்போ தெரிந்தது
நம் வீரம் என்னவென்று - 'வெற்றி
மாலை சூடும் நாள் கிட்டவந்தது.
*'எத்தனை நாட்கள் எண்ணிப்பார்*
*இரண்டு வருடங்கள் எட்டு மாதங்கள்!*
*அந்நியப்படை ஆக்கிரமித்திருந்த காலம்*
*நாள் குறிக்கப்பட்டது, நமன் வரும்*
*தேதி தெரிந்தது. வந்தவர் வெளியேறிப்*
*போயினர் - ஆயிரக் கணக்கில் உயிர்களை*
*இழந்து அல்லாடிப் போயினர்.*
**1990 மார்ச 24** அது இறுதி நாள்
இறுதித்துளியும் இல்லாது போனநாள்
.............
.................
..................
**பொய் பேசித் திரிந்தாய்**
**போய் ஒழிக – பார்**
**கைவீசி நடப்பேன்**
**பூ மலர.**
பூ மலர்வதற்காக சில பூக்கள் மறைந்தன
அவர்களை மனதில் இருத்துவோம்
மீண்டும் தொடர்கிறோம்
கருணையினால் அல்ல, கவனியுங்கள்
கருணையினால் அல்ல, கடமையினால்
செய்கிறோம்!!


# NÆRKØB -DKS Video

Danmark பதரேஸ்சியா
மாநகரில் (Nærkøb) நியர்குய்ப் DKSVideo
ஸ்தாபனத்தாரின் மற்றும் இரு சேவைகள்

இடமாற்றம் 01.09.99 முதல் NÆRKØB ரவல்ஸ் கு Mony Exchance

புதிய முகவரி

NÆRKØB ரவல்ஸ் 5
Vestcenter,Venvsvej-10, 7000 Freclericia, Danmark.
தொலைபேசி: 75915840 - 75915841 / Fax: 75915842

# Nærkøb Travels®

*Nærkøb* Tvavels புதிய நவீன படுக்கை வசதிகள்
கொண்ட பஸ்சேவை - வாரம் 3 நாட்கள்

| | ஒருவழி | இருவழி |
|---|---|---|
| Danmark - London- | 540Kr | 890Kr |
| Danmark - Paris | 358Kr | 574Kr |
| Danmark - Hambvrg | 205Kr | 327Kr |

இலையுதிர்கால மலிவு பயணச்சீட்டுகள் October கடைசிவரை
பாரிஸ் சென்று அதே பஸ்சில் திரும்பிவர 398 Kr மட்டுமே
பிரான்ஸ் நாட்டில் இருக்கும் டிஸ்னிலான்ட்
(Disnny Land Paris) சென்று திரும்பிவர 6.78 Kr மட்டுமே
2 வயதிற்குமேல் 12 வயதுக்குட்பட்டவருக்கு 598 Kr மட்டுமே
உடன் தொடர்புகொண்டு ஆசனங்களைப் பதிவு
செய்துகொள்ளுங்கள்: 75915840 - 75915004
Fax 75915842 Fax 75915806

# Nærkøb Money Transfer

15 நிமிடங்களுக்குள் உங்கள் பணத்தை
அன்றைய வங்கி மதிப்பின்படி உலகில் எந்த
இடத்துக்கும் கொடுக்கவோ/
பெற்றுக்கொள்ளவோ முடியும்.
இந்த Money Exchange அரச அங்கீகாரம் பெற்ற
ஒரு நிறுவனம் என்பதை மிக மகிழ்ச்சியுடன்
அறியத்தருகிறார்கள்.

**இவ்வாரம் முதல் Oktober 30th திகதி வரை**
மலிவான விமானப் பயணச்சீட்டுக்கள்.
Copenhagen - Colombo - **3,200 Kr**
மட்டும் **(Tax 165 Kr)**
Copenhagen - Colombo - India
(திருவனந்தபுரத்திற்கு) -
**3800 Kr + Tax 185 kr**

# எதிர்பாராத வகையில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி



மேற்கிந்தியத்தீவுகள் சிம்பாவே அணிகளுக்கிடையில் போட் ஒப் ஸ்பெயின் (Port of Spain) நகரில் முடிவுற்ற முதலாவது டெஸ்ட்போட்டி யாருமே எதிர்பார்த்திராத முடிவுக்கு வழிவகுத்தது. முதலில் துடுப்பாடிய மேற்கிந்திய துடுப்பாட்ட வீரர்களை நசுக்கிப்போடுவதில் சிம்பாவே வீச்சாளர்கள் பக்குவமாக தமது பணியைச்செய்து முடித்தனர். 187 சொற்ப ஓட்டங்களைப் பெற்ற மேற்கிந்திய தீவுகளுக்கு பதில்கொடுக்க துடுப்பாடிய சிம்பாவேயும் துடுப்பாடுவதில் சிரமத்தை எதிர்நோக்கியது. ஆனால் அணித்தலைவர் அன்ரி புளோவர் நிதானமாக நிலைத்திருந்து ஆட்டமிழக்காமல் 113 ஓட்டங்களைக் குவித்ததால் சிம்பாவே 236 ஓட்டங்களைப் பெற்றது. முதல் இனிங்சைப்போன்று தனது இரண்டாவது இனிங்சையும் குறுகிய ஓட்டமான 147 இல் கோட்டைவிட்டது, மேற்கிந்திய தீவுகள். இந்நிலையில் சிம்பாவே 99 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்று வெளிச்சத்துக்கு வந்தது. வெறும் 99 ஓட்டங்களுக்காக 10 வீரர்கள் முழுமையாகத் துடுப்பாடலாம் என்பது சிம்பாவேயின் நிலைமை. இதேவேளை 99 ஓட்டங்களுக்குள் 10 வீரர்களையும் துடைத்துக்கொள்ள வேண்டும் என்பது ஒருசில மேற்கிந்திய வீச்சாளர்கள் மீதே சுமத்தப்பட்டது. முடிந்தவரை போராடுவதாக இரு அணிகளும் போர்க்களம் புகுவது போன்று மைதானம் புகுந்து மோதிக்கொண்டன. ஆரம்பத்தில் சில விக்கட்டுகள் வீழ்ந்தாலும் வெற்றி பெறும் தன்மை சிம்பாவேயின் பக்கம் இருந்தது. ஒரு கட்டத்தில் 57/ 5 எனக் காணப்பட்டபோதும் அம்புறூஸ், வோல்ஷ், றோஸ் போன்ற மேற்கிந்திய வீச்சாளர்கள் சளைக்காமல் தமது பணியைத் தொடர, பொலுபொலுவென மிகுதி 5 விக்கட்டுகளும் 6 ஓட்டங்களில் சரிந்தன. மொத்தத்தில் 63 ஓட்டங்களுடன் சிம்பாவே காலியாகிறது. எதிர்பாராத இம்மாற்றம் 35 ஓட்டங்களால் மேற்கிந்திய தீவுகளுக்கு வெற்றியைக் கொடுத்தது. முதல் இனிங்சில் 4 விக்கட்டுகளையும், இரண்டாவது இனிங்சில் 3 விக்கட்டுகளையும் வீழ்த்திய அம்புறூஸ் போட்டியின் திருப்புமுனைக்கு காரண கர்த்தாவாக இருந்தார் என்பதற்காக சிறந்தவீரன் என்று தெரிவு செய்யப்பட்டார்.

## மைக்கல் ஜோன்சனின் மூன்றாவது உலக சாதனை

200 மீற்றர், 400 மீற்றர் ஓட்டங்களில் உலக சாதனையைப் படைத்துள்ள அமெரிக்க ஓட்ட வீரன் மைக்கல் ஜோன்சன் 24.03.2000 அன்று தென்னாபிரிக்காவின் பிறிற்றோரியா நகரில் நடைபெற்ற 300 மீற்றர் ஓட்டத்திலும் தனது மூன்றாவது உலக சாதனையைப் பதிய வைத்துள்ளார். அவர் தனது மூன்றாவது சாதனைக்காக 30.85 செக்கன்களை எடுத்துக்கொண்டார். இதற்கு முன் இதே தூரத்தை அமெரிக்காவின் டனி எவர்ட்டும் கியூபாவின், றொபற்ரோ கெடன்ஸ்சும் சமனாக 31.48 செக்கன்களில் கடந்து சாதனையாளர்களாகத் திகழ்ந்தனர். 1996 ஒலிம்பிக்கின் தங்கப் பதக்கங்களைப் பெற்ற ஜோன்சன் 15.09.2000 சிட்னியில் ஆரம்பமாகும் ஒலிம்பிக்கிலும் அதனைத் தொடருவார் என்பதையே இம்முடிவு காட்டி நிற்கின்றது.



## மாவீரர் போட்டிகளுக்கான விண்ணப்பம்

ஜேர்மனியில் எட்டாவது ஆண்டாக நடைபெறவுள்ள மாவீரர் வெற்றிக்கிண்ணத்துக்கான விளையாட்டுப்போட்டிகளை நடாத்த ஜேர்மனி தமிழ் மாணவர் அமைப்பு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இவற்றில் மெய்வல்லுநர், மற்றும் தமிழாலய மாணவரிடையேயான உதைபந்தாட்டப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய இறுதிநாள் இம்மாதம் 31 ஆகும்.

மெய்வல்லுநர் போட்டிகளுக்கான விண்ணப்பங்களை ஒவ்வொரு நகரிலுள்ள தமிழாலயங்களுக்கூடாக அனுப்பலாம். இவற்றில் தமிழாலய மாணவர்களும், தனியாரும் கலந்துகொள்ளலாம். இப்போட்டிகளில் 5 வயது முதல் பெரியோர்வரை கலந்துகொள்ளலாம்.

கொடிகொடுத்து ஓடுதல், கூடைக்குள் பந்துபோடுதல், சாக்கு ஓட்டம், தடைதாண்டி ஓட்டம், 50மீ, 75மீ, 100மீ, 200மீ, 400மீ, 1500மீ ஆகிய ஓட்டப்போட்டிகளுடன் அஞ்சலோட்டமும் இடம்பெறும். அத்துடன் குண்டெறிதல் நீளம் பாய்தல், உயரம் பாய்தல் ஆகிய போட்டிகளும் இடம்பெறும். மாணவரிடையேயான உதைபந்தாட்டப்போட்டி மூன்று பிரிவுகளாக நடைபெறும். மேலதிக விபரங்களுக்கு ஜேர்மனி தமிழ்மாணவர் அமைப்புடன் தொடர்புகொள்ளவும்.

**தொகுப்பு: பொன். தாமோதரம்**

## சாதனைமேல் சாதனை படைக்கும் அவுஸ்திரேலியா அணி

ஒரு நாள் போட்டிகளில் தொடர்ச்சியாக வென்று சாதனை படைத்த அவுஸ்திரேலியா டெஸ்ட் போட்டிகளிலும் அதனை தொடர்கிறது. 27.03.2000 அன்று வெலிங்டனில் முடிவுற்ற நியூசிலாந்துக்கெதிரான இரண்டாவது போட்டியிலும் அவுஸ்திரேலியாவே வென்றது. இது தொடர்ச்சியான 9வது டெஸ்ட் வெற்றியாகும். 1920ம் ஆண்டு வார்விக் ஆம்ரோங் தலைமையில் 8 வெற்றிகளை தொடர்ந்து பெற்ற அவுஸ்திரேலியாவுக்கு ஸ்ரிவ் வோவ் தலைமையில் இது புதிய சாதனையாகும். முதலில் துடுப்பாடிய நியூசிலாந்து மிக இக்கட்டான 66/5 என்ற நிலையை எட்டியபோது, அஸ்ரல், ஹர்ன்ஸ் இருவரும் நிதானமாக ஆடி முறையே 61, 109 ஓட்டங்களை சேர்க்க முடிந்தது. பதிலுக்காடிய அவுஸ்திரேலியாவிலும் ஆரம்பத்தில் சில விக்கட்டுகள் சரிந்தபோதும் சிலெட்டர், ஸ்ரிவ்வோவ், மார்ஜன் சிறப்பாக ஆடி முறையே 143, 151, 78 ஓட்டங்களைப்பெற, அவுஸ்திரேலியா வலுவான 419 நிலையை அடைந்தது. மீண்டுமாடிய நியூசிலாந்து தலைவர் பிளமிங், ஹர்ன்ஸ் பெற்றமுறையே 60, 69 ஓட்டங்களால் 294ஐ அடைந்தது. வெற்றி பெறத் தேவையான 173 ஓட்டங்களை 4 விக்கட் இழப்புடன் பெற்ற அவுஸ்திரேலியா 6 விக்கட்டுகளால் வென்றது. ஆட்ட நாயகனாக சிலெட்டர் தெரிவானார்.

## சொந்த மண்ணில் சாதனையை முறியடித்த கொட்னி வோல்ஷ்



உலக கிரிக்கட் வரலாற்றில் அதிக டெஸ்ட் விக்கட்டுகளை வீழ்த்திய கபில் தேவின் சாதனையை கொட்னி வோல்ஷ் முறியடிப்பாரா என்ற எதிர்பார்ப்பை முறியடித்து புதிய சாதனையை இவர் ஏற்படுத்தியுள்ளார். கபிலின் 434 இலக்கிற்கு முடிவுகட்ட வேண்டுமானால் வோல்ஷ் இன்னும் 5 விக்கட்டுகள் சாய்க்கவேண்டிய நிலையில் சிம்பாவே மேற்கிந்திய தீவுகள் இடையான இரண்டாவது டெஸ்ட் ஜமேக்காவில் தொடங்கிவிட்டது. 38 வயதான வோல்ஷ் பிறந்த இடமான ஜமேக்காவில் சிம்பாவே அணியின் ஹென்றி ஒலங்காவின் விக்கட்டை வீழ்த்தியதன் மூலம் 435 விக்கட்டுக்களைப் பெற்று புதிய உலக சாதனையை தனது சொந்த மண்ணில் படைத்தார்.

## சூமாக்கர் மீண்டும் வெற்றி

இவ்வருடத்தின் இரண்டாவது கார் ஓட்ட சம்பியனான (Formula 1) பிரேசில் போட்டியில் மீண்டும் மைக்கல் சூமாக்கரே வெற்றி பெற்றுள்ளார். பறாறி ஓட்டுநரான சூமாக்கர் அவுஸ்திரேலியன் போட்டியின்போதும் வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. ஓட்டப் பாதையைத் தெரிவுசெய்து கொள்ளுமுகமாக நடைபெற்ற தெரிவுப்போட்டியில் 3ம் இடத்தை எடுத்துக்கொண்ட சூமாக்கர் 26.03.2000 அன்று நடைபெற்ற உண்மையான போட்டியின்போது தனது ஆரம்பத்தை மிகவும் வேகமான அதிரடியாக்கியதிலிருந்தே அவரின் வெற்றி வாசனை பரவ ஆரம்பித்தது. ஆரம்பத்தை 207.509 கிலோமீற்றர், மணிக்கு என உருவாக்கி சராசரியாக 200.403 கிலோமீற்றர் மணியில் ஓடி முடித்தார். முதலாவது இடத்தை மைக்கல் சூமாக்கர் தட்டிக்கொள்ள, பெனட்டன் ஓட்டுநர் ஃபிசெல்லா இரண்டாம் இடத்தையும், யோர்டன் ஓட்டுநர் ஃபிறன்சன் 3ம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். தற்போதைய சம்பியனான ஹக்கினன் இப்போட்டியிலும் இடையில் விலகிக்கொண்டு விட்டார். பிரேசில் போட்டியின் பின்பு ஓட்டுநர்கள், கார்கள் கொண்டுள்ள புள்ளிவிபரம் இதோ



| | ஓட்டுநர்கள் | புள்ளிகள் |
|---|---|---|
| 1. | மைக்கல் சூமாக்கர் — | 20 |
| 2. | ஃபிசெல்லா — | 6 |
| 3. | பார்ச்சிலோ — | 6 |
| 3. | றோல் சூமாக்கர் — | 5 |
| 5. | ஃ பிறன்சன் — | 4 |

| | கார்கள் | புள்ளிகள் |
|---|---|---|
| 1. | ஃபறாறி — | 26 |
| 2. | பெனட்டன் — | 8 |
| 3. | வில்லியம்ஸ் — | 7 |
| 3. | யோர்டன் — | 7 |
| 5. | பார்கொண்டா — | 4 |

# அன்டனோவ்-12 விமானம் நீர்கொழும்பில் வீழ்ந்தது

(27.03.00)

ரஷ்யத் தயாரிப்பான அன்டனோவ்-12 சரக்கு விமானம் தாய்லாந்தின் பாங்கொக் நகரில் இருந்து கட்டுநாயக்கா விமான நிலையம் வந்தவேளை, நீர்கொழும்பில் வீழ்ந்து நொருங்கியுள்ளது. இவ்விமானத்தை செலுத்தி வந்த இரு ரஷ்ய விமான ஓட்டிகளும் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் தெரியவருகிறது. கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்குவதற்கு சற்று முன்னரே மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்கு மேல் விழுந்து நொருங்கியுள்ளது.

பாங்கொக்கில் இருந்து விமானம் கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத்திற்கு துணிப்பொதிகளை ஏற்றிவந்ததாகவும் கூறப்படுகிறது. இவ்விமானம் வீழந்ததால் சில குடிமக்கள் கொல்லப்பட்டும் காயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.

# 30, 40 புலிகளே உள்ளனர்! இது இராணுவக் கணக்கு

(27.03.00)

பளைப்பகுதியில் ஆனையிறவுப் பெருந்தளத்தின் விநியோகப்பாதை விடுதலைப் புலிகளினால் துண்டாடப்பட்டதனை சில மணிநேர மௌனத்திற்குப் பின்னர் சிறீலங்கா இராணுவ வட்டாரங்கள் ஒத்துக்கொண்டுள்ளன. இதுபற்றி நடவடிக்கைத் தலைமைச் செயலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பொன்றில், பளைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் 11 படையினர் கொல்லப்பட்டு, 23 பேர் காயப்பட்டதாக மாத்திரம் குறிப்பிட்டுள்ளதுடன், விநியோகப்பாதையை துண்டாடியுள்ள விடுதலைப் புலிகளின் அணிகளில் 30 தொடக்கம் 40 வரையிலான பேரே இருப்பதாகவும் குறிப்பட்டிருக்கிறது.

## கொழும்பில் கூடிய 25 நாடுகளின் இராணுவ அதிகாரிகள்

பிரித்தானியா, ரஷ்யா, இஸ்ரேல், சுவீடன், நோர்வே, பாகிஸ்தான் உட்பட 25 நாடுகளின் ஓய்வுபெற்ற இராணுவ ஜெனரெல்கள், மற்றும் அட்மிரல் அதிகாரிகள், எயார் மார்சல் அதிகாரிகள் இவ்வாரம் கொழும்பில் கூடி மாநாடு ஒன்றினை நடாத்துகின்றனர். உலகளாவிய ரீதியில் இராணுவத்தின் பங்கினை போரற்ற விதமாக செலுத்தப்படவேண்டும் என்ற கருப்பொருளுடன் இம்மாநாடு நடாத்தப்படுகின்றது. சிறீலங்காவில் இருந்தும் சில பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்துகொள்கிறார்கள்.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

## ஐ.நா.....

செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஞாயிறன்று தமிழர் ஒருங்கிணைப்புக்குழு காரியாலயத்தில் இருந்து புறப்படும் பேருந்தில் பயணம் செய்ய விரும்புபவர்கள் உங்கள் பதிவுகளை முற்கூட்டியே தமிழர் ஒருங்கிணைப்புக்குழு காரியாலயத்தில் பதிவுசெய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். தொடர்புகளுக்கு 01.43.58.11.42.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

## சொந்த மண்ணில்....

குட்டி, இந்து மதகுருமார் ஒன்றியத் தலைவர் உட்பட பலர் யுத்தத்தை நிறுத்தி மூன்றாம் தரப்புடன் சிறீலங்கா அரசு பேச்சில் ஈடுபடவேண்டும் என்பதனை வலியுறுத்தினார்கள். பேரணியின் போது ஐ.நா அபிவிருத்திட்ட, சர்வதேச செஞ்சிலுவை சங்க யாழ்வதிவிடப் பிரதிநிதிகளிடம் மகஜர்கள் கையளிக்கப்பட்டன. அதன் பின்னர் யாழ்செயலகத்திற்கு சென்று யாழ் அரச அதிபரூடாக சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவிற்கு அனுப்புவதற்காக மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க, இப்பேரணியில் தமது துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்க தமிழ் குழுவைச் சேர்ந்தவர்கள் முயன்றுள்ளனர். எனினும் மக்கள் அதை வாங்க மறுத்ததையடுத்து, பேரணி ஏற்பாட்டாளர்கள் துண்டுப்பிரசுரத்தை பேரணியில் விநியோகிக்கவேண்டாம் என தெரிவித்துள்ளனர்.





நொதேர்ன் கிரிக்கெட் கழகத்தினரால் கழக வளர்ச்சிக்காக நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டில் வெற்றி பெற்றோர் பின்வருமாறு:

முதலாவது பரிசாக கனடா விமான பயணச்சீட்டு
**திரு. G. Luxman**
இரண்டாவது பரிசாக D.V.D
**செல்வி நர்மிசியா**
மூன்றாவது பரிசாக Panasonic Micro Owen
**Sri Mahall.**


## பாரிஸ் அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலய சங்காபிஷேகம்

பாரிஸ் அருள்மிகு முத்துமாரி அம்மன் 4வது ஆண்டு கும்பாபிஷேக தின விசேட சங்காபிஷேகம் எதிர்வரும் 01.04.2000 சனிக்கிழமை பகல் 12 மணிக்கு நடைபெறும். சங்காபிஷேகத்தினைத் தொடர்ந்து விஷேட பூசை அன்னதானம் நடைபெறும். மாலை 6 மணியளவில் அருள்மிகு முத்துமாரி அம்பாள் திரு ஊஞ்சல் வைபவம் இடம்பெறும் என்பதனை அடியார்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்
ஆலய பரிபாலன சபை

## 8ம் ஆண்டு நினைவு வணக்கம்

துளிர்ப்பு : 24.05.1944



உதிர்வு : 03.04.1992

### திருமதி மகேஸ்வரி பிரான்சிஸ் சேவியர்

அம்மா,
வருடம் ஒரு முறை
வசந்தம் வரும். போகும்.
பருவம் மாறும்.
இளவேனிற் காலத்
தென்றல் தீண்ட
புதிதாய் துளிர்க்கும் மரங்கள் – இது
வசந்த காலத்தின் தொடக்கம்.
ஆனாலும் அம்மா,
அந்த ஏப்பிரல்
எமக்கு மட்டும் எப்படி
இலையுதிர் காலமானது?
எட்டு ஆண்டுகள் அம்மா!
எங்கள் முற்றத்தில் மட்டும்
உங்கள் தழுவலை எதிர்பார்த்து
மீண்டும் துளிர்க்கக் காத்திருக்கும்..

கணவர்:- பிரான்சிஸ் சேவியர்
பிள்ளைகள்:- நிரஞ்சனா, நிரஞ்சன், சஞ்சீவ்
மருமக்கள்:- ஜெர்த்தி, ரவீந்திரன்.
பேரப்பிள்ளைகள்:- ஈழமன் கரிகாலன், கெவின்.

Pub.


தங்க மாளிகை ஜுவல்லர்ஸ்

திங்கள் தவிர்ந்த வாரத்தில் ஒவ்வொரு நாட்களும் காலை 10.30 மணிமுதல் மாலை 6.30 மணிவரை திறந்திருக்கும்

மங்கையர்க்கொரு மாளிகை தங்க மாளிகை

Thanga Maligai Jewellers
Amalia House

276, Lewisham High Street,
London,
SE13 6JZ.

Tel: 020 8690 3636
Fax: 020 8690 4157

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The Broadway, Southall, Middx. T.P: 0181/813 91 26
Pub

# 'சொந்தமண்ணில் வாழவிடுங்கள்'

## யாழில் பல்லாயிரக்கணக்கானோர் பேரணி

(26.03.00)

சிறீலங்கா அரச படைகளின் ஆக்கிரமிப்பில் உள்ள யாழ்குடாநாட்டில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்ட மாபெரும் பேரணியொன்று நேற்று இடம்பெற்றது. சுமார் 60ற்கும் மேற்பட்ட அமைப்புக்கள் இணைந்து இப்பேரணியை நடாத்தியுள்ளன. சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் ஆலைய முன்றலில் ஆரம்பமாகிய பேரணி, மதியம் 12 மணியளவில் யாழ். விளையாட்டரங்கில் நிறைவுற்றது. பேரணியில் மதகுருமார்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தொழிலாளர்கள், பொதுமக்கள் என சுமார் ஏழாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சொந்தமண்ணில் நிம்மதியாக வாழ்வதற்கு யுத்தத்தை நிறுத்தி மூன்றாம் தரப்பின் மத்தியத்துடன் பேச்சுவார்த்தையில் அரசு இறங்க முன்வர வேண்டும் என இவ் ஊர்வலத்தில் கலந்துகொண்ட பொதுமக்கள் வலியுறுத்தினர். சிறீலங்கா அரச படைகளின் நடவடிக்கைகளுக்கும், மக்களின் கலாச்சாரங்களை சீரழிக்கும் நடவடிக்கைகளுக்கும், அரசின் தடைகளுக்கும் எதிராக கோசங்களையும், பதாகைகளையும் தாங்கியவாறு சென்ற மக்கள், வன்னி மக்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளுக்கு எதிராகவும் குரல்கொடுத்தனர். இப்பேரணிக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் யாழ். வர்த்தக நிலையங்கள், தனியார் கல்லூரிகள், மற்றும் தொழில் நிறுவனங்கள் என்பன தங்கள் நிறுவனங்களை மூடி இப் பேரணிக்கு ஆதரவு தெரிவித்தனர்.

பேரணியின் முடிவில் யாழ். ஆயர் வணபிதா தோமஸ் சௌந்தரநாயகம், சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான உபதலைவர், நல்லை ஆதீன முதல்வர், சிவதமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## ஐ.நா. நோக்கிய பயணம் பிரெஞ்சுப் பணியகம் அழைப்பு

(27.03.00)

எதிர்வரும் திங்களன்று (03.04.2000) ஐ.நா.வின் முன்றலில் நடைபெறவுள்ள மாபெரும் பேரணியில் கலந்துகொள்ளுமாறு விடுதலைப் புலிகளின் பிரெஞ்சுப்பணியகம் அழைப்பு விடுத்துள்ளது.

தமிழீழப் போராட்டத்தை அங்கீகரிக்கக் கோரியும், தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்பதை சர்வதேச உலகிற்கு மீண்டும் ஒரு முறை அறிவிப்பதற்கான கடப்பாடு புகலிடத் தமிழர்களுக்கு இருப்பதால் இப் பேரணியில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பிரெஞ்சுப் பணியகம் அழைப்பு விடுத்துள்ளது. பேரணியில் கலந்துகொள்பவர்களுக்கான பிரயாண ஒழுங்குகள்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## கொழும்பில் தமிழரை கண்காணிக்க சிங்களக் குழுக்கள்

(27.03.00)

கொழும்பு நகரில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் கொழும்பு நகரப்பாதுகாப்பிற்கு என சிறீலங்கா பொலிசார் புதிய பாதுகாப்பு ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்த உள்ளனர். இன்னும் ஓரிரு தினங்களில் நடைமுறைக்கு வரவுள்ள இப்புதிய திட்டத்தின்படி, கொழும்பு நகர் ஆறு பகுதிகளாக பிரிக்கப்பட்டு அப்பகுதிகளின் பாதுகாப்பினை கண்காணிப்பதற்கென சிங்களவர்களை உள்ளடக்கிய விழிப்புக்குழுக்களும் அமைக்கப்பட உள்ளன. புதிய விழிப்புக்குழுக்கள் அப்பகுதியில் உள்ள தமிழர்களின் நடமாட்டங்களை கண்காணித்து அதுபற்றி பொலிசாருக்கு உடனுக்குடன் தகவல்களை வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

பொலிசாரின் இப்புதிய நடைமுறையின்படி கொழும்பில் வாழும் தமிழர்கள் அனைவரும் கண்காணிக்கப்படவுள்ளனர். இச்செய்தி வெளியாகிய நேரத்தில் இருந்து கொழும்புப் பகுதியில் வசிக்கும் தமிழர்களிடையே மேலும் அச்சம் தோன்றியுள்ளது.

## சந்திரிகா பொய்-II

(27.03.00)

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களுக்கு நோர்வே அரசு மேற்கொண்ட மனிதாபிமான உதவிகளுக்கு தன்னிடம் நோர்வே அரசு முன்னனுமதி பெற்றதாக சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா பொய் கூறியதும் அதற்கு நோர்வே வெளிவிவகார அமைச்சு மறுப்புத் தெரிவித்ததும் தெரிந்ததே.

மீண்டும் கடந்தவாரம் இந்னொரு பொய்யினை சந்திரிகா சொன்னது அம்பலமாகியுள்ளது. விடுதலைப் புலிகளும் ஐக்கிய தேசிய கட்சியினரும் இணைந்து செயற்படுவதாக 'தூர கிழக்கு பொருளாதார நோக்கு' என்ற சஞ்சிகைக்கு இம்மாதம் மூன்றாம் திகதி சந்திரிகா குறிப்பிட்டிருந்தார். கடந்தவாரம் ஐக்கிய தேசிய கட்சியினர் ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்தபோது இவ்விடயம் பற்றி பிரஸ்தாபித்த வேளை, தான் அப் பேட்டியினை கடந்த டிசெம்பர் மாதமே அச் சஞ்சிகைக்கு அளித்ததாகவும் ஆனால், சரியான நினைவு இல்லையெனவும் குறிப்பிட்டிருக்கிறார்.

இவ்வேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் அத்துக்கோறளை குறுக்கிட்டு இப்பேட்டி, கடந்த மூன்றாம் திகதி அளிக்கப்பட்டதாக உங்களது உதவிச் செயலாளர் மகாநாம என்னிடம் கூறினாரே எனக் கூறி அருகிலிருந்த அவரது உதவிச் செயலாளரையும் சுட்டிக் காட்டினார். உடனடியாக சந்திரிகா தனக்குச் சரியாக நினைவு இல்லையெனக்கூறி சமாளிக்க, அவரது உதவிச் செயலாளரும் செவ்வி அளிக்கப்பட்ட திகதி பற்றி தான் பரிசீலித்துச் சொல்வதாக கூறி சமாளித்திருக்கிறார்.

## 7 இராணுவ உயரதிகாரிகளுக்கு கட்டாய ஓய்வு

(27.03.00)

சிறீலங்கா இராணுவத்தின் கடந்த ஐம்பது வருடகால வரலாற்றில், ஏழு உயர் இராணுவ அதிகாரிகள் ஒரே தடவையில் கட்டாய ஓய்விற்கு அனுப்பப்பட்ட நிகழ்வு கடந்தவாரம் நிகழ்ந்துள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் விடுதலைப் புலிகள் வன்னியில் மேற்கொண்ட ஓயாத அலைகள்-3 இராணுவ நடவடிக்கையின்போது இராணுவத்திற்கு ஏற்பட்ட மிகமோசமான தோல்விக்கு அதிகாரிகளே காரணம் என்பதை வன்னியின் தோல்வி குறித்து ஆய்வுசெய்த இராணுவ விசாரணைக்குழு குறிப்பிட்டுள்ளதாலேயே இவர்களுக்கு சந்திரிகா கட்டாய ஓய்வு வழங்கியுள்ளார்.

கஜபாகு படைப்பிரிவின் பிரதம கட்டளையதிகாரியான மேஜர் ஜெனரெல் காமினி குணசேகர, ஓயாத அலைகள்-3 இடம்பெற்றபோது வன்னி மாவட்ட கட்டளை அதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரெல் வசந்தப் பெரேரா, பிரிகேடியர் லங்கா அத்துல ஆகியோர் கட்டாய ஓய்வு வழங்கப்பட்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

K.R.S. ENTERPRISES
கே.ஆர்.எஸ். என்ரபிறைசெஸ்

537 High Road,
Wembley
Middlesey, HA0 2DJ,
Tel: 0181- 9024590
நிர்வாகி: G.சதீஸ்
Pub

- Leela அரிசிமா - 89P ல் இருந்து
- Kingfish- 2.59 ல் இருந்து
- நீலக்கால் [துப்பரவு செய்த] நண்டு £3.89 ல் இருந்து
- 20 Kg Broken Basmath £7.99 இலிருந்து
- CD 2.99 இல் இருந்து - Audio 99 இல் இருந்து
- நல்லெண்ணை £3.49; 1/2 போத்தல் £1.79
- அனைத்துத் தொலைபேசி அட்டைகளும் 10% விலைக் கழிவில்

£20 இற்கு மேல் கொள்வனவு செய்தால் 1 Kg லீலா அரிசிமா இலவசம்!
லீலாவின் அனைத்துத் தயாரிப்புக்களும் மலிவு விலையில்!!